# பரராசசேகரம்

## சுரரோக நிதானம்

மூலம்

ஏழாலை

ஐ. பொன்னையபிள்ளை

# விளக்கப் பொழிப்புரை

அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்திய சங்க
''வைத்தியன்'' சஞ்சிகையில்
1949 மார்கழி முதல் வெளிவந்தது

மீள்பார்வை

வைத்தியகலாநிதி

**வ. சிவப்பிரகாசம் (D. A. M.)**

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்
1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரராசசேகரம்

## நான்காவது

# சுரரோகநிதானம்

மூலநூற்பதிப்பாசிரியர்
ஏழாலை ஐ.பொன்னைய பிள்ளை
1932.

பொழிப்புரை
1949 ல் "வைத்தியன்" சஞ்சிகையில்
வெளிவந்தது.

மீள் பார்வை
வைத்தியகலாநிதி வ. சிவப்பிரகாசம்.

இலங்கா சித்த ஆயுள் வேத வைத்தியக்கல்லூரி
யாழ்ப்பாணம்.
1999.

++++++++++

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pararaja Sekharam
Jvara Roga Nidhanam

First Edition : 1932
Commentary : 1949

© Lanka Siddha Ayurvedic Medical College
Jaffna, Sri Lanka.

ISBN 955 – 8248 – 02 – 9

Typeset by : Institute Of Informatics Studies
100 Clock Tower Road, Jaffna.

Printed by : **GANGAI** Computer Printers.
Navalar Road, Jaffna.

Published by : Dr. (Mrs.) K. Paramashivam
Principal.
Lanka Siddha Ayurvedic Medical College
127, ~~Navalar~~ Stanley Road,
Jaffna, Sri Lanka.
Price: Rs.110.

Pages: XIV+97

With the Aid of the
Dharmadevi Trust Fund

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

யாழ்ப்பாணத்து மருத்துவ மரபின் இருமணி விளக்குகளில் முதற்கண் வைத்து எண்ணப்படுவது பரராசசேகரம். அதில் கெர்ப்பரோகநிதானம், பாலரோகநிதானம் ஆகிய இரு பகுதிகளை மீள் பார்வை செய்து வெளியிட்டோம்.

சுரரோகநிதானமும் மருத்துவ மாணவர்களுக்கு அவசியம் வேண்டியிருந்ததால், அதனை இப்பொழுது வெளியிடு கிறோம்.

மூலப்பிரதி கிடைப்பதற்கு அரிதாயிருந்தது. நாம் அல்லல் உற்றபோது, எமது கல்லூரியின் மாணவமணிகளுள் ஒளி மிக்கவரும், பகுதிநேர விரிவுரையாளருமான வைத்திய கலாநிதி A.G. வீரசிங்கம் அவர்கள் தமது பிரதியைத் தந்துதவினார்கள்.

எமக்கு என்றும் உறுதுணையாய் நிற்கும் வைத்திய கலாநிதி வ.குஹமூர்த்தியவர்கள் தமது "வைத்தியன்" சஞ்சிகைத் தொகுதிகளைத் தந்து சுரரோகநிதானம் பொழிப்புரை, விளக்கக் குறிப்புகளுடன் வெளிவர வழிவகுத்தார்.

வழக்கம் போல வைத்திய கலாநிதி வ.சிவப்பிரகாசம் அவர்கள் மூலபாடத்தையும், உரை, விளக்கங்களையும் மீள்பார்வைசெய்து, குறிப்புக்களை எழுதி உதவினார்கள்.

இவ்வெளியீட்டுக்கு உதவும் வகையில் தம் தாயார் பெயரால் ஏற்படுத்திய "தர்மதேவி நினைவுநிதிய" த்தின் மூலம் பதிப்புச் செலவை திருமதி. மைத்திரேயி சபாரத்தினம் பிரேம்ராஜ் ஏற்றார். திரு. ச. பிருகதீஸ்வரன் Institute of Informatics Studies இயக்குனர் திரு. கு. விக்னேஷ் மூலம் கணனிப்பதிவுக்கு ஏற்பாடு செய்தார். ஏழாலை மருத்துவ வள்ளல் ஐ.பொன்னையபிள்ளையின் சகோதரி வழிவந்த சாந்தி அச்சக உரிமையாளர் திரு.தி.நாகரத்தினம், கங்கை அச்சக உரிமையாளர் திரு. V.தயாபாலன் ஆகியோர் நூல் அச்சியற்றப் பெரிதும் உழைத்தனர். இவர்கள் அனைவருக்கும் நன்றி.

வைத்திய கலாநிதி (திருமதி) க.பரமசிவம்
அதிபர்.

இலங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்.
14.09.99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இலங்கையில் சுதேச மருத்துவ மாணவர்கள் தமது வேதம் எனப் போற்றிப் படித்து வரும் நூல் பரராசசேகரம். இன்றும் எமது மருத்துவ மாணவரின் பாடத்திட்டத்தில் அதற்கு இடம் தரப்பட்டுள்ளது.

ஆங்கீரச வருஷம் ஆவணி மாதம் (1932) வைத்தியப்பெருந்தகை ஐ. பொன்னையபிள்ளை இந்நூலின் மூன்றாம் பாகமாக, சுரம், சன்னி, வலி, விக்கல், சத்தி ரோகங்களின் நிதானங்களை 136 பக்கங்களில் வெளியிட்டார். அவற்றுள் சுரரோக நிதானம் 212 செய்யுட்களைக் கொண்டது.

1949 ல் அகில இலங்கைச் சித்த ஆயுள் வேத வைத்திய சங்கம் "வைத்தியன்" என்ற மாத சஞ்சிகையை வெளியிட லாயிற்று. அதில் 2ம் இதழ் (கார்த்திகை மாசம்) முதல் பரராசசேகரமாலையும் சுரரோகநிதானம் விளக்கக்குறிப்புக்களுடன் கூடிய பொழிப்புரையும் மாதந்தோறும் வெளிவந்தன. கர வருஷம் சித்திரை மாசம் உரை முற்றுப் பெற்றது. ஏடுகள் கைவசம் இருந்தபடியால், மூலநூற்பதிப்பில் இல்லாத செய்யுட்களைச் சேர்த்தும், செய்யுள் கிரமத்தில் ஓரிரு மாற்றம் செய்தும் பொழிப்புரையாசிரியர் மூலபாடத்தில்சிறுதிருத்தம் செய்தார். அவர் வைத்தியச்செம்மல். வி. கனகசபை எனப்பின்னர் "வைத்தியன்" இதழில் வந்த விவாதங்களில் இருந்து அறிந்தேன்.

இந்நுற்றாண்டின் நடுப்பகுதியில் வைத்தியர்களின் தமிழ் உரைநடை எப்படி இருந்தது என்பதை இக்காலத்தவர் அறியவேண்டும் என்பதற்காக, அதில் பெரிய மாற்றங்கள் எதை யும் நான் புகுத்தவில்லை.

ஐ. பொன்னையபிள்ளையின் செய்யுட் கிரமத்தைப் பின்பற்றியே சுரரோகநிதானச் செய்யுட்கள் 212ம் அமைக்கப்பட்டன. அதே எண்கள் வரிசையிலேயே உரையும் அச்சடிக்கப்பட்டுள்ளது. உரையாசிரியரின் வைப்புமுறையில் மாற்றம் காணும் போது, சுட்டியுள்ளேன். பிற வைத்திய நூல்களிலிருந்து ஒப்புமை குறித்துள்ள இடங்களை, இயன்ற வரை தேடித்தந்துள்ளேன்.

சுரம் என்பது தனித்த ஒரு வியாதி என சித்த ஆயுள் வேத வைத்திய சாத்திரம் மட்டுமே கருதுகின்றது. வெவ்வேறு நோய்களால் விளையும் உபத்திரவமே சுரரோகம் என்பது பிறவைத்தியமுறைகளின் கருத்து.

எமது முறையில், அகத்தொடர்பு, புறத்தொடர்பு எதுவாயினும், வாதபித்த கபங்கள் என்ற திரிதாதுக்களைத் தொட்டே வியாதிகள் சம்பவிக்கின்றன என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு. வியாதிதோற்றும் அளவுக்கு இவை சமநிலை பிறழ்வதால் இவைதோஷம் எனப்படும். இவை முரண்படுவதால் உடலின் எழுவகைத் தாதுக்களும் தூஷ்யங்களாக மாறுகின்றன. இரசம் முதல் விந்து ஈறாக இவை தூஷ்யமடையும் போது ஏற்படும் மாற்றங்களில் ஒன்றே சுரமாகவும் தென்படுகிறது.

சித்த தத்துவங்களைச் சரியாக அணுகி, சுரவகைகளுக்குத் தனித்துவம் கொடுத்த எமது தொன்முறையை கூர்ந்து அவதானிக்குக.

உரையெழுதிய எம் ஆசிரியப் பெருந்தகை வி.கனகசபை யவர்கள் இலக்கண இலக்கியப்பயிற்சிபெற்றவர். அறிவுசார் விவாதங்கள் தோன்றும் போது அவருடைய பரந்த அறிவு பட்டொளி வீசிப் பிரகாசிக்கும். ("வைத்தியன்" மலர்2 இதழ் 5,6 ஐப் பார்க்கவும்) அவருடைய குணாதிசயத்தை விளக்க ஒரு சம்பவத்தை நினைவு கூருகிறேன்.

சீரிய ஒழுக்கம், நோயாளரிடம் பரிவு, பொருள்அவாஇன்மை ஆகிய பண்புகளால், நாட்டில் புகழ்பூத்த வைத்தியகலாநிதி சுதுமலை அண்ணாமலை D.A.M., எம் கல்லூரியில் படித்தகாலத்தில், சுதேசவைத்திய சங்கத்தலைவரும், கல்லூரி விரிவுரையாளருமான க.கந்தசாமி அவர்களிடம் பாடம் கற்றவர். அவருக்குக் கிடைத்த பாக்கியம் எமக்கு இல்லையே என்று கவலையுற்றோம். எம் ஆசிரியர் வி. கனகசபை அவர்கள் எம்முள் தம்மைத்தொடரும் போக்குடைய சில மாணவர்களை அழைத்துச் சென்று தம் தனித்திறமைவாய்ந்த செந்தூரமுறைகள் போன்ற மருத்துவ ரகசியங்களைக் காட்டித்தந்தார். அந்நாட்களை நினைந்து இறும்பூதெய்துகிறோம். இந்நாட்களில் அப்படிப்பட்ட மாணவர் குருவாக்கை மேன்மைப் படுத்தியும் கற்றும் கேட்டும் காலப்போக்குக் கேற்ப மென்மேலும் மரபுவழிவந்த அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

இந்நூலாக்கத்திற்கு உசாத்துணை நூல்களைத்தேடியும், "வைத்தியன்" இதழ்களைத் திரட்டியும், கருத்துக்களைக் கண்ணோட்டம் செய்தும் வருபவரும் கரம்பனூர் (காலஞ்சென்ற) வைத்திய கலாநிதி வ. ஏகாம்பரம் D.I.M.&S. அவர்களுடைய மைத்துனக் கேண்மையால் சம்பாதித்த வாகடப்பயிற்சியை வளர்த்து வருபவருமாகிய மூதறிஞர் ஆ. சபாரத்தினம் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வைத்திய கலாநிதி வ. சிவப்பிரகாசம் D.A.M.
பதிவு எண் 1386
பரம்பரை விசேட வைத்தியர்
பதிவு எண் 3834

239, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரைகள்

## பரராசசேகரம் பற்றி:

பரராசசேகரம் செகராசசேகரம் என்பன எமது ஈழத்திருநாட்டின் சித்தமருத்துவ உலகில் தோன்றிய ஒப்பற்ற நூல்களாகும் அவை தொகுப்பு நூல்களாக இருப்பினும் கூட எமது பிராந்திய மண்வளத்தைப் பெரிதும் சார்ந்து நிற்கின்றன. பரராசசேகரநூலின் பழைய பிரதி இவ்விடம் சில வைத்தியர்களால் பொன் போன்று வைத்துப் பூஜிக்கப்படுவதையும் கண்டு பெருமையடைந்தேன். என்னிடமிருந்த நிழற்பதிப்புப் பிரதிகளை இங்கு படிக்கும் பட்டப்பின படிப்பு மாணவர்கள் பலர் தாமும் பிரதியெடுத்து வைத்துள்ளதுடன். தமது ஆயவுக் கட்டுரைகளிலும் அவற்றை இடம் பெறச் செய்து. உசாத்துணைப் பட்டியலிலும் பரராசசேகரத்தின் பெயரைச் சேர்த்துள்ளனர்.

சே. சிவசண்முக ராஜா
B.S.M.S. (CEY)
M.D. (Siddha) ஆய்வு மாணவன்
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி
பாளையங்கோட்டை
(திருநெல்வேலி)
தமிழ்நாடு.

## கெர்ப்பரோகநிதானம் பற்றி

மாசி 1999ல் சென்னையில் வாசித்த மகளிர்மருத்துவச் சுவடிகள் பற்றிய ஆய்வுக்கட்டுரை ஒன்றுக்காக நான் திரட்டிய கருத்துக்கள் பல பரராசசேகரம் கெர்ப்பரோகநிதானத்தில் இடம் பெற்றுள்ளது வியப்பைத்தருகிறது.

சே. பிரேமா
M.D. (Siddha)
பேராசிரியை & துறைத்தலைவி
சித்தமருத்துவத்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

13.07.99.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரரோக நிதானம்

# பொருளடக்கம்


| | | ஐ.பொ.பதிப்பு பாடல் எண் | பக்கம் | உரை பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | விநாயகர் காப்பு | 01 | 01 | 48 |
| 2. | நுதலிய பொருள் | 02 | 01 | 48 |
| 3. | சுரம் வரும் ஏது | 3-9 | 1,2 | 48-49 |
| 4. | வாதம் கோபித்தால் | 10 | 02 | 50 |
| 5. | பித்தம் ,, குணம் | 11 | 02 | 50 |
| 6. | சிலேற்பனம் ,, குணம் | 12 | 03 | 50 |
| 7. | சுரத்தின் தொகை-64 | 13 | 03 | 50 |
| 8. | அசாத்தியம் - சாத்தியம் | 14-15 | 03 | 50 |

**I வாதத்தில் 20: அவற்றுள் சாத்தியம் 12**

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | 1. வாதசுரம் | 16-18 | 3-4 | 51 |
| 10. | 2. வாதபித்தசுரம் | 19-20 | 04 | 51 |
| 11. | 3. சீதவாதசுரம் | 21 | 04 | 51 |
| 12. | 4. வாதஅத்திசுரம் | 22 | 04 | 51 |
| 13. | 5. வாதமாசீதசுரம் | 23 | 05 | 51 |
| 14. | 6. வாதகணசுரம் | 24 | 05 | 52 |
| 15. | 7. நாலுநாளை மாறற்சுரம் | 25 | 05 | 52 |
| 16. | 8. மாந்த சுரம் | 26 | 05 | 52 |
| 17. | 9. வாத மாந்த கணசுரம் | 27 | 05 | 52 |
| 18. | 10. வாத அதிசார சுரம் | 28 | 06 | 53 |
| 19. | 11. வாத அசீரண சுரம் | 29 | 06 | 53 |
| 20. | 12. வாத உதிரிச் சுரம் | 30 | 06 | 53 |

**அசாத்தியம் - 08**

| | | | | |
|---|---|---|---|---|
| 21. | 1. வாதசிலேற்பன சுரம் | 31 | 06 | 53 |
| 22. | 2. வாதத்தில் சன்னிபாதசுரம் | 32 | 06 | 53 |
| 23. | 3. பூத சுரம் | 33 | 07 | 53 |
| 24. | 4. பிரேத சுரம் | 34 | 07 | 53 |
| 25. | 5. மாங்கிஷ பிரதாப சுரம் | 35 | 07 | 54 |
| 26. | 6. மாங்கிஷ வசூரிச்சுரம் | 36 | 07 | 54 |
| 27. | 7. சோக சுரம் | 37 | 07 | 54 |
| 28. | 8. விரண வாத சுரம் | 38-39 | 08 | 55 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II பித்தத்தில் 24. அவற்றுள்

### சாத்தியம்.10


| | | | |
|---|---|---|---|
| 29. 1. பித்த சுரம் | 40-41 | 08 | 55 |
| 30. 2. பித்த வாத சுரம் | 42 | 08 | 55 |
| 31. 3. பித்த சிலேற்பன சுரம் | 43-45 | 09 | 55 |
| 32. 4. பித்த தாக சுரம் | 46 | 09 | 56 |
| 33. 5. பித்த வட சுரம் | 47 | 09 | 56 |
| 34. 6. அத்தி சுரம் | 48-49 | 10 | 56 |
| 35. 7. பித்த விஷ சிலேற்பன அத்தி சுரம் | 50 | 10 | 56 |
| 36. 8. பித்த அதிசார சுரம் | 51 | 10 | 57 |
| 37. 9. பித்த மாறற் சுரம் | 52 | 10 | 57 |
| 38.10. பித்த வசீரண சுரம் | 53 | 11 | 59 |


### அசாத்தியம் 14


| | | | |
|---|---|---|---|
| 39. 1. பித்த சிலேற்பன சுரத்தில் அசாத்தியம் | 54-55 | 11 | 59 |
| 40. 2. பித்த சன்னி சுரம் | 56 | 11 | 59 |
| 41. 3. பித்த சீத சுரம் | 57 | 11 | 59 |
| 42. 4. பித்த சய சுரம் | 58 | 12 | 59 |
| 43. 5. இரத்த பித்த உதிரிச்சுரம் | 59 | 12 | 60 |
| 44. 6. கரபாத சுரம் | 60 | 12 | 60 |
| 45. 7. பித்த இரத்த சுரம் | 61 | 12 | 61 |
| 46. 8. பித்தபிரமேகசுரம் | 62 | 12 | 61 |
| 47. 9. பித்த இரத்தப் பிரதாப சுரம் | 63,64 | 13 | 61 |
| 48.10. பித்த விரண சுரம் | 65 | 13 | 62 |
| 49.11. பித்த இரத்த அதிசாரசுரம் | 66 | 13 | 62 |
| 50.12. பித்த விட சுரம் | 67 | 13 | 62 |
| 51.13. பித்தமோகசுரம் | 68 | 14 | 62 |
| 52.14. பித்தரத்தப் பிரமேகசுரம் | 69 | 14 | 62 |


## III சிலேற்பனத்தில் 20

### சாத்தியம் 10


| | | | |
|---|---|---|---|
| 53. 1. சிலேற்பன பித்த சுரம் | 70 | 14 | 63 |
| 54. 2. சிலேற்பன வாத சுரம் | 71 | 14 | 63 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 55. 3. சிலேற்பனசய சுரம் | 72 | 15 | 63 |
| 56. 4. சிலேற்பன மாங்கிஷ உதிரிச்சுரம் | 73 | 15 | 63 |
| 57. 5. சிலேற்பன கண சுரம் | 74 | 15 | 63 |
| 58. 6. சிலேற்பன நீர்த்தோஷ சுரம் | 75 | 15 | 63 |
| 59. 7. சிலேற்பன அத்தி சுரம் | 76 | 15 | 63 |
| 60. 8. சிலேற்பன அதிசாரசுரம் | 77 | 16 | 64 |
| 61. 9. சிலேற்பன பிரமேகசுரம் | 78 | 16 | 64 |
| 62.10. சிலேற்பன நாலாமாறற் சுரம் | 79 | 16 | 64 |



## அசாத்தியம் 10



| | | | |
|---|---|---|---|
| 63. 1. சிலேற்பன சுரம் | 80 | 16 | 64 |
| 64. 2. சிலேற்பன சன்னி சுரம் | 81 | 17 | |
| 65. 3. மாங்கிஷ அதிதார சுரம் | 82 | 17 | |
| 66. 4. சிலேற்பன தொந்த அதிசாரசுரம் | 83 | 17 | 64-65 |
| 67. 5. நீர் உதிரிச் சுரம் | 84 | 17,18 | 65 |
| 68. 6. சிலேற்பன பிரதாப சுரம் | 85 | 18 | 65 |
| 69. 7. சிலேற்பன கணசுரம் | 86 | 18 | ...... |
| 70. 8. சிலேற்பன சோகசுரம் | 87 | 18 | 66 |
| 71. 9. சிலேற்பன தொந்த சிலேற்பன சுரம் | 88 | 18 | 66 |
| 72.10. சிலேற்பன சன்னி பாத சுரம் | 89 | 18,19 | 66 |
| 73.11. சன்னிபாத சுரத்தில் மரணக்குறி | 91 | 19 | 66,67 |



## சுரத்தில் பேதம்



| | | | |
|---|---|---|---|
| 74. மூளைச்சுரம் - பித்தத்தில் வருவது அசாத்தியம் | 92 | 19 | 67 |
| 75. தோலைப்பற்றிய சுரம் - சிலேற்பன பித்தத்தில் வருவது | 93 | 19 | 67 |
| 76. தசையை பற்றிய சுரம் - வாதத்தில் வருவது | 94 | 19 | 67,68 |
| 77. தசையில் விட சுரம் | 95 | 20 | 68 |
| 78. இரத்தத்தைப்பற்றிய சுரம் | 96 | 20 | 68 |
| 79. அத்திசுரம் | 97,98 | 20 | 69 |
| 80. சுக்கிலத்தைப் பற்றிய சுரம் | 99 | 20 | 69 |
| 81. *வைத்தியர் அறியவேண்டியன* | 100-107 | 20,21 | 69-70 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 82. சிகிச்சை | 108 | 21 | |
| 83. இலங்கணத்தின்பின் அன்னக்கஷாயம் | 109 | 22 | 71 |
| 84 சுர உவாந்திக் குடிநீர் | 110,111 | 22 | 71 |
| 85 சுரக் கழிச்சற் குடிநீர் | 112 | 22 | 71 |
| 86. சுரதாகக் குடிநீர் | 113 | 22 | 71 |
| 87. முத்தோஷக்குடிநீர் | 114 | 23 | 72 |
| 88. சுரம் 64 க்கும் குடிநீர் | 115 | 23,24 | |
| 89. வாதபித்த சுரக்குடிநீர் | 116 | 24 | 72 |
| 90. வாத சிலேற்பன சுரக் குடிநீர் | 118 | 24 | |
| 91. வாத குலைப்பனுக்கு ,, | 119 | 25 | 72 |
| 92. சீதசுரத்துக்கு ,, | 120,125 | 25,26 | 72,73 |
| 93. பித்தசுரத்துக்கு | 126 | 26 | 73 |
| 94. பித்த குலைப்பனுக்கு ,, | 127 | 26 | 73 |
| 95. பித்த சுரத்தில் மலம் கழிய | 128 | 26 | 73 |
| 96. முத்தோஷ சுரக் குடிநீர் | 129 | 26 | 73 |
| 97. மூளைச்சுரக் ,, | 130 | 27 | 74 |
| 98. தோற் சுரக் ,, | 131 | 27 | |
| 99. தசைச்சுரக் ,, | 132 | 27 | |
| 100. தசை விட சுரக் குடிநீர் | 133 | 27 | |
| 101. இரத்த சுரக் ,, | 134 | 27 | |
| 102. அத்திசுரக் ,, | 135 | 28 | |
| 103. சுக்கில சுரக் ,, | 136 | 28 | |
| 104. மோகசுரத்தின் குணம் | 137 | 29 | |
| 105. சிகிச்சை | 138 | 29 | |
| 106. சகலசுர காமாலை வசுவாசிக் குடிநீர் | 139,141 | 29,30 | |
| 107. வாய் நீர் ஊறும் சுரக் குடிநீர் | 142 | 29 | |
| 108. முச்சுரக் ,, | 143,144 | 29 | |
| 109. சுரவீக்கக் ,, | 145 | 30 | |
| பொதுச்சிகிச்சை | | | |
| 110. கற்பம் | 146 | 30 | 75 |
| 111. அழகிய சொக்கன் குளிகை | 147 | 30 | |
| 112. இராசபேதிக்குளிகை | 148 | 30 | |
| 113. இராம பாணக் குளிகை | 149 | 31 | |
| 114. சீதசுர நாளைஎன்பான் நாயன் | 150 | 31 | 75 |
| 115. சந்தனாதிக் குளிகை | 151 | 31 | 76 |
| 116. மிருத்தியாதி ,, | 152 | 32 | |
| 117. | | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 117. | ஏலாதிக் ,, | 153 | 31,32 | |
| 118. | இராசசேகரவடிவு | 154-157 | 32-76 | |
| 119. | நேர்வாளசுத்தி | 158 | 32-77 | |
| 120. | சுரகோடாலி | 159 | 32,33 | 77 |
| 121. | சுர சிந்தாமணி | 160 | 33 | 77 |
| 122. | அரிதாரக் குளிகை | 161 | 33 | 78 |
| 123. | சொர்க்கானந்த வைரவன் | 162 | 33 | |
| 124. | சீத சுர அங்குசம் | 163 | 33 | |
| 125. | சுர அங்குசம் | 164 | 34 | |
| 126. | வல்லார்க்கு வல்லான் | 165 | 34 | 78 |
| 127. | மிண்டர்க்கு மிண்டன் | 166 | 34 | 79 |
| 128. | பாசுபதாஸ்திரம் | 167 | 34 | |
| 129. | சூரியப்பிரபை | 168 | 34 | |
| 130. | சன்னிபாத சுரஎண்ணெய் | 169-172 | 35 | |
| 131. | பழவெதுப்புக்கு மிருதசஞ்சீவித்தைலம் | 173-176 | 36 | 79 |
| 132. | தங்கஏலாதி மாத்திரை | 177-181 | 37,38 | |
| 133. | இரத்தின பூபதிமாத்திரை | 182-186 | 38,39 | |
| 134. | சன்னிபாத சுர ஏலாதிமாத்திரை | 187 | 39,40 | |
| 135. | பிராணசஞ்சீவி மாத்திரை | 188-195 | 40,41 | |
| 136. | வெருகுஎண்ணெய் | 196-198 | 41 | |
| 137. | அமுக்கிராய் எண்ணெய் | 199,200 | 41,42 | |
| 138. | அரக்கு எண்ணெய்-1 | | | |
| 139. | அரக்கு எண்ணெய்-2 | | | |
| 140. | மெழுகு சந்தனாதி எண்ணெய் | | 43 | |
| | சுரதோஷம் 7 | | | |
| 141. | 1. சுர அபத்தியதோஷம் | 201 | 43 | |
| 142. | 2. ஸ்திரீ சங்கம தோஷம் | 202 | 43 | 80 |
| 143. | 3. மகா விஷதோஷம் | 203 | 44 | 80 |
| 144. | 4. மகாசுர தோஷம் | 204 | 44 | 81 |
| 145. | 5. சிங்குவாத தோஷம் | 205 | 44 | |
| 146. | 6. கிருஷ்ண சிங்ககுவாத தோஷம் | 206 | 44,45 | 81 |
| 147. | 7. அதிசாரதோஷம் | 207 | 45 | 81 |
| 148. | தோஷம் பலவுக்கும் கண்டாவிழ்தச் சூரணமும் மாத்திரையும் | 208-212 | 46 | |
| | சுரவகைகளும் ஆங்கில விளக்கமும் | | | 82,84 |
| | பாவைப்பு முறை | | | 85,90 |
| | பிறநூல்களுடன் ஒப்பீடு | | | 91,94 |
| | Synopsis | | | 95-97 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தீசரை அர்ச்சித்து,
பரராசசேகரமன்னன் தலைமையில்,
யாழ்ப்பாண மருத்துவர்கள்
வைத்தியநூலை எழுதுகிறார்கள்.





சித்திரம் : இந்திரன்
கல்லியங்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னி நாள் தன்னில் வெய்யோன் கலந்திடுகாலத்தாய
மின்னிய பகல் முகத்து விளம்பு தெக்கிணத்துக்கும்பந்
தன்னிடம் பிறந்தோர்(கு) அர்க்கியம் தரணியில் வேந்தர் நல்லோர்
அன்னவர் அளிக்கில் வாழ்வும் ஆயுவும் புகழுமாமே.
- செகராசசேகரநூல் (சோதிடம்)

(உரை) அத்த நட்சத்திரத்தில் ஆதித்தன் நிற்கும்காலம் உதயகாலத்தில் தெக்கிணதிக்கிலே கும்போற்பவராகிய அகஸ்தியருக்கு (அரசர்முதலியோர்) அர்க்கியம் கொடுத்துப் பூசை செய்தால் வாழ்வும் ஆயுளும் விருத்தியாகும்.

## அகத்தியர் பெயர் வரும் தேவாரங்கள்.

சீரினார் மணியும் மகில் சந்தும் செறிவரை
வாரி நீர்வருபொன்னி வட மங்கலக்குடி
நீரின் மாமுனிவன் நெடுங்கை கொடு நீர்தனைப்
பூரித்தாட்டி அர்ச்சிக்க இருந்த புராணனே
-சம்பந்தர்.

வந்தொரிந்திரன் வழிபட மகிழ்ந்து
வானநாடு நீ ஆள்கென அருளிச்
சந்திமூன்றிலும் தாபர நிறுத்திச்
சகளி செய்(து) இறைஞ்(சு) அகத்தியர் தமக்குச்
சிந்து மாமணி அணிதிருப் பொதியில்
சேர்வு நல்கிய செல்வங்கண்(டு) அடைந்தேன்
செந்தண் மாமலர்த்திருமகள் மருவும்
செல்வத்தென் திருநின்றியூரானே.
-சுந்தரர்

மங்கலக்குடிஈசனைமாகாளி
வெங்கதிர்ச்செலவன்வின்ணொடுமண்ணுநேர்
சங்குசக்கரதாரிசதுர்முகன்
அங்குஅகத்தியனும் அர்ச்சித்தார் அன்றே.
-அப்பர்

அன்றாலின் கீழிருந்தங்கு அறம் சொன்னானை
அகத்தியனை உகப்பானை அயன்மால்தேட
நின்றானைக் கிடந்த கடல் நஞ்சுண்டானை
நேரிழையைக் கலந்திருந்தே புலன்களைந்தும்
வென்றானை மீயச்சூர் மேவினானை
மெல்லியலாள் தவத்தின் நிறை அளக்கல் உற்றுச்
சென்றானைத் திருவீழிமிழலையானைச்
சேராதார் தீ நெறிக்கே சேர்கின்றாரே.
-அப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் எழுச்சியைப்பற்றியது. மணிமந்திர ஔஷதங்கள் தீர்க்கும். கஸ்தூரியின் விசேஷ தன்மை மானம் (Value) அதற்கு அதிதெய்வம் உண்டு. (வெள்ளைக்காரர் வெறும் விற்றமின் என்பார்)

அன்னமும் மருந்துகளும் சாப்பிடத்தெரியவேண்டும். மந்திரங்களாற் பூசித்தபின் உண்பதே முறை. அப்படிப்பட்டவர்களே உண்ணத்தெரிந்தவர்கள்.

அகத்தியர் புத்திவருத்தியில் 14ஆவது தளமாகிய அமிர்தத்தில் நிற்பவர் மேலே ஆனந்தம் வறை நோக்கு உண்டு. கீழே பார்த்து தம்கருணையினால் சாதாரண மக்களுக்காக வாகடம் இயற்றினார்.

ஆயுர்வேதம் அர்த்தத்தில் வைத்து தர்மம் சொன்னது சித்தவைத்தியம் சீவன நோக்கில் வைத்து தர்மம் சென்னது.

- மௌனதவமுனிவர் பொ.கைலாசபதி.

அளவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பரராசசேகரம்

நான்காவது

## சுரரோகநிதானம்

காப்பு

திருவுறு கைலை யென்னுஞ் சிலம்பினில் வாழெங் கோமான்
உருவுறு முயிர்கட் காக வோதிய வாயுள் வேதத்
தருவுறு வினையினாலே யாகிய நோய்க டம்முட்
சுரமுறை யுரைப்ப வானை முகன்கழ லிணைக்கொள் வோமே. 1

என்றார் தோஷ முக்குணமு மிதற்குப் பயிலு நடைபேதம்
சென்றார் சேருஞ் சுரவிதியுஞ் செல்லுஞ் சிகுஞ் சித்திமுத்தி
நின்றா ருரைத்த பத்தியமு நேரு மிரட்சை முறையனைத்தும்
குன்றாதுரைத்தமுறையறிந்துகொள்வார் பெரியோர்குணத்தாலே. 2

### சுரம்வரும் ஏது.

பண்டுள மலத்தி னாலும் பழகிய சீதத் தாலும்
உண்டியிற் பொல்லாங் காலு மொண்டொடி வருத்தத் தாலும்
கண்டுயி லாமை யாலுங் கடுகிய நடையி னாலும்
மிண்டிய சுவையி னாலும் வெதுப்புவந் தணுகு மன்றே. 3

கடுவெயின் மழைக ளாலுங் கதறிய குரலினாலும்
விடமது படித லாலும் வெருவிய வேகத் தாலும்
முடியிசை பெண்ணெய் தேய்த்து முழுகியும் போகா தாலும்
தடியடி படுகை யாலும் வெதுப்பது சாருங் காணே. 4

பொங்கெழு கோபத்தாலு மிளவெயிற் காய்த லாலும்
தாங்கருஞ் சுமையி னாலுஞ் சருகிலை யுற லாலும்
ஓங்கிய பசியினாலு முண்டியே யுண்டி யாலும்
தேங்கிய மலக்கட் டாலுந் தீயவெப் பணுகு மன்றே 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத மடாதே மேனிகெ டாதே வளர்பித்தம்
தீதுகெ டாதே சத்தியெ டாதே சேற்பத்தின்
கோதம டாதே யிருமல டாதே குடல்தன்னில்
சீதம டாதே வாயுவ டாதே திரமாமே.
6

மந்தம் வராதே சுரமும் வராதே சுரம்வந்தால்
மந்த மறாதே சீத மறாதே மலசீதம்
உந்தி யுறாதே வாயு வுறாதே யுறுவாயுத்
தொந்த மடாதே விக்க லடாதே சொன்னோமே.
7

சீரண மன்றிச் சுரமும் வராதே திரிதோஷ
காரண மன்றிச் சன்னி வராதே கபமான
நீரது வன்றிச் சோகை வராதே நெடுமேகச்
சார்வது வன்றிச் சூலை வராதே தவறாதே.
8

அபத்திய மன்றித் தோஷவி கார மணுகாதே
அபத்திய மன்றி யவுடத வினை மணுகாதே
கபத்தினை யன்றிக் காச சுவாசங் கலவாதே
கபத்தினை யன்றி வேர்வை குளிர்ச்சி காணாதே.
9

## வாதம்கோபித்தாற் குணம்.

தக்க வாதங் கோபித்தாற் சந்து குலைந்து பலநோவாய்
மிக்க மூரி தலைவலியாய் மேனி கருகி மலஞ்சிவக்கும்
தொக்க வாயு முடக்கமதாந் துவர்த்து வாயு மழற்றிவரும்
மிக்க தாப மொழிமடவா யிசையாக் குளிரு நடுக்கமுமே.
10

## பித்தம் கோபித்தாற் குணம்.

உரந்த பித்தங் கோபித்தா லுளமே புழுங்கிக் கொதிப்பெய்தும்
நிரைத்த மேனி மஞ்சனிக்கு நெறித்தல் வேர்த்தல் நீர்ப்பாய்தல்
விரைத்த லோடு பிதற்றியிடு மிகவே மூர்ச்சை சத்தியதாம்
புரைத்த வாயுங் கைப்பினொடு புளிப்பு மாங்கென் றோதினரே.
11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலேற்பனம் கோபித்தாற் குணம்.

தலைகசுர் சிலேற்பங் கோபித்தாற் றயங்கு மனமு முளங்கலங்கும்
மிகவே குளிர்ந்து கொதிப்பெய்தி வீக்கம் பலவா மடிதக்கும்
முகமே கைகால் மிகவெளுத்து மூக்கு நீர்ப்பாய் காயமுமாம்
தொகுதோ யுதரம் பாரிக்குந் தூங்கு முறக்கந் துணுக்கமதாம்.
12

## சுரத்தின் தொகை.

ஆகுமிச் சுரந்தான் வாத பித்தமை தொந்தத் தாலும்
மேவிய வெட்டெட் டாகி விரிந்திடு மென்பர் நூலோர்
வாகட மமைத்துச் சாத்திய மசாத்திய முறுகு ணங்கள்
பாகன மருந்து தாலும் பகர்ந்தனர் பரிந்து காணே.
13

## அசாத்தியம் - சாத்தியம்

தாமமாம் வாதந் தன்னி லிருபது தழல்சேர் பித்தத்
தூனதி லறுநான் காகு முறுமையி லிருப தெய்ய
பானலங் கண்ணாய் முன்னோர் பகர்ந்துறு வாதந் தன்னில்
ஈனமா மெட்டு வெட்பு ளசாத்திய மென்ன லாமே.
14

என்றிடு பித்தந் தன்னி லியற்றிரு பத்து நாலில்
வென்றியாய்ப் பத்து நாலு மேவிய சேர்ப னத்தில்
ஒன்றுமொன் பதுவுந் தானே யசாத்திய முண்மை யென்று
குன்றிலில் வாழுங் கோமான் கூறிய துணர்ந்து கொள்ளே.
15

வாதத்தில் - 20

அவற்றுள் சாத்தியம் - 12

## 1. வாதசுரம்

வாத சுரத்தின் குணமுரைக்கின் மயிர்க்கூச்செறிதலுடல்குளிர்தல்
போத நடுங்குங் கைகால்கள்கொட்டுத்தோறுமுளைவாகும்
பேதமுகமு மிஞமிஞக்கும் பிரிந்தா னைகைதுவெளுத்திருக்கும்
ஊமைத மிகுந்து மலமிறுகு முடனே நீருஞ் சிறுத்திடுமே
16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலெலா முளைவு காட்டுங் கண்ணுமே நீலங் காட்டும்
மேலெலாம் வெளிறிக் காட்டும் விடமென வேகங் காட்டும்
நூலெலாந் தெறித்துக் காட்டு நொடிபட விழக்கு நெஞ்சு
தோலெலாஞ் சுருங்க வாங்குஞ் சுரமுறு வாதத் தன்மை
17

குளிர்ந்து நடுங்குங் குலைப்பெய்திக் கொண்டே தாக மிகமிண்டி
நளிர்ந்து பல்லுங் கடுத்துளைந்து நாசிட்டெறியுங் கொட்டாவி
தளர்ந்தே யுடலுமணிக்குறங்குந் தலையும்விலாவுங்குடைகுடைந்து
வளர்ந்து வாயு மேற்கொள்ளும் வாத சுரத்தின் குணமாமே.
18

## 2. வாதபித்தசுரம்

வாத பித்த சுரமானால் வருத்துங் குணத்தை வகுத்திடுவன்
நாத மிகுத்தே யிரைச்சலுமாய் நாவுங் கண்ணு மஞ்சளிக்கும்
ஊதை மிகுத்தே விடாச்சுரமா யோங்கா ளித்துக் கண்டுங்கும்
சீத மிகுத்தே பிரமையுமாய்ச்செய்யுங்குணத்தைத்தேர்ந்தறியே.
19

சோம்பொடு திமிரு முண்டாய்ச் சுவாசமுந் திகைப்புமுண்டாய்க்
கோம்பொடு சத்திகெட்டுக் குளிர்ந்துமெய் சிலிர்ப்பு முண்டாய்க்
காம்புறு தோளி னாளே காய்வள பிதற்று முண்டாய்
மேம்பட வந்த வெப்பு வாதமேற் பித்த மாமே.
20

## 3. சீதவாதசுரம்

சீத மிகுத்த வாதசுரஞ் செய்யுங் குணத்தைச் செப்பக்கேள்
மோதி நடுக்கும் விறைவிறைக்கும் மூரி நெட்டை விக்கலுமாம்
பேதம லமுறுஞ் சலமடைக்கும் பிதற்று மரிய வாய்வெருவும்
காதுஞ் சிரமும் வேர்வையுமா மிந்தக்குணங்கள்கண்டுகொள்ளே.
21

## 4. வாதஅத்திசுரம்

அத்தியி லூனை விம்மிச் சுரமடிக் கடியே காய்ந்து
பத்தியுஞ் செரியா நாசிப் படபட தாகமுண்டாம்
சித்தமு மயக்கிக் கைகால் லோய்ந்திடுந் தேய்ந்து காட்டும்
உற்றவிக் குணங்கள் வாத வத்தியிற் சுரமென் றோதே
22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. வாதமாசீதசுரம்.

தாகமு மோக முண்டாய் மலமொடு சலமுந் தங்கித்
தோகையே விறைப்புத் தோன்றி யிளைப்பொடு துரப்பு மாகிப்
போகுற வெழுந்து வீழுஞ் சிரத்திடி துடியே போலாம்
வேகமா சீத வாத சுரமெனை விளம்பும் வேதம்.

23

## 6. வாதகணசுரம்.

மீறிடுஞ் சுரமென் மேலு நீரொடு மலமுஞ் சிக்கும்
கூறிடு நாக்குந் தொண்டை குதங்களும் விரிந்து புண்ணாய்
வேறுநீர்த் தாகந் தாபம் வெட்டுறு கழிச்ச லுண்டாம்
கூறிய குணங்கள் வாதகணசுர மென்று கொள்ளே.

24

## 7. நாளாலை மாறற்சுரம்.

வாதத்திற் சீதஞ் சேர்ந்து குளிர்ந்திடுஞ் சுரமுமாசித்
தாதுற்ற வுடம்பு நொந்து சந்துகா லுடலு ளைந்து
பேதத்தா லிருமிச் சீறி புவாந்தியும் பிரமை யாகும்
ஓதுற்ற நாலு நாளை மாறலென் றுரைக்க லாமே.

25

## 8. மாந்தசுரம்

பொருமியே கழிச்ச லுண்டா மலமது புளித்து நாறும்
உருகவே சுரமென் மேலு முவாந்திபு மூச்சு முண்டாய்ப்
பெருகவே தாகந் தாப மயக்கமும் பிரமையாகும்
முருகவிழ் குழலாய் மாந்த சுரமென மொழிந்தி டாயே.

26

## 9. வாதமாந்தகணசுரம்

அக்கினி மந்த மாகி மலமொடு சலமு மடக்கும்
விக்கலு முழலை வாந்தி யுடன்சுரம் விடாமற் காயும்
புச்சிய முகங்க ளக்கும் வயிறது பொருமிக் காட்டும்
இக்குணம் வாத மாந்த கணசுர மென்று செப்பே.

27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. வாதஅதிசாரசுரம்

பொருமலு மிளைப்பு மாகி யேப்பமும் புளித்து நாறும்
எரிவுறு சுரமுங் காயு மிருகைகால் குளிர்ந்து காட்டும்
பருகிடுந் தண்ணீர் வாங்கும் வெளுத்திடு முகமும் பாண்டம்
சுரமதி சார மென்று சொல்லுவர் முறையு ணர்ந்தோர். 28

## 11. வாத அசீரணசுரம்

பசியின்றி மந்தமாகு முதரமும் பலகால் விம்மும்
வசமறக் கனன்று காயு மந்தமும் பற்றி நிற்கும்
தசையினை யுருக்கு மூதை நயங்கிடு மிக்கு ணங்கள்
அசிரண சுரமா மென்றே யறைந்தன ராயுள் வேதர். 29

## 12. வாதஉதிரிச்சுரம்

உடம்பது மிகவும் வீங்கு மிடறடைத் தூதை விம்மும்
விடம்படு சுரமுங் காயும் விசிறிடுங் கானல் போல
முடங்கிடும் டொருத்துக் கட்டு மூர்ச்சையோ டிரத்தங் காலும்
திடம்படு முதிரி வாத சுரமெனச் செப்பினாரே 30

## அசாத்தியம் - 3

## 1. வாதசிலேற்பனசுரம்

ஊதையுங் கபமும் பொங்கி யுவார்ந்தியுள் மூக்கு முண்டாய்ப்
பாதமுங் சுரமும் வீங்கி யிருமலோ டிளைப்பும் பற்றி
நாதமு மடைத்துக் காய்ந்து நடுக்கமுஞ் சுரமு மாறா
வாதைசெய் வாதசேற்ப சுரமென வகுக்க லாமே 31

## 2. வாதத்திற் சன்னிபாதசுரம்

சிரமு மிடிக்கும் பற்கடிக்குஞ் சிறு மிருமு முவார்ந்திக்கும்
கரமுங் காலு மெடுத்தடிக்குங் கண்ணு முகமு மிறுகிறுக்கும்
உரமுந் துடிக்கு நாவருநு மேயாச் சுரமும் பிரமையுமாம்
சரீர நடுக்குந் தளர்ச்சியுமாஞ் சன்னி பாத சுரமிதுவே. 32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. பூதசுரம்

பூத சுரத்தின் குணங்கேளாய் புலம்புங் கோபித் தேபேசும்
சீதத் துடனே சுரங்காயுஞ் சீறு முகமு முடல்கனக்கும்
பேதப் படவே வாதையுமாய்ப் பெருமூச் சாதல் தலைநடுக்கல்
ஊதை மிகுந்து சிரமிடிக்கு முணர்வுமின்றி மயங்கிடுமே
33

## 4. பிரேதசுரம்

பிரேத சுரத்தின் குணமதனைப் பேசக் கேளும் பெய்வளையே
சீறிச் சுரமும் வயிறிழியுஞ் சிரமு மிடிக்கு நடுக்குமுமாம்
ஊறு முடம்பு கனப்புண்டா யுளையுங் கைகால் போட்டாப்போல்
மீறும் பக்க முடல்வேர்க்கு மிவையே குணமாய் விளம்பினரே
34

## 5. மாங்கிஷப் பிரதாபசுரம்

கதித்திடுஞ் சுரமென் மேலுங் காந்திடு முகமுங் கண்ணும்
மதித்திடக் குத்தி நோவாம் பின்னடி சந்து மட்டும்
கொதித்திடுந் தசைதீ ரண்டு குருதியும் பிறமே கங்கள்
விதித்திடு மாங்கிஷ ரோக பிரதாப சுரமி தென்னே
35

## 6. மாங்கிஷ வசூரிச்சுரம்

குரலடைத் திரும லுண்டாங் கோளையு மிகுந்து காட்டும்
சிரபத மட்டும் வீங்குந் தினிந்திடுந் துவரைக் காய்போல்
அரமென வசடு பற்றி யதுவிரிந் துரிந்து வீழும்
சுரமுறு மாங்கிஷ ரோக வசூரியின் சுரமி தாமே
36

## 7. சோகசுரம்

தாகமுந் தாப முண்டாய் மலமொடு சலமுங் கட்டி
ஏகுநீர் சுரந்து வீழுஞ் சுரமிடை விடாமற் காயும்
மோகமாம் புறந்நாள் வீங்கு முவாநதியு மிகுந்து காட்டும்
சோகமாஞ் சுரமி தென்று சொல்லுவர் முறையு ணர்ந்தோர்
37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. விரணவாத சுரம்

பாறிடு விஷங்க ளாலும் படுவனாற் பருவி னாலும்
மீறிடுஞ் சுரமென் மேலு மெடுபிடி யென்று வீழும்
மாறிடா திடிக்கு நெற்றி சிரம்பிடர் வளைய வாங்கும்
கூறிடும் விரண வாத சுரமி:. தென்று கொள்ளே. 38

தொடுத்திடு மூன்றா நாளுந் தோன்றிய வேழா நாளும்
அடுத்த தோர்சென்ம நாளு மட்டிடுங் கட்ட சாத்(தி)யம்
விடுத்தவிந் நாளி லன்றி நவசுரம் விலக்கஞ் செய்து
கொடுத்திடு மருந்தெனன் றென்னிக் கூறினார் முனிவர் தாமே. 39

வாதத்தில் 20 முற்றிற்று.

---

## பித்தத்தில் 24
## அவற்றுள் சாத்தியம் 10

## 1. பித்தசுரம்

பித்த சுரத்தின் குணங்கேளீர் பிதற்றிப் பேசும் வாய்வெருவும்
ஒத்த நயனஞ் சிவந்திருக்கு மூடே வயிறு கழிந்துவரும்
மெத்தத் தண்ணீர் தாகிக்கும் வெதும்பி நாவுந் தடுமாறும்
புத்தி யடங்கு முகங் கறுக்கும் புகலு மிடறு புண்ணாமே. 40

கொடிதா யுள்ளங் கொதிட்டெப்பதிக்கொண்டேதாகமிகமிகண்டிக்
கடிதாய் மெய்யுந் தழல்வடிவாய்க் கண்ணுங்கையுங் காறாலும்
வடிவாய் மஞ்ச ணிறமாகும் வாயுங்கைக்கு மனந்திகைக்கும்
பிடியாற் கிடையா விடையாரே பித்த சுரத்தின் குணமாமே. 41

## 2. பித்தவாத சுரம்

அந்தப் பித்த மதுவிரண்டும் வாத மொன்றுஞ் சுரமானால்
உடந்தக் காயும் பொருமலுமா முடப்புமிகவு மஞ்சனிக்கும்
நொந்தங் குலையுமுளைர்ந்திசெய நோக்குங் கண்ணும்
வெளுத்திருக்கும்
மந்தம்பற்று முதைப்பிரும் வருத்துங் குணங்களறிவீரே. 42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. பித்தசிலேற்பன சுரம்

பித்தசேற் பனசு ரத்தைப் பேசுவன் மனந்த ளர்ந்து
புத்திமா றாட்டம் பண்ணும் புகைந்திடு மிருமு மென்மேல்
சத்திடை விடாபற் காயுஞ் சலமல மஞ்ச ளிக்கும்
நித்திரை தானும் வாரா வுழலையு நெருக்க மாமே.
43

பிறங்கைகால் முகமும் வீங்கும் பெருமூச்சோ டிளைப்பு விக்கல்
அறைந்திடு மாகம் போல நெஞ்சொடு விலாவி டிக்கும்
பிறந்திடு சுரமென் மேலும் பிதற்றிடுங் தண்ணீர் வாங்கும்
சிறந்தவிக் குணங்கள் பித்த சேற்பத்தின் சுரமென் றோதே
44

சேர்ந்திடும் பித்த சேற்ப சுரத்தினிற் குணங்கள் செப்பில்
சார்ந்திடுஞ் சுரமுந் தொண்டைகட் டியே யிருமல் லுண்டாம்
மாய்ந்திடு மிளைப்பு நாவும் வழுவழுப் புடல்வ ரட்சி
பாய்ந்திடும் வேர்வை மென்மேற் பகர்ந்திடுங் குணங்க டேரே.
45

## 4. பித்ததாககசுரம்

நாவது துவர்க்கு மென்மேல் நையவே தண்ணீர் வாங்கும்
சோவமாய்ச் சுரமுங் காயுங் கூப்பிடிற் பேத மில்லைப்
பாவையே மசை லங்கள் வெதும்பிடும் பரத விக்கும்
காவியங் கண்ணாய் பித்த தாகத்தின் சுரங்கா ணியே.
46

## 5. பித்தவிடசுரம்

விடமாகுஞ் சுரத்தின் குணங்கேளாய் வெதும்பு மொருபால் வேர்
வையுமாம்
உடலுறுந்துக்குஞ் சிரமிடிக்கு முகைதுயிருந்துவாய்வறரும்
குடலூ மிரையுஞ் சாய்ச்சலுமாங் கொள்ளா தனந்த லயர்தாகம்
இடரே செய்யு மிக்குணங்க ளியம்பு மாயுன் மறைதெரிந்தே.
47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. பித்த அத்திசுரம்

பித்தமோ கித்து நின்று பெலத்தையுங் குறைத்துக் கைகால்
குத்திநொந் துறக்கமின்றிக் கொதித்திடு முடலெண் சாலும்
வத்திடும் பாவை போல நாவது வரண்டு நிற்கும்
சித்தமே மயங்கு மத்தி சுரமெனச் செப்பி னாரே.
48

காந்திடு முகமுங் கண்ணுங் காலொடு கையு மெய்யும்
சேர்ந்திடு நீர்சி வந்து சுருக்கெனக் கடுத்து வீழும்
ஏந்திள முலையி னாய்கே ளிளியவாய் கைக்கு மென்பு
நேர்ந்திட நீறு மத்தி சுரமென நிறுவி னாரே.
49

## 7. பித்தவிஷசிலேற்பன அத்திசுரம்

சாமத்தி னவலருந் தண்ணீர் தேடுந்
தழலெழுங்கண் முகமுள்ளந் தாரு மொக்க
ஏமத்தில் வந்திடுகில் விஷசேற் டழுந்தா
லெழுந்தழலாங் குணமிதென விசைக்கும்போது
காமந்து நோவுமிகுஞ் சுவாச காசங்
கனலெனவே கண்டதெனக் கருதிப் பின்னும்
தாமத்து முலையாய்கே ளத்தி தன்னிற்
சார்ந்திடுமிச் சுரமெனவே சாற்றும் வேதம்.
50

## 8. பித்த அதிசாரசுரம்

கொதித்தெழுஞ் சுரத்தின் முன்னே கொண்டிடும் பொசிப்பு றாதே
சுழித்திட பந்த மாகித் தாகநா வரட்சி யுண்டாம்
விழித்திடுஞ் சுரமும் பாதம் வெச்செனக் குளிர்ந்தி ருக்கும்
கதித்ததி சார பித்த சுரத்தினிற் குணங்கள் காணே.
51

## 9. பித்தபாறற்சுரம்

ஒன்றுறைவிட் டொருநாட் சீத மெழுந்திடு முரத்துக் காயும்
துன்றிடு மிருமல் தாகந் நாப்புலர் முவாந்தி விக்கல்
மன்றினி லெழுதல் வீழ்தல் புலம்பொடு மயக்க மாகும்
பொன்றிகழ் முலையாய் பித்த மாறலின் சுரமா மென்னே.
52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. பித்த அசீரணசுரம்

கொண்டதோர் சன்னி நின்று குமட்டியே மந்த மாகி
மண்டியே சுரமுங் காயும் வயிறூதுங் குளிர்ந்தி ருக்கும்
விண்டிட வலியு முண்டாய்த் தாகமுந் தாபம் விக்கல்
உண்டதாங் குணங்கள் பித்த வசீரண சுரமென் றோதே. 53

## அசாத்தியம் 14

## 1. பித்தசிலேற்பனசுரத்தில் அசாத்தியம்

சேர்ந்திடும் பித்த சேற்ப சுரத்தினிற் குணங்கள் செப்பிற்
காய்ந்திடுஞ் சுரமுந் தொண்டை கட்டியே யிரும லுண்டாம்
மாய்ந்திடு மிளைப்பு நாவும் வழுவழுப் புடல்வ றட்சி
பாய்ந்திடும் வேர்வை மென்மேற் பகர்ந்தவிக் குணங்க ளோடே. 54

காசமும் வெப்பு முண்டாய்க் கைத்திடும் வாய தாகிக்
கூசவே குளிர்ந்து சோம்பும் கொடுமைசேர் மிகுதி யுண்டாய்
மாசுறு மயக்க முண்டாய் மருகேறு துயர முண்டாம்
பேசினர் பித்த சேற்ப குணமசாத் தியமா மென்னே. 55

## 2. பித்தசன்னிசுரம்

முகந்துறு குளிரும் பித்து மூர்ச்சையு மூமை போல
நகந்துறு மொழிக ளாலு நல்லுடல் சோர்த லாலும்
மிகுந்துறுங் குளிருங் கண்ணுஞ் சென்னியுஞ் செவியு மந்தம்
சகந்தனி லிரை யுண்ணுஞ் சுரபித்த சன்னி பாயே 56

## 3. பித்தசீதசுரம்

மத்தமே கொண்டு மெத்த மயங்கியே குளிருங் காயம்
பத்திடுஞ் சுரமென் மேலும் பயத்திடுந் தாக முண்டாய்
நித்திரையின்மைக் கைகா லிட்டிடும் பிரமை யாகும்
பித்தமே சுரமாஞ்சீதஞ் செய்குறி யென்று பேச்ச. 57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. பித்தசயசுரம்

சுரமுட னிரும லுண்டாய்த் தொண்டையும் புகைத்து கட்டிக்
கரமொடு முகமுங் கண்ணும் வெளுத்ததிற் கறுத்தி ருக்கும்
அரமென விரிந்து நாவும் வெளுத்ததி லசறு நாறும்
புரமுறா வெரித்தோன் சொன்ன சுரசய மாகும் பொன்னே.
58

## 5. இரத்தபித்த உதிரிச்சுரம்

வாந்தியுஞ் சுரமு முண்டாய் மயக்கமு மிருமலாசிட
போந்தகல் லுடம்பு வீங்கி வயிறது பொருமிக் கொள்ளும்
மாந்தியே கிடக்கு மிக்க மலமொடு சலமுங் கட்டும்
ஆய்ந்திடு மிரத்த பித்த வுதிரியின் சுரமி தாமே.
59

## 6. கரபாத பித்தசுரம்

எரிந்திடுங் கையுங் காலு மிதில்வெடித் தசறு நாறும்
வருந்திட வனல்போற் காயும் வாந்தியுன் மூர்ச்சு முண்டாம்
திருந்திய மலநீர் மஞ்சள் சேர்ந்திடுஞ் செவியி ரைக்கும்
முருந்துறு மூரல்நல்லாய் கரபாத சுரமென் றோதே.
60

## 7. பித்தஇரத்தசுரம்

நெஞ்சமே யுடம்பு காயு நேர்ந்திடு முவாந்தி மூச்சுப்
பஞ்செனு முகமுங் கண்ணும் பாண்டுமு மஞ்சள் போலாம்
மிஞ்சவே யிரத்த மென்மே லெரிச்சலுந் திணைப்பு முண்டாம்
பஞ்சடி நல்லாய் பித்த விரத்தத்தின் சுரமாம் பாரே.
61

## 8. பித்தப்பிரமேகசுரம்

சுரத்தினிற் றாக மோகஞ் சோர்ந்திடும் பேசருத நாவும்
உரைத்தநீர் கடுக்கு நீர்த்து மஞ்சளாய்ப் புகையு நாறும்
வருந்திடு மனல்போற் காயும் வாயுலு மிகுந்தாகம் வற்றும்
தரித்திடுங் குணங்கள் பித்தச் சுரப்பிர மேக மாமே.
62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. பித்த இரத்தப் பிரதாபசுரம்

அனலெனச் சுரமுங் காபு மமர்ந்துநாப் புண்ணாய் நாறும்
சினமென வயிறுங் காலுஞ் சீறிடு மிருமல் வாந்தி
அனமுற வுதரம் விம்மு மரைக்குக்கீழ்க் குளிர்ந்தி ருக்கும்
கனமுற வெருவுங் கண்ணுங் குளிர்ந்திடுங் கசக்கும் வாயே.
63

கரித்திடுங் கண்ணுங் காணாத் தலங்களுந் காந்து மண்மேல்
நெரித்திடுங் குருதி நீரு நெட்டைவிட் டுளையுங் கைகால்
சொரித்திடுஞ் சுரமென் மேலுந் துணுக்கமே விளைட்புவிக்கல்
வருத்திடுங் குணங்கள் பித்த ரத்தப்ர தாப மாமே.
64

## 10. பித்தவிரணசுரம்

துடியென விடிக்கு நெஞ்சு விலாவிலுந் துடித்துக்காட்டும்
கொடியதோர் சுரமுங் காயும் விரணித்துக் கைகால் குத்தும்
பிடியெடு மெனமே வீழும் புலம்பிடும் பிரமையாகும்
கடியவிக் குணங்கள் பித்த விரணத்தின் சுரமாங் காணே.
65

## 11. பித்த இரத்த அதிசாரசுரம்

சுரத்திடை யுதரம் விம்மி யிரைச்சலுந் துன்னிக் காட்டிப்
பெருத்திடுங் கழிச்சல் மென்மே லாகமும் பிரமையாகும்
பொருத்திடு மசைவை யெல்லாம் புண்ணெனக் குத்தி நோவாம்
உரைத்தவிக் குணங்கள் பித்த விரத்ததி சார மாமே.
66

## 12. பித்தவிடசுரம்

ஒருபுறங் குளிருங் காயு மொருபுற முவாந்தி மூச்சுப்
பருகிடுந் தண்ணீர் வேண்டு மடிக்கடி சுரமும் பற்றும்
வெருவிடும் பிரமை தாக மூரியும் விக்க லெய்தும்
முருகவிழ் குழலாய் பித்த விடசுர மென்றார் முன்னோர்
67

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. பித்தமேகசுரம்

தாகமும் பிரமை யுண்டாய்ச் சுரமது தழல்போற் காய்ந்தே
ஆகமு மயர்ந்து காட்டி மலமொடு சலம டைத்துச்
சோகமே யெழுந்து காட்டி யிளைப்பொடு துரப்புண் மூச்சும்
பாகுறு மொழியாய் பித்த மோகத்தின் சுரமாம் பாரே.
68

## 14. பித்தரத்தப் பிரமேகசுரம்

அகங்கைகா லெரிப்புக் காட்டி யடிக்கடி சுரமுங் காய்ந்து
புகைந்திட விருமித் தொண்டை கனத்திடும் புண்போ லூறும்
இகந்துநீர் குருதி காணு மிருசெவி யடைத்தி ரைக்கும்
பகர்ந்தவிக் குணங்கள் ரத்தப் பிரமேக சுரமாம் பாரே.
69

பித்தத்தில் 24 முற்றிற்று.

---

## சிலேற்பனத்தில் 20
## அவற்றுள் சாத்தியம் 10
## 1. சிலேற்பன பித்தசுரம்

வெப்பொடு வேர்வை யுண்டாய் வெளுப்பது நாவிலுண்டாய்த்
துப்பறு மிரும லுண்டாய்ச் சொல்லுநாக் கசப்பு முண்டாய்
அப்புறு தொண்டை கட்டி யருஞ்சுரந் தோன்று மாகில்
செப்புறு குணங்க பத்தின் சேர்பித்த சுரமா மென்னே.
70

## 2. சிலேற்பனவாதசுரம்

தலையை மிகவு நடுக்குவதுஞ் சரீர முழுதும் விறைப்பதுவும்
அலையு மிரும றோன்றுவது மங்கை யொடுகால் குளிர்வதுவும்
குலையுஞ் சுரத்தி லிக்குணங்கள் கூடுங்க பத்தில் வாதமென
மலையின் முனிவ னாராய்ந்து வகுத்தா னாயுள் வேதமதே.
71

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. சிலேற்பனசய சுரம்

இருமலுங் கூதலு மிளைப்பும் விக்கலும்
செருமலுஞ் சுரமன லென்னக் காய்தலும்
தருமுகங் கனத்தலுஞ் சிரமிடித்தலும்
உரைசெயுங் கபசய சுரம தாகுமே.
72

## 4. சிலேற்பன மாங்கிஷ உதிரிச்சுரம்

பொருத்துத் தொறுமுளைந்து புண்போல நொந்துடலம்
வருத்த மிகுசுரமு மயக்கமொடு வாந்தியுமாய்ப்
பெருக்கும் பிரமைவிக்கல் வேர்வையொடு பேதமுமாய்
இருக்குங் கபத்தின்மாங் கிஷவுதிரி யெனுஞ்சுரமே.
73

## 5. சிலேற்பன கணசுரம்

காய்ந்து காய்ந்து வயிறிழியுங்
கண்ணுந் தளர்ந்து குளிர்ந்திருக்கும்
வாய்ந்த நாவு மிகவெடித்துப்
புண்போ ணாறு மசறுகக்கும்
ஏய்ந்து முலையாய் கைகால்கள்
வெச்சே யின்றிக் குளிர்ந்திருக்கும்
ஆய்ந்து கொள்ளு மிக்குணங்க
ளடைவாஞ் சேற்ப கணசுரமே.
74

## 6. சிலேற்பன நீர்த்தோஷசுரம்

தாகமு மோக முண்டாய் மலமொடு சலமுங் கட்டிப்
பாகுறு மொழியி னாய்கேள் பாண்டமு முகமும் வீங்கும்
மூகையா மூதை விம்மி மூச்சுமு சென்றி ளைக்கில்
வாகுற முன்னோர் சொன்ன கபதோஷ சுரமிதாமே.
75

## 7. சிலேற்பன அத்திசுரம்

சுரத்திலே பொரும லாகிக் கழிச்சலுந் தொடக்க மாகி
வருத்திடுந் தாக மென்மேல் நாவது வரட்சி யாகி
முருக்கிதழ் மின்னே தாகந் தாபமு முறையே யெய்தி
இருக்குமிக் குணங்கள் சேற்ப வத்தியிற் சுரமா மென்னே.
76

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. சிலேற்பன அதிசாரசுரம்

காயு மிருமுந் தொண்டைகட்டுங்கனக்கு முகமும்பொருமலுமாய்ப்
பாயுந் தண்ணீர்த் தாகமிகும் பலகா லுதர மிரைச்சலுண்டாம்
வீயுங் கழிச்சல் புலானாறிப் புறங்கால் கைகள் வீக்கமுற்றால்
ஆயு மறைசொற் சுரசேற்ப வதிசா ரத்தின் குணமாமே.
77

## 9. சிலேற்பனப் பிரமேகசுரம்

செப்புஞ் சேற்பப் பிரமேக சுரத்தின் குணத்தைத் தேர்ந்தறியில்
வெப்பு மென்மேன் மாறாமற் கரமுங் காலு மிகவெரிந்து
துப்பாய் நீரு மிளாய்ந்துவிழு மசறு நாறுந் துடியடிபோல்
எப்போ தினுநெஞ் சிடிக்குமிது கபமா மேக சுரமென்னே.
78

## 10. சிலேற்பன நாலா மாறற்சுரம்

நாளிரண் டிடையே விட்டு நையவே சீத முண்டாய்க்
கோளுறு சுரமு வாந்தி யிருமலு மிரைப்பு முண்டாய்த்
தாழ்கழல் குறுகிச் சந்து பிடரொடு கழுத்து நொந்து
வீழுமேற் சிலேற்ப நாலா மாறலின் சுரமா மென்னே.
79

## அசாத்தியம் 10

### 1. சிலேற்பனசுரம்

வெய்யசுரந் தனிலிருமல் துரப்பு விக்கல்
மெய்குளிர்த லுடல்வேர்வை யுளம்வெ தும்பல்
செய்யமுகங் கைகால்கள் வெளுத்துக் காட்டல்
தியக்கமுறல் மூச்சிளைத்தல் பிரதா பங்கள்
ஐயடைத்துக் குறுகுறுத்த லதிசா ரங்க
ளனலெழும்ப லானகுண மவைகள் கண்டால்
வெய்யசுர மசாத்தியமா மென்றே யாயுள்
வேதத்தி லருளினார் பெரியோர் தாமே.
80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சிலேற்பன சன்னிசுரம்

ஓதுகப தோஷசுர குணத்தின் செய்கை
யுரங்குளிர்ந்து வேர்வையுண்டா யுபாதியாகிக்
காதுசேற் பனமடைத்தங் கிளைப்புமாகிக்
கண்குழியு நாக்கறுக்குங் காதுகேளா
வாதையுறு நாவரளு மூதை விம்மு
மலங்கழியு முகம்வெளுக்கு முவாந்தி யாகும்
சேதமுறு பசிதாப மிகவு முண்டாஞ்
சேற்பசுர சன்னியென்று செப்பினாரே. 81

## 3. மாங்கிஷ அதிசாரசுரம்

அழலுறவே சுரங்காய்ந்து நெஞ்ச டைத்தே
யதிகசீ மாங்கிஷம்போ லசறு கக்கிப்
பழவெதுப்பு மிளைப்புடனே துரப்பு மாகும்
பாண்டமெலாம் வற்றுவிக்கும் பரத விக்கும்
உளமழிய வேர்வையுறுங் கண்வெ ளுக்கு
முதரமதி லதிசாரம் பற்றி நிற்கும்
நழுவிவிடு மிக்குணங்க ளசாத்திய மென்றே
நல்லாயுண் மறைதெரிந்து நவின்ற வாறே. 82

## 4. சிலேற்பன தொந்த அதிசாரசுரம்

இக்குணங்க ளுண்டாகி யசறு கக்கி
யிருமலுட னிரைப்புமா யிளைப்பு மாகி
ஒக்கவதி சாரமாய்ச் சேற்பங் கட்டி
யரைக்குக்கீழ்க் குளிர்ந்திருக்கு முரமுங் காயும்
அக்கிமிகுந் தொண்டை கட்டும் பிரமை தாக
மையடைத்துச் செருமிவிடு மசாத்தி யத்தில்
புக்குணர்ந்து தேர்ந்தறிந்தங் குணர வல்லார்
பொருவிலா வுபநிடதம் போற்று வாரே. 83

## 5. நீருதிரிசுரம்

வெதும்புசுர முமுற்றுதலை பரிதாபங்கள்
விக்கல்சத்தி யிளைப்பிருமல் மோகம் வீக்கம்
விதம்பெறவே வயிறமுத லல்லான்மேலே
விசிறுதனீ ரேபெருத்து வெடித்தங் கோடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதம்பெறுநாக் கறுத்திளைத்த லெல்லாங் கண்டா
லிக்குணங்க ளசாத்தியமா மென்னக் கண்டு
பதம்பெறவே யுரைசெய்தா னுமையாட் கீசன்
பழையமறைப் பொருளதனைப் பரிந்து தானே.
84

## 6. சிலேற்பனப் பிரதாபசுரம்

காய்ந்துகாய்ந் தத்தியுறு முளை யெல்லாங்
கரைந்துகரைந் துருகிவிழுங் கருகி நீரும்
தீய்ந்துவிடு மலமுகமு முடலெண் சாணுஞ்
செறிபொருத்துத் தொறுமுளையும் புதைய வீங்கும்
ஆய்ந்தொருகா லிரத்தமுட னீரும் பாயு
மதிசார மிளைப்பிரும லாகம் வற்றித்
தேய்ந்துவிடு மிக்குணங்க ளசாத்தி யத்திற்
சேற்பபிர தாபசுர மென்று செப்பே.
85

## 7. சிலேற்பன கணசுரம்

காயங் காயுங் கனக்கு மிருமலும்
தூய மாமுக மும்வெளுத் தோங்கியே
சாயம் போல மலசலந் தான்விடும்
ஆய சேற்ப கணசுர மாகுமே.
86

## 8. சிலேற்பன சோகசுரம்

சுரத்திற் சேற்பமுந் துன்னு மிருமலும்
பொருத்துத் தோறு முளைவும் புலம்பலும்
வருத்துந் தாக மதிலுறு காசமும்
உரைத்த சேற்பத்திற் சோக சுரமிதே.
87

## 9. சிலேற்பன தொந்த சிலற்பனசுரம்

பிரமை தாகமு மோகம் பிதற்றலும்
அரமும் போலடி நாக்குக் கறுத்தலும்
கரமுங் காலுங் கனத்துத் தளர்தலும்
தரவுஞ் சேற்ப சுரசேற்பந் தானிதே.
88

## 10. சிலேற்பன சன்னிபாதசுரம்

உடல்சேர் சன்னி பாதசுரத் துண்டாங் குணத்தை யுரைத்திடுகில்
பிடர்நோந் தலைநோ மறிவுகெடும் பிதற்று மிரும விளைப்பாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படரும் புண்போலுடனோவாம் பருகுந் தண்ணீர்த் தாகமுண்டாம்
விடமே போல வாய்கசக்கு மிகவும் வெதும்பு முழலையுண்டே.
89

உண்டே கழிச்ச ணாவுலரு மோது மிதற்கு வாய்நாசி
விண்டே புண்ணா நாக்கறுக்கு மிகவு நாக்குப் புண்ணாகும்
தண்டேன் மொழியாய் சத்தியுமாந் தலையுங் கழுத்து மிகவோர்க்கும்
கண்டா யிதுவே சிலேற்பனத்திற் காணுஞ் சன்னி பாதசுரம்.
90

## சன்னிபாதசுரத்தில் மரணக்குறி.

மேலே சேற்ப நாடியுறின் மார்பின் முகத்தில் வேர்வாகில்
சாலக் குளிர்ந்து நடுங்கியெழுந் திருக்கி னாப்பற் றான்கறுக்கில்
சீலவுதர மிகவுளைந்தே யுதிரங் காணிற் சிரங்குனியில்
காலு முகமும் வீங்கிமுகஞ் சிவக்கின் மரணங் கண்டுகொள்ளே.
91

சிலேற்பனத்தில் 20 முற்றிற்று.

சுரம் 64 முற்றிற்று

---

## சுரத்திற்பேதம்

### மூளைச்சுரம் - பித்தத்தில்வருவது (இது அசாத்தியம்)

கண்ணொடு செவிகே ளாமற் கபாலத்திற் பித்த மீறிப்
பண்ணுற வெதும்பு மங்கம் பல்லடி யுதிரம் பாயும்
எண்ணிய பேச்சு மாறு மெழுந்துநா வரண்டு பேத
வண்ணமா மூளை வெப்பு வகையிது விதியின் வாறே.
92

### தோலைப்பற்றியசுரம் - சிலேற்பனபித்ததில்வருவது

காலொடு வயிறெ ரிந்து கண்களுந் தலையு நொந்து
பாலொடு பழமுங் கைத்து நாவது வரண்டு மெத்த
மேலுற வெதும்பி யங்கம் வெயர்வையு மிலாதி ருக்கும்
தோலினி லையும் பித்துந் தோன்றிய சுரமி தாமே.
93

### தலையைப்பற்றியசுரம் - வாதத்தில்வருவது

நடுக்கமுண் டாவது நைய நோவதும்
கடுப்புடன் வயிறது பொருமிக் காணலும்
அடுக்கலர் குழலினா யரற்ற லாவதும்
திடப்படு தசையினைச் சேர்ந்த வெப்பதே.
94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தசையில் விடசுரம்

குளிர்ந்தே யழத்தி நாவரண்டு கொடிதாய் வெதும்பி மிகப்பிதற்றித்
தளர்ந்து சுவாச முடனிருமல் சலமு முகமு மெய்கருகி
உளைந்து சரீர மிகநொந்தே யுவாந்தி விக்க லிவையுண்டாய்
விளைந்த சதையைப் பற்றிநிற்கும் விடமாஞ்சுரத்தின் விதியிதுவே.
95

## இரத்தத்தைப்பற்றிய சுரம்

நடுங்கிப் பிதற்றி யுடம்புழத்தி நாளுந்தண்ணீர் மிகப்பருகிக்
கடுத்து மெய்யு முகமினுக்கிக் கண்ணு நீருமஞ்சணித்தே
அடுத்து மூன்றி லிரண்டி லனலாய் வெதும்பி மிகவேர்த்துத்
தொடுத்து விடுமித் தகுதியுடன் றோன்றுமி ரத்த சுரமாமே.
96

## அத்திசுரம்

நெற்றியுங் கழுத்தும் வேர்த்து நெஞ்சுமார் படைத்து மூர்ச்சை
பற்றியே யங்கம் புண்ணாய்ப் பரந்துநா வரண்டு ழத்திக்
குத்தியே யிருமிச் சோர்ந்து கொடுஞ்சுரம் காந்தல் தோன்றி
அத்தி யிலெலும்பில் வாத மையினா லடரும் வெப்பே.
97

நலம்பெ றுஞ்சிர மெய்யு முளைதலும்
குலுங்க நோவதுங் கூப்பிட் டரற்றலும்
கலங்க வேதினங் காய்ந்துடல் வற்றலும்
இலங்கு மத்தியி லேய்ந்திடு வெப்பதே.
98

## சுக்கிலத்தைப்பற்றிய சுரம்

தாப மழத்தித் தலைநொந்து சரீரங் கருகி மிகவெதும்பிச்
சோபம் வெளுத்து மலசலமுந் தோன்றிச் சத்தி வயிறெரிந்து
கோப முடனே விழிசிவந்து குளிர்ந்து பிதற்றி யார்ப்பரிக்கும்
நாபிக் கீழிற் சுக்கிலத்தி னணுகு டையி னடைச்சுரமே.
99

## வைத்தியர் அறியவேண்டியன

மந்திர மருந்து தீர்த்த மறைமொழி குருக்க டெய்வம்
புந்தியி லிவைபொய் யென்னிற் பொய்க்குமெய் யென்னின் மெய்யாம்
முந்திர வனைய கூந்தன் முகிழ்முலைக் கமல மின்னே
தந்திர வகையால் வெப்புத் தணித்திடு மாறு கேண்மோ.
100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்று பலசுரமும் விடமும் பலகுணமும்
குற்ற முறுமேது கொண்ட வசீரணமும்
துற்றும் பிரதாப மூர்ச்சை முதலான
முற்று முணர்ந்துசுரம் போக்கு முறைபுரியே
101

அரிய சுரம்வருமு ணாகத் துறுகுணமும்
புரியு மியல்பொசிப்புப் போகங் களுமுடனே
பரியு மதன்மிகுதி பற்ற றுவர்ச்சிதமும்
விரிய வறிந்துசுர மீட்கும் வகைபுரியே.
102

வாதமொடு பித்தவகை மாறுபடு பேதம்
சேதமுறு சேற்பனஞ் செறிந்துவரு தன்மை
ஏதுமுறு மூன்றுசுர பேதமுறு தாபம்
தீதறவு ணர்ந்தவர்க ளேசுர முணர்ந்தோர்
103

கண்டுசுரம் வந்ததினங் காலமொடு கோட்கள்
மிண்டுசுரந் தன்னில்விடமிக்ககுண தோஷம்
உண்டுசுர மேழுதின மெட்டினுட னொன்பான்
மண்டுசுரங் கண்டுணரு வார்கண்மதி வல்லோர்
104

குணமுங் குறியு மேதுவுடன் கூறு முடலின் னிலையதுவும்
பிணியின் வேகம் விரோதங்கள் பேசுந் தோஷம் பிரித்தறிந்து
கணமுஞ் சூடு மாராய்ந்து கருது மருந்தி னியல்புடனே
தணியு நாளுங் கண்டுணர்வோர் மருந்தே தகைசான் மருந்தாமே.
105

கல்லாப் பிராண வபகாரி கையின் மருந்தைத் தானுண்போர்
எல்லா நோயுங் குணமாகா மருந்தான் மேலு நோயுறுவர்
பொல்லா நோயு மதுதீர்க்கப் புகலு மருந்து மொன்றறியார்
கல்லார் மருந்தோ வதுகாலன் பாச மாகுங் கண்டீரே.
106

பொருண்மோ கித்து வாங்கியிடும் புன்மை யாளர் கலைமறையின்
அருள்பார்த் துணர வறியாதார் மருந்தொன் றறியா ரவனிதனில்
மருளாய்ப் பொருளிற் றடுமாறு மனிதர் பிணியின் வகையதுவும்
தெருளா ரவர்கை மருந்துண்போ ரொழியாநோயிலுழல்வர்தினம்
107

## சிகிச்சை

சுரந்தோற்றிற் சத்திபண்ணிற் சோறதுதின் னாதொழிக
உரந்தோன்று மிலங்கணமு மோரிரண்டு நாளாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரந்தோன்று மூன்றாநாட் டுபகருக் குக்குடிநீர்
வரந்தோன்று மொன்பாநாண் மருந்திடுக மடமானே.

108

## இலங்கணத்தின்பின் அன்னக்கஷாயம்

கூவிளை நெற்பொரி யரிசி சுக்குடன்
பாவையே சமன்புன லெட்டி லொன்றதாய்
மேவியீ தருந்திடிற் சுரமுந் தாகமும்
நாவறு வரட்சியுந் தீரு நன்கதே.

109

## சுர உவாந்திக்கு குடிநீர்

துய்யமா தளம்பழத் தரிசி சுக்குடன்
செய்யநீள் விளாவிலை பட்டை திப்பிலி
வெய்துறு மேலமு மெட்டொன் றாக்கியே
பையவே யருந்திடில் வாந்தி பாறுமே.

110

வில்லவேர் சிற்ற மட்டி வேர் [1]துடி [2]யட்டி கோட்டம்
புல்லுநற் சீரஞ் சுக்குப் பொருந்துசந் தனமே [3]பூவின்
நல்லசர்க் கரையெட் டொன்றாய் நவிறரு குடிநீர்கொள்ளச்
சொல்லிய சுரத்து வாந்தி தொலைந்திடு மென்றார் முன்னோர்.

111

## சுரத்திற் கழிச்சலுக்குக் குடிநீர்

முத்தற் காசு கராம்புறு முந்திரி
கொத்தங் கூவிளை கோட்டமுப் பத்திரி
இத்தெட் டொன்றது திப்பிலி மேலிட்டுச்
சுத்தி யேகுடி தோற்குங் கழிச்சலே.

112

## சுரத்திற் தாகத்துக்குக் குடிநீர்

நல்ல சந்தன மேலமி லாமிச்சுப்
புல்லு முக்கடு கூவிளை பூசினி
வல்ல சர்க்கரை யிஞ்சி கராம்புடன்
வெல்ல வெட்டொன்று வீழ்ந்திடுந் தாகமே.

113

---

[1] துடி - ஏலம் 3 பூவின் சர்க்கரை - பூமிசர்க்கரைக்கிழங்கு
[2] அட்டி - மதுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தோஷசுரத்துக்குக் குடிநீர்

[1]செஞ்சொட்டி தூதுவளை யாடா தோடை
சீந்தில்தா மரைவளையம் பற்ப டாகம்
பிஞ்சிட்ட நன்னாரி கண்டல் காரி
பெருங்கடுக்காய் நெல்லிக்காய் தான்றி சுக்குப்
பஞ்சிட்ட வடியீரொவ் வொன்று தானும்
பலங்காலாய்ப் பன்னிரண்டு படிநீர் வற்றி
மிஞ்சிட்ட குடிநீரிற் றேன்றிப் பிலியு
மேற்பொடியிட் டுக்குடிக்க விடுமூன்று சுரமே. 114

முக்கடுகு பலைமூன்று முத்தற் காசு
முந்திரிகை நிலவேம்பு முள்ளி நாரி
தக்கவதி மதுரநா லேல மோதஞ்
சந்தனம்வெண் கோட்டமுடன் சிறிய மூலம்
மிக்கசடா மாஞ்சில்குறுந் தொட்டி வில்வம்
வேர்வாசை யுடன்பிரமி சீந்தி லாமிச்
சொக்கவே யெட்டொன்றாய்த் தேன ளாவி
யுண்டிடுகின் முச்சுரங்க ளொழியு மன்றே. 115

## சுரம் 64க்கும் ஒருகுடிநீர்

சீந்தில்வேப் பலகு சிறுகாஞ்சொன்றி
சார்ந்த சந்தனஞ் சாரணை யிஞ்சியும்
பெருங்கு ரும்பையும் பேய்ப்புடோ லிலையும்
பெருமுந் திரிகை பேரீச் சம்பழம்
வட்டத் துத்தி வரிக்கற் றாழை
விட்டுணு கிராந்தி வேரிலா மிச்சும்
ஆருநன் னாரி யாடா தோடை
வேருடன் வில்வம் மேற்றொலி கொன்றை
முத்தற் காசு முதிய தூதுளை
சித்த மல்லி சேவகன் பூடு
நிலவேம்பு முள்ளிவேர் நீண்ட முல்லை.

---

1 செந்தொட்டி - செஞ்சொட்டி என்றாயிற்று போலும்
செந்தொட்டி - சிறுகாஞ்சொறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலவிய வேலங் கொள்கரு வேம்பும்
இருப்பையின் பூவு மிருவேலி கோட்டம்
கடுக்காய் மிளகு கஷிபற் படாகம்
மிடுக்கா மதுரம் வெட்பா லரிசி
நெல்லி தான்றி நேரிய திப்பிலி
சொல்லிய சுக்குச் சகம்பெறு தேக்குத்
தேவ தாரஞ் சீரிய ரோமம்
தாவிய வரத்தை சதகுப்பை கருஞ்சீர்
கொத்த மல்லி கூறிய கடுகும்
இத்தனை யெல்லா மிதம்பெறச் சமனாய்க்
கூட்டியிடித்துக் கொண்டொரு பானையில்
வாட்டியநீரும் வாருநா ணாழி
இசையக் காய்ச்சி யெட்டொன் றாக்கிப்
பசையற வெந்து பதத்தி லிறக்கி
மெல்ல வடித்து மேற்பொடி திப்பிலி
தெள்ளித் தூவித் தேனுடன் குடிக்கில்
எள்ளிய சுரங்க ளெட்டெட் டானவும்
நள்ளிய சன்னி நான்மூன் றொன்றும்
மானிடர் தம்மை வருத்துவ தில்லையென்
றானதோ ராயுண் மறையது தன்னிற்
தேர்ந்துரை செய்தார் சிவனுமை தனக்குப்
போந்தது கண்டு பொதிகைமா முனியும்
மாந்தருக்காக வழுத்திய திதுவே.

116

## வாதபித்தசுரத்தின் குடிநீர்

ஆடா தோடை பேய்ப்புடோ லடருஞ் சீந்தில் பற்படகம்
நீடார் கண்டங் கத்தரிவேர் நிலவேம் புடனே நீள்சுக்கு
வாடாக் குடிநீர் தேன்குத்தி வடித்துக் குடிக்க வல்லீராய்
பாடாய் வந்த வாதபித்தம் பாரிற் றீர்ந்து போய்விடுமே.

117

## வாதசிலேற்பனசுரத்திற்குக் குடிநீர்

கண்டங் காலி சிறுதேக்குக் கடுக்காய் சீந்தில் பற்படகம்
மண்டுந் திப்பிலி கோட்டமுடன் வருகச் சோலஞ் சிற்றரத்தை
கொண்டீர் நாழி நீர்விட்டுக் குறுகக் காய்ச்சி யுழக்காக்கிக்
கொண்டால்வாதசேடசுரங்குறைந்தே போமென் றுரைத்தனரே.

118

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாதத்தின் மேற்குலைப்புக்கு

நறைசேர் குழலா யிதுகேளாய் நாலா வகையிற் சுரந்தன்னுள்
மறையா திருந்தொன் றுரைக்கின் றேன்வாதகுலைப்ப லீங்குதற்குச்
சிறுகாஞ் சோன்றி நிலவேம்பு சேர்ந்த முத்தம் பற்படகம்
இறையார் சுக்க துடன்கூட்ட வேகுஞ் சுரமுங் குளிரதுவும் 119

## சீதசுரத்துக்கு.

இப்பொனார் தம்பினாளை யிடும்புடோல் முத்தற் காசு
பற்படாஞ் சீந்தில் சுக்குப் பையவே நைய வெந்த
அப்பினார் தேனி னாரோ டளாவினா ரென்னக் கேட்டு
வெப்பினார் குளிரி னாரை விலைினார் விடைகொண்டாரே. 120

ஆடா தோடை நன்னாரி யணியார் சீந்தில் வழுதலைவேர்
பாடார் படகம் வேர்க்கொம்பு படரும் பங்கம் பாளைசந்து
கோடாதொவ்வொன் றொருகழஞ்சு கூட்டிக்காய்ச்சி நாலொன்றாய்
நாடோ றுந்தான் குடித்துவரி வலிந்தே யோடுநளிர்சுரமே. 121

நொச்சியிலை யுடனாடா தோடைப் பன்ன
நுண்ணியதோர் சங்கிலையுந் துளசி கூட்டி
இச்சையுட னிருநாழி நீரை மேவி
யெட்டொன்றாய்க் காய்ந்தநீ ரிதனின் மேலே
மெய்ச்சவருந் திரிகடுகு வெள்ளை யுள்ளி
மேவியசீ ரகமரத்தை விரும்பிச் சேர்த்தே
நச்சுவிழி மடநல்லீ ரருந்து வீரே
னளிர்சீத சுரமகலு நன்மை யாமே. 122

திப்பிலி கோட்டம் பற்படகஞ் சிறுகாஞ் சோன்றி சிறுதேக்கு
மெய்ப்பாங் கண்டங்காலிபுடோல் வேர்க்கொம்புடனே நிலவேம்பு
கைப்பாஞ் சீந்தி லோரொன்று கழஞ்சு கொண்டே யிருநாழி
அப்பைவிட்டே யுழக்காக்கி யருந்தச் சுரங்க ளகன்றிடுமே. 123

ஆடா தோடை வேப்பந்தோ லரிய சுக்குப் பற்படகம்
தேடார் சந்த மிருவேலி சேர்ந்த முத்தம் வெள்ளுள்ளி
ஏடார் குழலீ ரெட்டொன்றா யிரவே காய்ச்சிக் குடிப்பீரால்
நாடாச் சன்னி தலைவலியு நளிருஞ் சுரங்க ளாடாவே. 124

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரை வென்ற கனங்குழற் செய்பவாய்
வாரை மாட்டு வனமுலை மாதுகேள்
பேர மட்டியுஞ் சுக்குங் குடிப்பிரால்
ஊரை விட்டுக் குளிர்சுர மோடுமே.
125

## பித்தசுரத்துக்கு

கடுக்காய் சீந்தில் தூதுவளை கண்டங் காலி முசுமுசுக்கை
அடுக்காம் பற்ப டாகமுடனாடா தோடை சிறுபயறு
வடுக்கன் மடவாய் கொடுப்படை புடோல் வற்றக் காய்ச்சிச் சீனியிட்டு
குடிக்கும் போது பித்தசுரங் கூப்பிட் டோடுங் குரைப்பனுமே.
126

## பித்தத்தின் மேற்குலைப்புக்கு

நெல்லி தான்றி வேப்பலகு நீண்ட சீந்தில் கொத்தமல்லி
நல்ல முத்தற் காசுடளே நருக்கி நாழி நீர்விட்டு
வல்லதாலே யுழக்காக்கி வடித்து நீரைக் குடித்திடுகில்
இல்லை யென்றே பித்தத்தி லெழுந்த குலைப்புப் போய்விடுமே.
127

## பித்தசுரத்தில் மலங்கழிய

சீந்திற் றண்டு சிவதைவேர் சிறந்த கடுக்காய் களிப்பாக்கு
வாய்ந்த சுக்குக் கடுரோணிவதையத் தட்டிப் புனனாழி
சேர்ந்து காய்ச்சி நாலொன்றாய்த் தினமே குடித்து வருவீரேல்
போந்த சுரமுந் தான்குறைந்து பொருமு முதர மலம்போமே
128

## முத்தோஷசுரத்துக்கு

வெட்பாலை யரிசிநெல்லி தான்றி யோமம்
வேர்க்கொம்பு கடுக்காய்நீள் முத்தற் காசு
தப்பாதே யிருவேலி யிலாமிச் சம்வேர்
தனம்பெறுபேய்ப் புடோலிவைகள் சமம தாக
மட்டாண்ட மதிற்காய்ச்சி யெட்டொன் றாக்கி
வருமுலைப்பால் தேன்கூட்டி யருந்து வீரேல்
வெப்பான முச்சுரம்விட் டகலு மென்று
விளம்பினா ராயுண்மறை யுணர்ந்த மேலோர்.
129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளைச்சுரத்திற்கு

கடுகு நொச்சி மஞ்சளுடன் காண்டார்க் குரிய வெட்பாலை
முடுகு நாவற் பூவுடனே மூன்று கடுகுஞ் சமநிறையாய்
திடமார் புனலீர் நாழியினிற் சிறக்கக் காய்ச்சிக் குடிப்பீரால்
கொடிய மூளை தனில்வெப்புக் குடிபோ மென்று கூறினரே. 130

## தோலைப்பற்றிய சுரத்திற்கு

கண்டங் காலி மரமஞ்சள் கடிய சுக்கு மிளகுடனே
உண்டா நல்ல வெட்பாலை யோங்கி வளர்ந்த நாகம்பூ
மண்மேர் நாழி நீர்விட்டு வற்றக் காய்ச்சி யுழக்காக்கிக்
கொண்டாற் றோலிற் சுரம்போகு மென்றே யுலகிற் கூறினரே. 131

## தசையைப்பற்றிய சுரத்துக்கு

கோட்டஞ் சுக்கு மரமஞ்சள் கோதில் லாத வதிமதுரம்
ஈட்ட முள்ள விண்பூறு விதமாங் கடுக்காய் நாயுருவி
கூட்டும் வில்வ நெற்பொரியுங் குறுகக் காய்ச்சிக் கொள்வீரேல்
நாட்ட மாயே தசைமீதி லணுகுஞ் சுரம்போ நல்லோரே. 132

## தசையில்விட சுரத்திற்கு

கருவேம்பு துளசிபுளி வேம்பு சூதங்
    கருதுமிவை யெலாமீர்க்குக் கடுகு மல்லி
மருமேவு துளசிகஞ்சாங் கோரை மாலின்
    வளர்காந்தி நீர்முள்ளி முட்கா வேளை
திருமேவு தூதுவளை கண்டங்காலி
    செப்புமிரு மல்லிகைசித் திரமா மூலி
உருமேவு மிவைசமமாய்க் கஷாய மூட்ட
    வுற்றதசை தன்னில்விட மொழியு மன்றே. 133

## இரத்தத்தைப்பற்றிய சுரத்திற்கு

காக்கட் டான்வேர் சீந்திலுடன் கடுக்காய் கடுகு ரோகணியும்
ஆக்க மாகும் வேர்க்கொம்பு மமருங களிப்பாக் குடன்கூட்டித்
தாக்கீர் நாழி நீர்விட்டுத் தணியக் காய்ச்சிக் கொள்வீராய்
ஏக்கு மசதி சுரங்களுட னேகு முதிரந் தனிற்சுரமும் 134

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தி சுரத்திற்கு

சொல்லுங் சிறிய பயறுடனே சுகமார் நெல்லிற் பொரியதுவும்
வில்வம் வேரும் வெண்கோட்டம் வேண்டுங் கண்டங்கத்தரியும்
நல்ல வமரர் தாருவது நலமாய்க் காய்ச்சி யெட்டொன்றாய்த்
தொல்லைப் படுத்து மத்திசுரந் தொலையக் காய்ச்சிக் குடிப்பீரே.
135

## சுக்கிலத்தைப் பற்றிய சுரத்திற்கு

முத்தற் காசு வேர்க்கொம்பு முதிய விடயம் பேய்ப்புடோல்
ஒத்த சீந்தில் வேம்புடனே யுறுகாஞ் சோண்றி சமனாக
நத்தீர் நாழி நீர்விட்டு நலமாய்க் காய்ச்சி யுழக்காக்கி
ஒத்த படியே குடித்துவரி லோடுஞ் சுக்கில சுரந்தானே.
136

## மோகசுரத்தின் குணம்

திரிதோஷ சுரஞ்சரிர முளைந்து நொந்து
தீன்மறந்து தலைகனத்து மயக்கி வேர்த்தே
அறிவழிந்து பதினாறு பேதம் பண்ணி
யதிகமாய்க் களைகளையாய்ச் சோக மாகி
நெறிகேடு செய்துமிண்டித் தொய்வு முட்டாய்
நின்றுசுர நெருப்பெனவே யெரிந்து நூரும்
வெறிபெனவும் விஷமெனவும் பசாசு போலும்
விளம்புமுட லுந்தளர்ந்து விந்து கேடாம்.
137

## சிகிச்சை

கெடாதரிசி மிளகுசுக்குக் கடுக்காய் கோட்டங்
கேடிலுள்ளி வறுத்தவித்துக் குடிநீ ராக்கி
விடாதருத்தி யவர்மோகத் திரிகள் தம்மை
விருப்பமுற வருகிருத்தி மெய்யிற் றொட்டுத்
தடவியவ ரின்னுரையாற் றண்ணீர் வெந்நீர்
தங்கையாற் கொடுத்திடவுந் தணியுமன்றி
அடாதசுர மோகித்த திரிமார் கூட
வணைத்திடவு மகலுமென வறைந்தா ரன்றே.
138

## சகலசுரம் காமாலை முதலியவற்றுக்கு வசுவாசிக்குடிநீர்

வாச மிகுந்த வசுவாசி வளருங் கராம்பு கன்னாரும்
நேச மிகுந்த விலவங்க நெல்லி யிலாமிச் சிருவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச முறுந்திப் பிலியோமம் பகரும் வெட்டி செண்பகப்பூ
வீசுங் கடுக்காய் தான்றிக்காய் விளங்கு மதுரந் தான்கூட்டே. 139

கூட்ட நாகம் பூவிடயங் கூறு மிருசீ ரகமுலுவா
வேட்ட முடன்சாத் திரவேதி மிகுமா தளையிற் பூப்பிஞ்சு
தேட்ட முடனே செஞ்சந்தந் தேவ தாரு வெண்கோட்டம்
நாட்டின் பூறன் மாசிக்காய் நயந்தோ ரொன்று முக்கழஞ்சே. 140

கழஞ்சீ ரிரண்டு நாழிபுனல் காய்ச்சி வடித்தே யுட்கொள்ளில்
முழங்கும் பித்த காமாலை மொழியும் வரட்சி யுட்காய்ச்சல்
விளம்பும் வாயு பரிதாபம் விக்கல் நெஞ்சி னுள்வரட்சி
குளிர்ந்த சுரங்க ளதிசாரங் குறையாச் சோம ரோகம்போம். 141

## வாய்நீரூறுஞ்சுரக்குடி நீர்

கண்டங் காலி காஞ்சோன்றி கருது முத்தஞ் சிறுதேக்குத்
தண்டு சீந்தி விலவேம்பு சாருந் திப்பிலி பற்படகம்
கொண்டோ ரொன்று முக்கழஞ்சு கொண்ணீர் நாழி யுழக்காக்கி
உண்டா ராகி லருவருப்போ டூறும் வாய்நீர்ச் சுரம்போமே. 142

## முச்சுரக்குடி நீர்

ஆடாதோடை யிலாமிச் சிறுவெலி யருங்கடு ரோணிபுடோ
லந்தச் சாறு கடுக்காய் திப்பிலி யானவ ரத்தைநெல்லி
காடார் சீந்திற் றண்டொடு முத்தங் காஞ்சொறி பற்படகங்
கடவுட் டாரங் தேக்கொடு சுக்குக் கருதுங் கொத்தமல்லி
நீடார் மெய்ச்சத குப்பை கருஞ்சீர் நிலவேம் பொடுகோட்டந்
நேரொக் கக்கொண் டிருதூ ணியிலிட் டிருநேரதுழக்காணல்
மூடாய் கேள்விடி யற்கா லங்கதிர் முன்னெதிர் கொண்டிடிலோர்
முற்றிய காலெதிர் பஞ்சென மஞ்சென முச்சுரமும் போமே. 143

கடுக்காய் தான்றி கொத்தமலி கடிய சுக்கு வெதுப்பாடக்கி
மிடுக்கா நெல்லி பேய்ப்புடோல் மிகுந்த சீந்தின் முத்தமுடன்
அடுக்காங் கடுகு ரோசனையு மடைவாங் கஞ்சாங் கோரையுடன்
திடத்தே கூட்டி யெட்டொன்றாய்ச் செவிக்கச் சுரங்கள் சேராவே. 144

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுரவீக்கத்துக்குடி நீர்

கையாந் தகரை தூதுவளை கடிய நொச்சி பிரமியுடன்
மெய்யாய் விளங்கு நீர்முள்ளி விளம்பு மிருமல் விகைத்தண்டு
செய்யாங் கரந்தை பேரமட்டி திகழுஞ் சுக்கு நருக்கியிட்டு
துய்தாய்க் காய்ச்சிக் குடிப்பீராற்சுரத்தில் வீக்கந் தொலைந்திடுமே.
145

## பொதுச்சிகிச்சை

### கற்பம்.

செப்பரிய திப்பிலியும் வெண்கா யுள்ளி
சிறந்தசுக்குச் சீரகமு மிரிசி னோடு
தப்பாம லோரொன்று கழஞ்சு கொண்டு
தருவெந்நீர் தனிலரைத்துத் தானே கொள்ள
அப்படியே மூன்றுநா ளருந்து வீரே
லனலெடுத்த சுரமுதலா யனேக நோய்கள்
வெப்பான வுதரமதி லுறும்வி யாதி
வீடுமென மருத்துவநூல் விளம்பிற் றன்றே.
146

## அழகிய சொக்கன்குளிகை

கெந்தந் திப்பிலி வெண்காரங் கிளரு மிரத முரோகணியும்
இந்துக் கொத்த நேர்வாள மிசையப் பாகற் சாற்றரைத்துச்
சந்தக் குன்றி போற்சமைத்துத் தழலாஞ் சுரத்துக் கிளவெந்நீர்
அந்தக் கொடிபோற் சீதம்விழு மழகிய சொக்கன் னிதுவாமே.
147

## இராசபேதிக்குளிகை

முக்கடுகு முப்பலை முதற்சிவதை ரோணி
முற்பகரு முப்பிரத மப்பிரகம் வாளம்
தக்கபொரி காரநவச் சாரமெவச் சாரந்
தட்டரிய சீரகமொடேலமலர் சாதி
ஒக்கவரை தேசிபழ நீரதனி லுண்டை
யோதுபய றாகவிடி லூதைமல மேகும்
முக்கணுடையாதியர ளாரநளி னாலே
முன்னுரைசெ யாயுண்மறை யோதுமொழி யாமே.
148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமபாணக் குளிகை

கெவுரி துத்த மரிதாரங் கிளர நிறுத்தங் கொருகழஞ்சாய்
அவுரி மத்தஞ் சாற்றிலரைத் தரிய வுண்டை பயறளவு
துவர நருக்கி யோருண்டை கொடுப்பீ ரிஞ்சிச் சாறுதனில்
இவரும் வெப்புக் குளிர்சுரமுஞ் சேரா திராம பாணமிதே.

149

## சீதசுரத்துக்கு நாளையென்பார் நாயன்

தாராருங் குழன்மாதே சாத்திரத்தின் வேதியுடன்
சோராத பாஷாணந் துரிசுதுத்த மாமிவைகள்
ஏராரு நற்செம்பை யிலைச்சாற் றரைத்தவுண்டை
நாராய ணனுரைத்தா னாளையென்பார் நாயனிதே.

150

## சந்தனாதிக்குளிகை

சந்தியொடு கோட்டமிரு வேலியகில் முத்தஞ்
சாதிநறை யைந்தினுட னைந்திவைக டாமும்
முந்திரிபே ரீஞ்சுசினை பூரமுறு பாலை
முப்பழச்சு ழைகெருட பச்சையுறு பச்சை
இந்தவகை யேசமன தாகவிடி தூளா
யேயவரை [1]பூவிரியு நீரிலினி தாயே
சந்தனம தாதிகுளி கைப்பெயர தாகுந்
தக்கவிள நீரிலுண வக்கிவித மேகும்.

151

## மிருத்தியாதிக்குளிகை

முத்தமிரு வேலியிலா மிச்சுநறை வெட்டி
முப்பழச்சு ழைகெருட பச்சையகில் தாரம்
குத்தமறு பத்திரிகன் னாரொடுதற் கோலங்
கோட்டமொடு செண்டமல ரோசினைகொள் பூரம்
கொத்தமலி யதிமதுர மேலமில வங்கங்
கொண்டவிள நீர்தனின் மண்டிடவ ரைத்து
உத்தபிர தாபசுர முட்டணமெ டுத்தா
லோட்டிவிடு மெமிருத்தி யாதியிது வாமே.

152

## ஏலாதிக்குளிகை

இட்டமுறு மேலமில வங்கநறை முத்த
மின்பமுறு சீரமிரு வேலியுறு நாரி
சட்டபுனு கோடுசினை முந்திரிபே ரீஞ்சு
சாதிமுகை யாகுபெறு தாரமதி மதூரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1] பூவிரியுநீர் - பன்னீர்

கொட்டநெரி யரிசியிலா மிச்சிளொடு வெட்டி
கொத்தமலி செண்பமலர் சந்தனமி தொக்க
முட்டுவரு பூவிரியி னிரினி லரைத்து
மாதுமுலை யூறுமமு துண்ணவனல் மாறும். 153

## இராசசேகரவடிவு

கோரோ சனையே சாதிக்காய் கோட்ட மிந்து குராசாணி
சீரா மிச்சங் குங்குமப்பூச் சிறந்த வெள்ளி லோத்திரமும்
நேரா மேல மிலவங்க நிறைசேர் தங்கங் கஸ்தூரி
வாரார் முலையாய் பத்திரியும் வளர்சீர் கருஞ்சீ ரகம்வாங்கே 154

வாங்காய் மதுர மஞ்சிட்டி வாச வெட்டி வேருடனே
பாங்கார் நெல்லி சிறுதான்றி பவளம் பச்சைக் கர்ப்பூரம்
ஆங்காங் காரஞ் சடாமாஞ்சி லதிக விடய மகிலுடனே
நீங்கா நிறைசேர் திரிகடுகு திப்பிலிமூல நேர் கொள்ளே 155

கொள்ளாய் முத்தங் கலங்கொம்பு கோதறுசெவியம்வலம்புரிக்காய்
விள்ளாய் புனுகு செண்பகப்பூ வேதி யக்ரா காரமுடன்
கள்ளார் குழலாய் நவச்சாரங் கமழுந் தேவ தாரமுடன்
விள்ளாய் சத்தி யெவச்சாரம் விரும்பி யோரொன் றொருநிறையே. 156

நிறுத்தே கருப்பூஞ் சாறதனி னேரவரைத்துப் பதமானாற்
கறுத்த வுழுந்தி னளவாகக் கடுகத் திரட்டிக் குளிகைதனை
மறுத்து முலைப்பால் தன்னிலிட வாத பித்த சுரத்துடனே
முறுக்குங் கழிச்சல் வயிறெரிச்சன் மூன்று சுரமும் வாராவே. 157

## நேர்வாளம் சுத்திசெய்ய

மேதிச்சாணி நீர்மோரா மிக்க தயிர்பால் பசுங்கழுநீர்
சாதிக் கடுக்காய்க் குடிநீராந் தக்க நறுநெய் யிவைகளிலே
மோதுந் தோடு முன்னிலை முற்றுந் தள்ளி முழுங்கவெற்தால்
ஆதி மலமு மறுக்குமென வாயுண் மறையி லருளியதே. 158

## சுரகோடாலி

பொன்னிதா ரஞ்சிவந்த பாஷாணம் வெள்ளை
பொருந்தியநற் பாஷாண நேர்வாள நிறைதான்
சொன்னபடி மூன்றைந்தோ டிடீரண்டு நான்கு
துலங்கியமக் கடுகுவகைக் கிருமூன்று கழஞ்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னுமிலைக் கள்ளியினிற் சாற்றினைவிட் டரைத்துப்
பயினொச்சி யிலைச்சாறு மறுபடிவிட் டரைத்து
மின்னனையீர் மிளகளவு பன்னீரிற் கொடுக்க
விடசுரங்க ளகலுமென விளம்பியிடும் வேதம்.

159

## சுரசிந்தாமணி

இரசங்கெந் தகமரிதா ரம்வச்ச நாவி
யிருவிகெச திப்பிலிநேர் வாளம்வெண் காரம்
திரிகடுகு திரிபலைநற் றுரிசினொடு துத்தஞ்
சிவந்தபா ஷாணமுடன் வெள்ளைப்பா ஷாணம்
கருதுந்நேர் சரிகொண்டு கைத்தகரைச் சாற்றிற்
கலந்தரைத்துக் குன்றிமணி யளவுருட்டிக் கொண்டு
பருகிடுமோ ருண்டைகடுக் காயவித்த சாற்றிற்
பலசுரமும் பறக்குமெனப் பகர்ந்தனர்கண் முனிவர்

160

## அரிதாரக்குளிகை

தாரங் கெந்தி நாவிரசந் தருமுக்கடுகு பலைமூன்று
கார மிருவி சமன்கூட்டிக் [1]கடலா மணக்கு மிதிற்பாதி
சேர நிம்பச் சாற்றரைத்துச் சிறுக வுண்டை மூர்க்கம்போல்
கூறு மனுபா னத்திலிடக் கொடிய சுரங்கள் குடிபோமே.

161

## சொர்க்கானந்தவயிரவன்

துத்தந் துரிசொ டெலிப்பா ஷாணம்
மெத்திய கெந்தக மிவைசம னாகப்
பத்திய பாக விலைச்சாற் றரைத்துச்
செத்திய வெள்ளள வுண்டைகள் செய்யே.

162

## சீதசுராங்குசம்

சீத சுராங்குசஞ் செப்பக் கேளீர்
ஓதிய கெந்தக மிரசம் வாளம்
கோதறு திரிகடு கொடுகடு சிவதை
மாதுறு பாலினின் மாத்திரை செயுமே.

163

---

[1] கடலாமணக்கு - காட்டாமணக்குவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுராங்குசம்

அரிதரா மிலிங்கங் கார மப்பிரகந் துத்த நாவி
பரிசான துரிசி னோடு பார்மனோ சிலைநீ டிந்து
பெரிதான விரசம் பாம்பின் பிச்சுநல் லிஞ்சிச் சாற்றில்
உரிதாக வரைநீ மாத்ரை யுடன்கொளச் சுரங்கள் போமே.
164

## வல்லார்க்குவல்லான்

எலிமருந் தொன்றே முக்கா விலங்குநற் சந்தஞ் காதி
குலவுமுக் கழஞ்சு கூட்டிக் கூறிய முலைப்பால் விட்டே
இலகிட வரைத்த வுண்டை யெள்ளிடை தேனி லுண்ணக்
குலவிய குளிருங் காய்ச்சல் குலைகுலைந் தோடுங் காணே.
165

## மிண்டர்க்குமிண்டன்

எலிமருந் தொன்று வாள மிதிலரி தார மொன்று
குலவுமுக் கடுகு துத்தந் துரிசொடு நாவி சூதம்
இலகவே யெருக்கம் பாலி விதையரை மணற்போலுண்டை
மலமறு நாலு நாளை மாறலு மகன்று போமே.
166

## பாசுபதாஸ்திரம்

ஆற தாகு மெலிமருந்து மதற்கு நாலு சாதிலிங்கம்
வீற தாகு மெருக்கலம்பால் விட்டே யரைத்து மணற்போல
ஆறுஞ் சுரமு மாறலும்போ மான்பா லாகு மற்றொருண்டைப்
பேறா மிதனைச் செய்வதெனப் பெரியோர் பலரும் பேசுவரே.
167

## சூரியப்பிரபை

காயம் பொன்னரி தாரம் வெள்ளுள்ளி
காரந் நாவி யிருவி கடுதான்றி
மாயக் கெந்தகஞ் சூத மோர்நிறைகொள்
வாள மோர்நிறை முருக்கிலைச் சாற்றரை
நேய மற்றைநாட் சம்பீரச் சாற்றரை
நீடு குன்றி விரையென விஞ்சியில்
தூய நொச்சியிற் சாற்றின் முலைப்பாலிற்
றோன்று மெச்சுர முந்தொலைந் தோடுமே.
168

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சன்னிபாதசுரத்துக்கு எண்ணெய்

எருக்கலையின் வேர்சாறு நான்கு நாழி
யிசைபருத்தி யிலையின்சா றிரண்டு நாழி
திருக்குலவு மெலுமிச்சம் பழச்சா றொன்று
திலவெண்ணெ யொருநாழி கலந்து கொண்டு
மருக்குலவு மிருவேலி யிலாமிச் சம்வேர்
வளர்தோடை யெலுமிச்சை சிற்ற மட்டி
உருக்குலவு செம்பொன்னி னெருஞ்சி முத்த
முடனாரி யோரிதழ்நா யுருவி மேனி 169

பெருமருந்து கிலுகிலுப்பை யவுரி யோடு
பேசுமலை தாங்கிகொடிக் கழற்சி சன்னி
வருகிரந்தி தயிர்வேளை சித்ர மூலி
வளர்காட்டு மல்லிகையின் பூறல் வேர்கள்
ஒருமருந்து பதின்கழஞ்சு கஷாய மாக்கி
யுடன்கலந்து முக்கடுகு வசம்பு காயம்
மரமஞ்சள் சதகுப்பை யிருசீர் மல்லி
வசுவாசி பீநாறி மதுர மேலம். 170

மதுரமிகு சாதிக்காய் தேவ தாரம்
வாசமிகு வெண்கோட்டம் விடய மஞ்சள்
சதுரமிகு செவ்வள்ளி விழால்வெட் பாலை
சார்வெளுத்தற் பிசினுலுவா வரத்த சந்தம்
புதுலசுணங் கச்சோலங் காரம்போ றொன்று
பொருந்தவொரு கழஞ்சிடித்துப் புகல்சும் பீர
முதியபழச் சாறூற்றி யரைத்து முன்னே
மொழிந்தமருந் துடன்கலக்கி மூன்று நாளும். 171

அனலிட்ட நாலாநாள் வடித்துக் காசி
னளவுள்ளும் புகட்டிமேற் பூசு வீரேற்
கனலிட்ட திரிதோஷ சன்னி பாதங்
கலந்தசுர முளைவுகுத்துக் கடுப்பு வாதம்
எனுமுட்டுக் குளிர்சுரங்க டசவா யுக்க
ளிரிந்தேகு மெனவுரைத்தான் பொதிகை தன்னில்
மனமெட்ட வரியசிவன் தன்னை நோக்கி
மாதவஞ்செய் திருந்ததமிழ் மறைவல் லோனே. 172

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழவெதுப்புக்கு மிருதசஞ்சீவித்தயிலம்

பசுமஞ்சட் சாறதுவு மிருநாழி தேசிப்
பழத்தில்வரு புளியுநா ணாழிதில வெண்ணெய்
இசையநா ணாழியிவை யொன்றாகக் கூட்டி
யிதிலழிஞ்சி பெருமருந்து தழுதாழை வேலி
அசுவகந்தி நன்னாரி யொடு [1]காளி [2]காரி
யவுரிகுன்றி பேய்மருட்டி யம்மையார் கூந்தல்
வசியமுறு கீழ்நெல்லி பாவட்டை யிரண்டு
வளர்சீந்தி [3]னிர்க்குண்டி சிறியபுள்ளி யடியே.

173

ஏயசெருப் படிமேனி யுடன்வேம்பு கொன்றை
யினுமழிஞ்சி கரிசாலை யப்பைபொடு தலையும்
தூயசுழ லாவாரை சங்குதரு குப்பி
சொல்லியமுக் காவேளை யாட்டாணங் கொடியும்
ஆயுமிரு மல்லிகைசா ரடைதவசி முருங்கை
யரியவிரு திராயெலா மவைவேரு மிலையும்
சேயவிலா மிச்சையின்வே ரொவ்வொன்று பலமாய்ச்
செப்புமிரு தூணிநீ ரெட்டொன்று வடியே.

174

வடித்துமுன்னைக் கஷாயத்திற் கலந்து கோட்ட
மஞ்சிட்டி யதிமதுர மஞ்ச ளேலம்
தொடுத்தவிரண் டகிலரத்தை கடுகு ரோணி
சொல்லுமா மஞ்சடிரி பலைகச் சோலம்
அடுத்ததிரி கடுகுநறும் பிசினி னோடே
யானசத குப்பையில வங்கப் பட்டை
விடுத்தசவர்க் காரமிது மிரண்டு சீரம்
வேண்டிலவம் பிசின்கடக சிங்கி யாமே.

175

ஆகுமிந்தச் சரக்கெல்லா மிடித்துத் தூளா
யதிற்கலக்கி மெழுகுபத மான வண்ணம்
வாகுபெற வடித்துடம்பிற் பூசி மேலும்
வளமையுடன் கண்காது நாசி தம்மிற்

---

[1] காளி - மஙிசித்தக்காளி 3 நிர்க்குண்டி - வெண்ணொச்சி
[2] காரி - கண்டங்கத்தரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகமது தவறாமற் றுளித்து விட்டுப்
பயன்பெறவுள் ளும்புகட்டி முழுக வார்க்கில்
மோகமுறு பழவெதுப்புப் பித்த சோக
முதலான சுரமனைத்து மொழியு மன்றே. 176

## (சேர்க்கப்பட்டவை)

## தங்கேலாதி மாத்திரை

உரைக்கு மேலமிலவங்க முத்துப் பவளங் குங்குமப்பூ
வுயர்ந்த வெள்ளி தங்கமிரு வேலி யுருத்தி ராக்கமணி
விரைக்கு மாஞ்சில் குளவிந்தங் கெருடபச்சை கிளியூறல்
வெட்பா லரிசி யதிமதூர மிருகக் கொம்பு கற்கடகம்
தரைக்கு ளியலுஞ் செங்கழுநீர்க் கிழங்கு கன்னாரதிவிடயஞ்
சாருங் கோட்ட நன்னாரி சாம்பி ராணி செம்பகப்பூக்
கரைக்குஞ் சந்த மரத்தை நெல்லி சிறுநா கம்பூமாயாக்காய்
கலையின் கொம்பு வசுவாசி கராம்பு முத்தங்கச்சோலம். 177

மேவு நற்சீ ரகமுடனே பூசினி விரைநா கணமிவைகள்
விளங்கவோரோன் றொருகழஞ்சு
வேண்டியிடித்துத்தூளாக்கி
காவில் வளரும் கரும்பிலூறு சாற்றா லாட்டி யொருசாமங்
கருது மிளநீர் தனிற்சாம நாலு கன்னி முலைப்பாலால்
தாவுஞ் சாம நாலரைத்துப் புனுகு கோரோ சனையோடு
தகுங்கஸ் தூரி யொருகழஞ்சு சாரக் கூட்டியரைத் திடக்
பாவு மிலாமிச சிறுவேலி முத்தற் காசு நன்னாரி [கேள்
பகரு மினிய விலவங்க மோரோ வொன்று பலமரையே. 178

பலமே யுறுநீ ரெட்டொன்றா யவித்துப் பிழிந்த நீர்விட்டுப்
பண்பா யரைத்து நாற்சாமம் பருத்தி விரையினளவுருட்டி
நலமாய் நிழலி லுலர்த்தியபின் நீரு நோயு மறுபான
நாடி யுரைப்பன் முலைப்பாலி லயிடம் பித்தசுர மதுதான்
வலமா யிஞ்சி பிழிந்திடுநீர் வாதசுரத்தை விடுவிக்கும்
வருதிப் பிலிநீர் முலைப்பாறேன் வருத்து
சேற்பசுரந்தன்னை
இலதாய்ச் செய்யுந் திரிதோஷ சுரத்துக் கிஞ்சி
தேன்முலைப்பா
லேற்கு மத்தி சுரமதனுக் கிசைந்த கோவைத்
தண்டாமே. 179

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமே நடுக்குஞ் சன்னியினில் வந்த சுரத்துக் கிஞ்சிநீ
ரடுத்த சன்னி பதினெட்டு மருநீம் பெண்ணெய் முலைப்பால்
தேன்
நாமே யுரைத்த விஞ்சிநீ ரிவற்றிற் குளிகை யொல்றுரைத்து
நன்முக் கடுகு வறுத்திடித்த பொடிமேற் றூவி நல்கியிடப்
போமே விக்கல் கிறுகிறுப்புச் சத்தி மயக்கம வலிமுறுக்குப்
புரைசேர் பித்த சேடசுர மூச்சு வாந்தி புகலுழலை
தாமே வாத சயித்தியமேல் வாத சுரமு மக்கரத்திற்
சாருஞ் சுரமுஞ் சயமாறுங் கபமுந் தீருந் தகைகேளே. 180

தகைசேர் வில்வம் வேர்மல்லி முத்தற் காசு நன்னாரி
சாருங் கோட்டந் தேவதரு மிளகோ ரொன்று சமனாக
வகைசேர் குடிநீ ரிட்டதிலே யருந்தப் போகு மிருவேலி
மணமார் சந்த மிலாமிச்சு வருமுந் திரிகை பற்பாடகம்
தொகைசே ரேலஞ் சிற்றமட்டி யாடா தோடை யொடுசீந்தில்
தொடுகூ விளைவேர் தேவதரு தூய பலைமூன்
றிவையல்லால்
முகைசேர் தனத்து மடநல்லாய் நிலவேம் பலகை யற்றபுடோல்
முத்தற் காசு மிவைகுடிநீர் கொள்ள வொழியும் பலசுரமே. 181

## இரத்தினபூபதி மாத்திரை

சூரியவே லெறிந்தசுரர் கிளையை மாய்த்த
குழந்தைவடி வேலனடி யிணைகள் வாழ்த்தி
நேரியமான் கொம்பினுடன் மிருகக் கொம்பு
நிகழ்பன்றிக் கொம்புவா ரணத்தின் றந்தம்
ஓரொன்று நாற்கழஞ்சு வருகஸ் தூரி
யுருத்திரமா மணிவகைக்குக் கழஞ்சி ரண்டு
சீரியநற் பவளந்நன் முத்துத் தங்கஞ்
சிவப்புமர கதம்வகைக்குக் காற்க முஞ்சே. 182

பச்சைக்கர்ப் பூரமகில் குங்கு மப்பூப்
பலைமூன்று செங்கழுநீர்க் கிழங்கு சுக்கு
நச்சுமதி மதுரமிந்துப் பரத்தை யேல
நாகம்பூ வசுவாசி குலக்கா யோமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெச்சுமரக் கம்பர்பொன்னி ளம்பர் கன்னார்
வெள்ளைக்குந் திருக்கமதி விடயங் கோட்டம்
இச்சையுறுங் கராம்புசிறு தேக்குக் காந்த
மிருசந்த ளங்கறுவாப் பீத ரோணி.
183

சீர்தருதிப் பிலியினுடன் றேவ தாரு
செவ்வள்ளி மாயாக்காய் கடுகு ரோணி
நீர்தருமுந் திரிகைகட னுரைபே ரீஞ்சு
நிகழ்கனித வேதியுட னக்க றாவும்
சார்தருசா திலிங்கநவச் சாரங் கோரோ
சனைபுனுகு கன்மதஞ்சவ் வாது தானும்
சூர்தருமப் பிரகமிவை யொருக முஞ்சு
கோரையமுக் கிராய் துளசி மாலின் காந்தி
184

நன்னாரி தூதுவளை யாடா தோடை
நவில்வெட்பூ விவைவேர்க ளரைக்க முஞ்சு
பொன்னாரு மடமானே யிஞ்சிச் சாறு
புகல்கரும்பு மாதளையின் பழத்தி னோடு
மின்னார்தம் முலைப்பாலு நாளொவ் வொன்று
மிகாதரைத்தே யிலகினுறு விரையே போலச்
சொன்னாரப் படியுருட்டி நிழலு லர்த்தித்
துயர்மேவு பலசுரங்கள் சன்னி தோஷம்.
185

இருமல்கசங் கோழைதரு சுவாத சன்னி
யிளைப்புவிக்க லசதிமிகு சுவாத காசம்
செருமல்தரு நெஞ்சடைப்புத் துரப்பு மூச்சுச்
சேர்வரட்சி வயிற்றுப்புண் ணிரத்த பித்தம்
பொருமல்தரு மோங்காளஞ் சத்தி யாதி
போகுந்நோய்க் கேற்றவனு பானங் கூட்டப்
புரிதருமிம் மருந்தின்பே ரிரத்தி னத்தின்
பூபதியென் றேவேதம் புகலு முண்டே.
186

## சன்னிபாதசுரத்தில் ஏலாதிமாத்திரை

ஏலமில வங்கமொடு கஸ்தூரி யதிவிடய மினியசந் தனமிலாமிச்
சிருவேலிமுந்திரிகை பேரிஞ்சினற்கனி யிலுப்பையிற் பூமுத்தமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலமுறு மான்கொம் புருத்திராக் கங்கன்னார் குலவுமதி
மதுரமாஞ்சில்
கூறுசாத் திரவேதி சாதியின் காயினொடு கோரோ சனைகெருடனும்
சீலமுறு பச்சைக்கர்ப் பூரமறு சந்தனஞ் சேர்பச்சை நிலவேரினுஞ்
சேர்முயிற்றண்டமிவை சரியிளநீரரைசூரை சோகாயின எவுருட்டிப்
பாலினொடு மாதளம் பழநீர கரும்புநீர் பகரிஞ்சி தேன்முலைப்பால்
பாங்கா யறிந்துகொடு சன்னிசுர மாற்றிடப் பகருமே வாதியிதுவே.
187

## பிராணசஞ்சீவிமாத்திரை

அருந்தமி ழுணர்ந்த மேலோ னகத்தியன் றெளித்துக் கூறும்
திருந்திய மருத்து நூலைத் தேர்ந்துபன் னோய்க டீர்க்கும்
மருந்துசஞ் சீவி கேண்மின் வளமுறு தங்கம் வெள்ளி
பொருந்துநற் பவளமுத்துக் குங்குமப் பூக்கஸ் தூரி.
188

நல்லகோச் சிலைமான் கொம்பு நலந்தரு முருத்தி ராக்கம்
வல்லவா ரணத்தின் கொம்பு வருமிரு கத்தின் கொம்பு
சொல்லுதாம் பிரசிந் தூரஞ் சூதசிந் தூரந் நோயை
வெல்லுமப் பிரகந் தன்னின் மேவுசிந் தூர மின்னும்
189

தப்பறு நாக பற்பந் தருதிரி கடுகு தேற்றா
வெப்பறு கெருடபச்சை மேவுமீ ரரத்தை கோட்டம்
அப்புறு துரிசு துத்த மக்கறா நாகம் பூவிந்
துப்புவான் மிளகு சாதிக் காய்சிறு தேக்கு வாசி
190

ஏலநற் கராம்பி னோடே யரிதகி கடுகு ரோணி
வாலிய கறுவாப் பட்டை வருமதி விடயம் பூவின்
பாலுறு நாக மின்னம் பகர்முயிற் றண்ட மெல்லாம்
சீலமாய்க் கொண்டொவ் வொன்றுஞ் சேரொரு கழஞ்சதாக
191

கொள்ளுசா திலிங்கந் தன்னிற் கூறுசிந் தூரம் பத்து
விள்ளுறு முறையே கூட்டி யரைத்திட விளம்பு வண்கேள்
தெள்ளுறு மாடா தோடைச் சாற்றினிற் றினமொன் றாட்டி
அள்ளுறு குன்றி மேவு மிலைச்சாறு மறுநா ளாட்டே
192

ஆட்டிப்பின் செண்ப கப்பூ வதுவொரு பலங்க ஷாயம்
போட்டொரு திமை ரைத்துப் புகன்றநற் குங்கு மப்பூக்
கூட்டொரு பலங்க ஷாயங் குறைவற வதுபோ லாட்டி
மீட்டுசெவ் வள்ளி முன்போல் விட்டொரு தினமுமாட்டே
193

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றிபோ லுருட்டிக் கொண்டு கூறுமெட் டெட்டதாகும்
நன்றியில் சுரங்கள் சன்னி நாடுமுத் தோஷமீழை
துன்றிடு மிருமல் காசஞ் சொல்லிய நோய்கட் கெல்லாம்
வென்றிசே ரனுபா னத்தி விட்டுண விரைந்து போமே
194

போகுநற் குங்குமப்பூப் பொடிசெய்து தேனினோடே
ஆகுமிக் குளிகை கூட்டி யுண்டிட வடைப்பு முட்டுத்
தாகநா வரட்சி விக்க லகன்றிடுஞ் சறளி வெட்டும்
வாகைசேர் மருந்தி னாமம் பிராணசஞ் சீவியாமே
195

## வெருகெண்ணெய்

வெருகங் கிழங்கீ ராறுபலம் வேண்டுஞ் சிற்ற மட்டியின்வேர்
வருமோ ராறு பலமிடித்து வாரு நீரெண் ணாழியினை
மருவ வவித்து நாலொன்றாய் வடித்துங் கதிலே நல்லெண்ணெய்
திருவே நாழி யொன்றிட்டுச் சேரு மதுர மிருவேலி.
196

வேர்நன் னாரி யிலாமிச்சு விளங்குங் கடுகு ரோகணியும்
சேர்சீ தேவி யமுக்கிரவு தேவர்தாரு பெரும்குரும்பை
நேரு மேல மிவைவகைக்கு நிரையாய்க் கழஞ்சொன்றிடிதூவிப்
பார்கொம் பரக்குப் பலமிரண்டு காடி யிரண்டு படிகூட்டி
197

நாலொன் றாக வடித்துவிட்டு நலமாய்க் காய்ச்சி மெழுகுதனைப்
போலொன்றுறு நற்பதம் பார்த்துப் பொருந்தவடித்தேயுட்புகட்டித்
தோலொன் றாரு முடம்பதனிற் றுவாலை யிட்டு முழுகிவரிற்
பாலொன் றியமென் மொழிமடவாய் பழையசுரமும் பறந்திடுமே.
198

## அமுக்கிரா யெண்ணெய்

சிற்றமட்டி பலந்நாலோ டமுக்கி ராய்வேர்
சேரெட்டுப் பலமிடித்துக் குறுணி நீரிற்
குற்றமற வெட்டொன்றாய் வடித்தெள் ளெண்ணெய்
கொள்ளுமொரு நாழிகற்கங் கோட்ட மேலம்
திற்பலியிந் துப்பரத்தை கொம்ப ரக்குத்
தேவதரு சதகுப்பை முத்தற் காசு
மற்றுமா மஞ்சள்கெச திப்பிலி மாஞ்சின்
மாதளைவே ரதிமதுரந் தகர மோமம
199

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனத்தின் மிளகுவகை கழஞ்சி டித்துச்
சேர்த்தடுப்பின் மெழுகுபதம் வடித்தே யுச்சித்
தானத்திற் பொருத்தியுட றனிலும் பூசித்
தான்குடித்து முழுகிவரப் பழஞ்சு ரங்கள்
ஊனத்தி தனிற்சுரங்க ளுடல்வ ரட்சி
யுள்வெதுப்பு முறைச்சுரங்க ளான வெல்லாம்
வானத்திற் பருதிகண்ட பனியே போல
மாறியகன் றிடுமெனவே வகுத்தா ரன்றே. 200

## அரக்கெண்ணெய் - 1

தாமரைவளையச்சாறு, சாத்தாவரிச்சாறு வகைக்குப்படி-2 பசுவின் தயிர்த்தண்ணீர் படி-4 கொம்பரக்கு ஒருபடி இடித்து நாலுபடி தண்ணீர் வைத்து ஒருபடியாய் வற்றவைத்து வடித்த கஷாயம் நல்லெண்ணெய் படி-1. இவையாவும் ஒன்றாய்க்கலந்து அதில் சிற்றமட்டி, சீதேவி, நன்னாரி, கோரை, அமுக்கிராய், இருவேலி இலாமிச்சு இவைவேர், கோட்டம், மரமஞ்சள், பெரும்குரும்பை, தேவதாரம், அகில், அரத்தை, அரேணுகம், செவ்வள்ளி, பச்சிலை, மாஞ்சில்,ஏலம், இலவங்கம், மதுரம், செண்பகப்பூ, கடுகுரோகணி, சதகுப்பை, வெளுத்தற்பிசின் - வகை - கழ .1 இடித்தரைத்துக் கலக்கி ஆறாம்நாள் மெழுகுபதத்தில் வடித்து தலைக்கு வைத்து மேலும்பூசி முழுக உள்வெதுப்பு, வரட்சி, இருமல், காமாலை, பாண்டுமுதலியன தீரும்.

## அரக்கெண்ணெய் - 2

சிற்றமட்டி சமூலம், விட்டுணுகிராந்தி சமூலம், மரற்கிழங்கு, அமுக்கிராய்க்கிழங்கு - வகை - பலம் - 3 - இடித்து 16 படி தண்ணீர்வைத்து 2 படியாய் வற்றவைத்துப் பிழிந்த கஷாயம், பொன்மெழுகு - படி - 1 இடித்து நாலொன்றாய்வற்ற வைத்த கஷாயம், தயிர்த்தண்ணீர் - படி-4 நல்லெண்ணெய் - படி-2 கலந்து அதில், மஞ்சிட்டி, சுக்கு , அரத்தை, கோட்டம், ஏலம், இலவங்கம், நாகப்பூ, தேவதாரம், சிறுமூலம், செம்பகப்பூ, சதகுப்பை, இருசீரகம், மஞ்சள், மரமஞ்சள், கடுகுரோகணி, சந்தனம், மதுரம், கராம்பு மல்லி - வகை - கழஞ்சு 2 நன்னாரிவேர், கோரைக்கிழங்கு, சீந்திற்தண்டு,இருவேலி, இலாமிச்சு, பொன்னாங்காணிவேர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதேவியார்செங்கழுநீர்வேர் - வகை - பிடி 2 அரைத்துக்கரைத்து முன்போல வடித்துமுழுக இராக்காய்ச்சல் அத்திசுரம், எலும்புருக்கி, வரட்சி முதலியன தீரும்.

## மெழுகுசந்தனாதியெண்ணெய்

சந்தனம் - பலம் - 8 இருவேலி, இலாமிச்சு, நன்னாரி, தாமரைவளையம், வகை - பலம் 2 அமுக்கிராய்க்கிழங்கு பலம்- 2 சிற்றமட்டிவேர்த்தோல் பலம்-5 இடித்து தூணி நீர் எட்டொன்றாய்வடித்து அதில் மோர் படி 4 இளநீர் படி 4 நல்லெண்ணெய் படி 4 அரத்தை,சதகுப்பை,கோட்டம் தேவதாரு, அகில், இலாமிச்சு, வெட்டிவேர், பச்சை, கச்சோலம், செண்பகப்பூ, ஏலம், குளவிந்தம், கடுகுரோகணி, பெருங்குரும்பை, முத்தற்காசு, நற்சீரகம், தகரம் வகை கழஞ்சு 4 இளநீராலரைத்துக் கலக்கி மெழுகுபதம் வடித்து, புனுகுசட்டம்,குங்குமப்பூ,,பச்சைக்கர்ப்பூரம்,கோட்டம்,கஸ்தூரி,மேற் பொடிதூவி முழுகிவர பழஞ்சுரம், எலும்புச்சூடு முதலியன தீரும், உடம்புதேறும்.

## சுரதோஷம் - 7

### 1 -- சுர அபத்தியதோஷம்

சுரத்தினின் மந்தத் தாலுஞ் சொல்லபத் தியத்தி னாலும்
கருத்தினிற் பிரமை யோடு கடியதோர் மூர்ச்சை காணும்
வருத்தமாய்த் தாக மிஞ்சு மார்புநோம் வாய்பு லம்பும்
தெரித்தவிக் குணஞ்சு ரத்தின் சேரபத் தியமாந் தோஷம்
201

### 2 - திரிசங்கதோஷம்

சுரமுற்றோர் மாதரோடு சுகித்திடி லுண்டாந் தோஷம்
கருவுற்ற வுடம்பு நோகுங் கருதுநெஞ் செரிவுண்டாகும்
பொருவுற்று விழிசி வக்கும் புலம்பிடு மெழுந்து வீழும்
பரிவுற்றுக் குளிருங் கைகால் பதறிடும் பிரமை காணும்
202

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 - மகாவிஷதோஷம்

பிரமையுறு காய்ச்லொடு பிதற்றல் காணும்
பேசரிய வுட்டணமாய்த் தாகங் கொள்ளும்
பெருகிமிக வயிற்றெரியு மூர்ச்சை யுண்டாம்
பேணுகின்ற நாடியது வாத மந்தம்
தெருமந்து சஞ்சலிக்கும் வேர்க்கு மேனி
தீப்போல வங்கமெலா மழற்சி யாகும்
மருவியே யழலைமிகுந் துப்பிசமு மாகு
மாவிஷத்தின் றோஷமென மதித்தி டாயே.

203

## 4 - மகாசுரதோஷம்

மதித்திட்ட மகாசுரத்தின் றோஷங் கேண்மின்
மயக்கமொடு தியக்கமுமாய்ப் பிரமை கொள்ளும்
விதித்திட்ட குளிருடனே காய்ச்ச றாளும்
விட்டுவிட்டுத் தான்காயுந் தாக முண்டாம்
கொதித்துமிகக் தலைநோகு நாவ ரட்சி
கொள்ளுமடி நாக்கதுவு முள்ளுப் போலாம்
கதித்துமிகப் புலம்பலுமாய்ப் புரளு மேனி
கழற்னிக் குணமறிந்து கலைவல் லோரே.

204

## 5. சிங்குவாததோஷம்

சுரங்காயு நாக்கிலுறு வாத தோஷஞ்
சொன்னாக்கி னிறம்பொன்னாம் வரட்சி காணும்
அரம்போல முட்கொண்டு வெடிக்கு நெஞ்ச
மதிரவே காய்ச்சலொடு மூர்ச்சை காணும்
புரந்தோய வேர்வைசிந்து முடல்பு ரட்டும்
புத்திமிக வேதியங்கு மருட்சி யுண்டாம்
வரம்போற்று மவர்க்கருளிக் கதிரை மேவும்
வடிவேலன் குறுமுனிக்கு வகுத்த வாறே.

205

## 6. கிட்டின சிங்குவாததோஷம்

உண்மைபெறு கிருட்ணசிங்கு வாத தோஷ
முண்ணாக்குக் கறுத்துலர்ந்து முள்ளுப் போலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைபெற வெழுந்திருக்கும் பிரமை யாகி
யங்கமெலாந் தினவெடுக்கும் வெயர்வை யுண்டாம்
திண்மைபெற மேன்மூச்சோ டுழலை காணுஞ்
சிறுகவே சுரங்காயு முடல்க றுக்கும்
வண்மையறக் கைகால் களசந்து சோரும்
வாகடநூல் வல்லவர்கள் வகுத்த வாறே. 206

## 7 - அதிசாரதோஷம்

விதிமருவு மதிசார தோஷந் தன்னை
விளம்புவன்கேள் புறங்குளிரு முள்ளே காயும்
கதிமருவு கைகால்கண் மிகக்கு ளிர்ந்து
கம்பித்துப் புலம்பியே யுவாந்தி பண்ணும்
சதிமருவு மிருமலொடு விக்கன் மூச்சுத்
தாழாதே யெழுந்தாடி யோடும் வேர்க்கும்
ததிமருவு சீதரத்த மிகுந்து தூக்கந்
தனையொழிக்கும் பொல்லாநோய் சாற்றி னோமே.
207

## தோஷம் பலவுக்கும்
## கண்டாவிழ்தச் சூரணமும் மாத்திரையும்

உருத்திர மணியே மானின் கொம்புறு மதுர மேபே
ரரத்தைதிப் பிலிக ராம்போ டானையின் றந்தங் கோட்டம்
திருத்திகழ் சம்பீ ரத்திற் செழுவிதை யக்க ராவும்
கருத்துடன் கழஞ்சொவ் வொன்று கருதுகோ மதமி ரண்டே
208

எழுமுறை புடமிட் டப்பா லெடுத்திடு சூர ணத்தை
வழுவறச் சிமிழில் வைத்து விதிமுறை வழங்கக் கேண்மின்
இழுதுடன் றேனுங் கல்லக் காரமிங் கிவற்றி னோடு
பழுதறக் குழப்பி யுண்ணப் பறக்குமே நாமுட் டோஷம்
209

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக்கினில் வரட்சி வாய்ப்புண் ணக்கர நீர்க்கடுப்புத்
தாக்குறு முவாந்தி விக்கல் சாற்றிய தோஷ மெல்லாம்
போக்குமிங் கிவற்றி னோடு பொன்வெள்ளி பவள முத்துத்
தூக்குகஸ் தூரி ஞாழல் சொல்லிய புனுகு லிங்கம். 210

வகைக்கொரு கழஞ்சு கூட்டி மங்கையர் பாலினாலும்
முகைப்படு செண்ப கப்பூ மொழிந்திடு கஷாயத் தாலும்
தகைப்படு பன்னீ ராலும் வகைக்கொரு சாம மாட்டி
வகுத்திடு முழுந்துபோல மாத்திரை நிழலுலர்த்தே 211

சொற்றவிக் குளிகைதன்னைச் சுகந்தரு மனுபா னத்தில்
உற்றிடச் சன்னி தோஷ முவாந்திநா முள்ளு விக்கல்
செற்றிடு சுரமே யாதி தீர்ந்திடு மென்றார் வேலன்
பொற்றிரு வடிபூ சிக்கும் புண்ணிய முனிவ ரம்மா. 212

சுரரோக நிதானம் முற்றுப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரராசசேகரமாலை
# சுரரோகநிதானம்

(விளக்கக்குறிப்புகளுடன் கூடியது)

அகில இலங்கைச் சித்த ஆயுள் வேத
வைத்திய சங்கத்தின் முதலாவது வெளியீடு

## "வைத்தியன்" மலர்1 இதழ்2 (விரோதி கார்த்திகை)
## 1949 முதல்
## மாதந்தோறும் வெளிவந்தது

முகவுரையிலிருந்து......

**.......எம்மிடம் இருந்தசில பிரதிகளின் உதவியோடு முற்பதிப்பை வேண்டிய திருத்தம் செய்து நிரைப்படுத்தி ஒன்று சேர்த்தும் விடுபட்டிருந்த சிலசெய்யுட்களைச் சேர்த்தும் எம்மால் ஆனவரையில் அரும் பதங்களுக்கு உரையும் சிலஇடங்களில் விளக்கக்குறிப்புகளும் எழுதி இந்நூலை வெளியிடுகின்றோம்.**

"குற்றங்களைந்து குணமளைந்து கொள்ளுதல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ 01. ஞானச்செல்வம் (என்றென்றும்) பொருந்திய கைலாயம் என்னும் மலையின்கண்ணே வீற்றிருந்து (அருள்வழங்கும்) தலைவராகிய ஸ்ரீகண்டபரமேசுவரன், தூல, சூக்கும உருவத்துடன் கூடி வாழுகின்ற உயிரினங்களின் நன்மைக்காகக் கற்பித்த (உபவேதங்களுள் ஒன்றாகிய) ஆயுள்வேதம் என்ற அறிவுநூலில் கூறப்பட்டபடி, வெல்லுவதற்கு அரிய தீவினை (யின் விளைவாகிய பாவம்) காரணமாக உண்டாகிய நோய்களுக்குள்ளே, சுரம் என்னும் காய்ச்சல் வகைகளை முறையாகச் சொல்லுவதற்கு, பிரணவ வடிவினராகிய ஆனைமுகக்கடவுளின் திருப்பாதங்களைத் துணையாக மனத்தில் இருத்துவோமாக.

❖ 02. வாதம், பித்தம், கபம் ஆகிய முத்தோஷங்களும், அவற்றின் ஏற்றத்தாழ்வால் தோன்றும் உபத்திரவ குணங்களும், அதன்காரணமாக உடலில் பொருந்திய நாடி நடப்பதில் வேறுபாடும், இவைபற்றிச் சேருகின்ற சுரங்களின் விதிமுறைகளும், அவற்றின் போக்கும், (வைத்திய) சித்தியும், (உலகப்) பற்று இல்லாமையும் வாய்க்கப்பெற்றவர்கள் கூறிய பத்தியபாக முறைகளும், (நோய்மாறுவதற்காக) சேர்க்கப்படும் இரட்சைகட்டும் முறைகள் எல்லாவற்றையும், குறைவுபடாமல் சொன்னமுறையை அறிந்து, தம் நற்குணத்தாலும், அவைகளின் சிறப்புப்பற்றியும் பெரியோர் ஏற்றுக்கொள்வார்கள்.

❖ 03. பழைய மலமும் சீதமும் பெருங்குடலில் தங்கியிருத்தல், உணவில் பொருந்தாதவை, தீமை செய்பவை சேர்தல் வாலிபர்கள் பெண்நினைப்பு (தாங்கமுடியாதபடி மனதை) வருத்துதல், உறக்கக்குறைவு, உடலை வருத்தும் நடைபோன்ற அலைச்சல், அளவுக்கு மீறிச்சுவைகளை அனுபவித்தல், போன்றவற்றால் காய்ச்சல் உடலில் வந்து சேரும்.

---

❖ முதல் ஐந்து பாடல்களுக்கும் "வைத்திய" னில் உரை இல்லை. உரைவெளிப்படை என்று விட்டவைகளுக்கும் நாம் எழுதிச் சேர்த்துள்ளோம்

(வ.சிவப்பிரகாசம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. கடும் மழையோ வெயிலோ தாக்குவது, குரல் கதறும்படி சத்தமிட்டு தொண்டைகட்டுதல், விஷம் உடலில் பொருந்துதல், கடும் கோபத்தின் அதிர்ச்சி, தலையில் எண்ணெய் வைத்து முழுகும் போது, எண்ணெய்ச்சிக்கு போகாது இருத்தல், அடிதடியால் உடல்நோ அடைதல் ஆகிய காரணங்களாலும் காய்ச்சல் ஏற்படும்.

❖ 05. இங்கு உண்டாகின்ற கோபம், இளம் வெயிலில் காய்தல், தாங்கமுடியாத சுமை சுமப்பது, இலைசருகு ஊறிய நீரைக்குடிப்பது, பசிகிடப்பது, அளவில்லாமல் உண்பது, நீண்டநாட்கள் குடலில் தங்கிய மலம் கட்டிப்போவது ஆகியவையும் வெப்பு நோய் தோன்ற ஏதுவாகும்.

06. சுரநோயில் வாததோஷம் மீறில் நோயாளியின் தேகபலம் குறைதலும் பித்ததோஷம் மீறில் சத்தியெடுத்தலும் கபதோஷம் மீறில் இருமலும், இரைப்பை, குடல் இவற்றில் சீதள முண்டாயின் வாயு பீடையுந் தோன்றும்.

07. சுரத்திற்கு முதற்காரணம் மந்தம். அம் மந்தம் நீங்கினாலன்றி அதன் உபத்திரவங்களாகிய சீதளம் முதலிய குணங்கள் தீரா. அன்றி மலமுஞ் சீதளமும் குடலிற் பொருந்துவதால் சுரத்தில் வாய்வுண்டாகும்.

08. மந்தாக்கினியாற் சுரமும், அதனோடு வாதாதி முத்தோஷங்கள் கோளாறடைந்து விகாரப்பட்டாற் சன்னியும், நீர்மயமான கபத்தின் கோளாறால் வீக்கமும், தொடர்ச்சியான மேக சம்பந்த நோயிருப்பின் சூலையும், சுரரோகிகளுக்குத் தவறாது உபத்திரவங்களாய் உண்டாகும் என்க.

09. சுரநோயில் எதிரிடையான அபத்திய உணவையும், செயலையும் செய்தால், அபத்திய தோஷம் முதலாகக் கூறும் எழுவகைத் தோஷ விகாரங்கள் உண்டாகும். அன்றி அமிர்தம் போன்ற மருந்துகளின் வீரியமுங் கெடும். கபதோஷ மிகுதியினால் இருமல், மூச்சு, முட்டு, தொய்வு, வியர்வை, குளிர்ச்சி இவைகள் உண்டாகும் என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84 10. கரும்பு போன்ற இனியமொழியை உடையவளே சுரத்தில் வாததோஷம் பிரகோபமடைந்தால், அந்நோயாளியின் தேகத்திலுள்ள பொருத்துக்களில் குத்து, உளைவு, முடக்கம், நோவு, வீக்கம், சோம்பல், தலையிடி, தேகக்கருமை, சிவந்தநிறமுடன் மலம் போதல், அதிகவாய்வு, நாவில் துவர்ப்புடன் அழற்சி, குளிர், நடுக்கம் இவைகள் உண்டாகும்.

11. சுரத்தில் பித்ததோஷம் பிரகோபமடைந்தால் அந்நோயாளியின் உடம்பினுள்ளுறுப்புக்களும், மனமும் அழற்சி யுறும். தேகம் மஞ்சணிக்கும். புருவ நெறிப்புடன் வேர்வையுங் கண்ணீருந் தோன்றும். வாயில் வந்தபடி விரைவாகப் பிதற்றல். அதிக மயக்கம், சத்தி, நாவில் புளிப்புடன் கைப்புச்சுவை உண்டாகும்.

12. சுரத்தில் சிலேஷ்மதோஷம் பிரகோபமடைந்தால் அந்நோயாளியின் மனங் கலங்கும். அறிவுகெடும். இடையிடையே தேகங் குளிர்ந்து சுரங்காயும். சோம்பல் மிகும். முகமும் கால் கைகளும் அதிகம் வெளிறும். மூக்கில் இருந்தும் நீர்வடியும். வயிற்றில் நோவுடன் பொருமல் தோன்றும் உறக்கத்தில் திடுக்கிடல் உண்டாகும்.

13. அகத்தீசர் முதலிய பூர்வவாசிகள் அருளிச்செய்த மருந்து நூல்களில். வாத பித்த கப தோஷங்கள் முறையே தனித்தும் தம்முட் கூடியும் குறைந்தும் தொந்தித்து விகாரப்படுவதாலுமுண்டாகுஞ் சுரங்கள் அறுபத்திநாலு என வகுத்து அவைகளின் சாத்திய அசாத்தியங்களும் குணங்களும் அமிர்தம் போன்ற நன்மருந்தகளும் கூறியுள்ளனர். அவைகளை நீ விரும்பிக்கற்பாயாக.

14. கருங்குவளை மலர்போன்ற அழகிய கண்களையுடையவளே முற்கூறிய அறுபத்துநாலு சுரங்களில் வாததோஷக் கதிப்பால் இருபது சுரங்களும் அக்கினி சம்பந்தமான பித்ததோஷக் கதிப்பால் இருபத்து நான்கு சுரங்களும் கபதோஷக்கதிப்பால் இருபது சுரங்களும் தோன்றும். இவற்றில் வாதத்தில் தோன்றும் சுரங்கள் இருபதில் எண்வகைச் சுரங்கள் நோயாளிக்கு துன்பத்தை விளைவிக்கும் அசாத்திய சுரங்களாகும்

15. பித்ததோஷக் கதிப்பாற்றோன்றும் இருபத்து நான்கு சுரங்களில் பதின்நான்கு சுரங்களும் கபதோஷக் கதிப்பாற்றோன்றும் இருபது சுரங்களில் பத்து சுரங்களும் அசாத்தியங்களௌனப் பொதிகை மலை வாசராகிய அகத்தீசர் அருளிச் செய்தார் என நீ அறிவாயாக.

விளக்கம்:- "குன்றினில்... கொள்ளே" என்பதற்குக்கைலையங்கிரியில் எழுந்தருளியிருக்கும் சிவபிரான் அருளிச்செய்த ஆயுள் வேதம் உரைக்கும் எனப் பொருள்கூறலும் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. வாதசுரத்தின் குணத்தை உரைக்கின் தேகம் புல் அரித்துக்குளிர்ந்து நடுங்கும். கை கால் முதலிய பொருத்துக்களில் உளைவுண்டாகும் முகம் மாறுதலடையும். மினுமினுக்கும். புறங்கால் அதைத்து வெளுக்கும் அபான வாய்வு மிகுந்து மலசலம் வரளும்.

17. கால் பொருத்துக்களில் மிகவுளைவுண்டாகும். கண்கள் நீலநிறங் கொள்ளும் உடல் வெளுக்கும். விஷமேறுவது போல் வேகத்துடன் வேதனையுண்டாகும் நரம்புகள் குலைந்துவிடுவதுபோல இருக்கும். அதிகமாக இருதயத் துடிப்புத் தோன்றும். தோலில் வரட்சி இசிவு இவைகள் உண்டாகும்.

18. தேகம் குளிர்ந்து நடுங்கி குலைப்பனுண்டாகும். தாகம் மிகும். பற்களில் கூச்சம், குத்து உளைவு உண்டாகும். கொட்டாவி தேகமெரிவு இவற்றோடு அழகிய தொடை, விலாப்புறம் சிரசு இவைகளில் வாயு அதிகரித்து கூரிய ஆயுதத்தால் துளைத்தல் போன்ற துன்பம் உண்டாகும்.

19. இளமூங்கிலையொத்த அழகிய தோள்களை யுடையவளே! வாதபித்த சுரத்தின் குணத்தை கூறின் காதடைத்திரையும், நாக்கும் கண்ணும் மஞ்சல் நிறமடையும் வாய்வு மிகும். சுரம் விடாமல் காயும். ஓங்காளம் தூக்கம் குளிர் மயக்கமும் உண்டாம்.

20. மேலும், வாத பித்த சுரத்தின் தன்மையைக் கூறின் சோம்பல், திமிர், மூச்சு, திகைப்புடன் தேகங் குளிர்ந்து சிலிர்த்து அழகும் பலமுங் குறைந்து, காய்ச்சலும் பிதற்றலும் உண்டாகும் என்க.

* 21. சீதவாத சுரத்தையுரைக்கக் கேட்பாயாக தேகம் மிக நடுங்கும் குளிர்ந்து விறைத்துப்போகும். சோம்பலுடன் நெட்டி முறிக்கும். அன்றியும் விக்கல் மலக்கட்டு பிதற்றல் பயங்கொள்ளுதல் தலையிடித்தல் வியர்வைகாணல் ஆகிய குணங்களும் உண்டாகும்.

* 23. மயில் போலுஞ் சாயலை உடையவளே! வேகம் பொருந்திய மாசீதவாத சுரத்தை சொல்லக்கேள். அதிகதாகம் உண்டாதல் மலசலமடைத்தல் தேகம் விறைத்துப் போதல் இளைப்பு நெஞ்சு விலாப்புறங்களில் பொறுப்புக்காணல் உடுக்கை அடித்தாற்போன்ற நரம்புத்துடிப்போடு தலையிடித்தல் எழுந்து நடக்கிற்றள்ளாடி விழல் ஆகிய உபத்திரவங்களுடன் சுரங்காயும் என அறிதி.

---

[ * ஐ.பொ. தரும் 21ம் செய்யுளுக்குப்பின் 23ம் செய்யுளும் அதற்குப்பின்னரே 22ம் செய்யுளும் "வைத்தியன்" பதிப்பில் உள்ளன.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. எலும்பில் வாததோஷம்மீறி அடிக்கடி சுரங்காயும். உண்ட உணவு செமியாது, பலதன்மையான சுவையுடைய பொருள்களில் நோயாளி இச்சைகொள்ளுவான், அறிவு மயக்கத்துடன் கைகால் ஓய்ந்து தேகம் மெலியும். இத்தகைய குணங்களிருப்பின் அந்நோயை அத்திசுரம் என்று நீ கூறுவாய்.

24. ஆரம்பத்தில் உடம்புகணகணப்பாயிருந்து நாளேற வேறச் சுரம் அதிகரித்துக் காயும், மலசலம் குறையும், நாக்கு, தொண்டை, மலசல வாயில்களிற் புண் உண்டாகும், தண்ணீர்த் தாகம், உள்ளழற்சி மிகும், வெப்பமாக மலங்கழியும். இதனை வாதகணசுரமென நீ கூறுவாயாக.

25. வாத தோஷத்தோடு சீதளந் தொந்தித்து, எழு வகைத் தாதுக்களாலான உடம்பில் குளிர் கண்டு, சுரம் உண்டாகும். கால், கை முதலிய உறுப்புக்களிலுள்ள பொருத்துக்கள் உளைந்து நோவு காணும். மூக்கிலிருந்து நீர்சுரந்து வடியும், இருமல், வாந்தி, மயக்கந்தோன்றும். இதனை வாத நானாளை மாறற் சுரமென நீ கூறுக.

(வி-ம்) :- இதுபோன்ற சுரங்களை, அகத்தீசர் மலைச்சுரம் என்பர். மேல்நாட்டு வைத்தியர் கூறும் "Malaria fever" உடன் ஒப்பிடுவர். இந்நூலாசிரியர் விஷம சுரமென்ற பெயரால் சில இடங்களில் கூறியிருக்கின்றார்.

26. மணங் கமழும் மலரணிந்த கூந்தலையுடையவளே! வாத மாந்த சுரத்தின் குணத்தைச் சொல்லின், வயிறு பொருமித் துர்நாற்றமுடன் புளிப்புக்கொண்டு மலங்கழியும். உடம்புமெலிந்து அதிகசுரம் காயும். உவாந்தி, மூச்சு, தாகம், தாபம், மயக்கம், பிரமை அதிகரிக்கும் என அறிக.

27. இரைப்பை முதலிய உறுப்புக்களிலுள்ள சீரணாக்கினி குறைந்து மலசல மடைத்து, விக்கல், உழலை, வாந்தி தோன்றிச் சுரம் விடாது காயும். முகம் அதைக்கும். வயிறு பொருமும். இக்குணங்கள் வாத மாந்த கண சுரத்திற் பொருந்திய உபத்திரவங்கள் என்று சொல்.

28. வயிறு பொருமும். இளைப்புண்டாகும். புளிப்புடன் நாற்றமுள்ள ஏப்பம்வரும். உடம்பில் அதிக அழற்சியுடன் சுரங்காயும். கைகால்களிற் குளிர்ச்சி உண்டாகும். அதிக தண்ணீர் பருகும். உடம்பும் முகமும் வெளுப்படையும். இக்குணங்களையுடைய நோயை ஆயுள்வேத நூலை உணர்ந்த பெரியோர்கள் வாத அதிசார சுரம் என்று கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. வயிற்றில் பசியின்றி மந்தித்து, வாய்வு மிகுந்து அடிக்கடி ஊதல் உண்டாகும். உடம்பில் கணகணப்பான சுரங்காயும். தசை வரண்டு குறையும். இதனை ஆயுள்வேத நூலோர் வாத அசீரண சுரமென்று கூறுவர்.

30. தேகம் மிக வீங்கும். தொண்டையில் வாய்வு மிகுந்து அடைப்புண்டாகும். அக்கினிபோல அழற்சியுடன் விஷமத் தன்மையுள்ள சுரங்காயும். கால் கைப் பொருத்துக்களிற் பிடிப்பும் முடக்கமும் செய்யும். அறிவு மயங்கும். வாயால் இரத்தங் கக்கும். இதனைப் பெரியோர்கள் உதிரிவாத சுரமென உறுதியுடன் சொல்வார்.

31. வாதமும் சிலேற்பனமும் தத்தமக்குரிய மாத்திரையின் மிகுந்து தொந்தித்து இச்சுரம் உண்டாகின்றது. இதன் குணம் உவாந்தி, உள்மூச்சு, இருமல், இரைப்பு, கை, கால்களில் வீக்கம், காதடைப்பு, குளிர் நடுக்கம் ஆகிய உபத்திரவங்களுடன் சுரம் விடாமற்காயும். இதனை மிகு வேதனையைத் தருகின்ற வாத சிலேற்பன சுரமெனக் கூறுக.

32. தலையிடிக்கும், பற்களை 'நற நற' வென்னுஞ் சத்தத்துடன் கடிக்கும். சீறலோடு இருமல் மிகுந்து உவாந்தி எடுக்கும். கை, கால்களைத் தூக்கிப் பூமியிலடிக்கும். கண்களும், முகமும் மினுமினுப்பாய் இருக்கும் இருதயம் அதிவிரைவாய்த் துடிக்கும். நா வரளும் மயக்கமுண்டாகும் தேகம் நடுங்கும். பலம் குன்றும். விடாமற் சுரம் காயும். இது வாதம் மிகுந்த சன்னி பாத சுரத்தின் குணமென அறிக.

(வி-ம்) :- சன்னி பாத சுரத்தில் வாத, பித்த, கபங்களாகிய முத்தோஷங்களும் கோளாறடைந்து தொந்தித்திருக்குமாயினும், இச் சுரத்தில் ஏனைய தோஷங்களிலும் வாததோஷமே மிகுதியாக அதிகரித்துக் கோளாறடைந்து இருப்பதால், இதனைச் சிறப்பாக வாத சன்னிபாதசுரமென்னும் பெயரிட்டுக்கூறினர் ஆசிரியர் என்க.
இச் சுரத்தைத் தற்காலம் 'நெருப்புக்காய்ச்சல' (Typhoid) லில் ஒருபகுதி எனக் கூறுவர்.

33. பல வார்த்தைகளைப் பேசிக் கோபிக்கும். குளிருடன் சுரங்காயும். முகம் விகாரமடைந்து தேகக் கனப்புண்டாகும். அடிக்கடி பெருமூச்சு விடும். தலை நடுங்கும். சுர வெப்பத்துடன் கூடிய வாய்வு சிரத்திலேறி இடியையுண்டாக்கும். பொருத்துக்களில் குத்தல், குடைதல் முதலிய வாதத்திற்குரிய உபத்திரவங்கள் தோன்றும் அறிவு கெடும் என அறிக.

(வி-ம்) :- சுர வெப்பத்தால் வரட்சியடைந்த வாததோஷம் மேலேறி மூளையிலுள்ள உணர்ச்சி நரம்புகளை விகற்பித்து அறிவை மயக்கி நோயாளியைப் பூதாவேசங்கொண்டவரின் தன்மையைப் போல் இருக்கச் செய்வதால் இதற்குப் பூதசுரமெனப் பெயருண்டாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. வளையலணிந்த கைகளையுடையவளே! பிரேத சுரத்தின் குணத்தைக் கேள். அதிகமாகச் சுரங்காயும் மலங் கழியும் தலையிடிக்கும் உடம்பில் நடுக்கமுடன் கனம். மிகும் உளைவு, குத்து உண்டாகும். ஊறுபட்ட தன்மையைப்போல் கைகால்கள் அசைவற்றுக் கிடக்கும் உடம்பின் ஒருபக்கத்தில் வேர்வையுண்டாகுமெனப் பெரியோர் கூறுவர்.

(வி-ம்) :- இச் சுரத்தில் வாததோஷம் சீதளத்துடன் சேர்ந்து உணர்ச்சி நரம்புகளை விகற்பித்து அறிவைக் கெடுத்து நோயாளியின் உடலைச் சவம்போல் அசையவிடாது கிடக்கச் செய்வதால் பிரேத சுரமெனப் பெயர்பெற்றது.

35. மென்மேலும் அதிகரித்துச் சுரங்காயும். உடம்பில் அழற்சி மிகும் முகம், கண் முதலிய உறுப்புக்களில் குத்துடன் நோவுண்டாகும் கால் கைப் பொருத்துக்களிலுள்ள தசைகள் திரண்டு வீக்கமுற்றுக் கொதிக்கும். மூத்திரத் துவார வழியால் சீழ் , இரத்தம் வெளிப்படும். இதனை மாங்கிஷப் பிரதாப சுரமெனக் கூறுக.

(வி-ம்) :- இச்சுரம் அளவுகடந்த சம்போகத்தாலும், உண்டாகும் தன்மையுடையது. இதற்குத்தகுந்த சிகிச்சை செய்யாவிடில் நோயாளி பிரமேக வாதத்தால் பீடிக்கப்பட்டு வருந்துவான்.

36. குரற் கம்மலுடன் இருமலுண்டாகி அதிக சளிகக்கும். உடம்பு முழுவதும் அதைத்துத் துவரைக்காய் போன்ற பருமனுள்ள கொப்புளங்கள் உண்டாகும். அக்கொப்பளங்கள் நாளடைவில் காய்ந்து, அரம் போன்ற சொரசொரப்புள்ள அசடுண்டாகி உதிரும். இது மாங்கிஷ வைசூரிச் சுரமாகும்.

(வி-ம்) :- இச் சுரத்தை அம்மைச் சுரமென்னும் பெயரால் அழைப்பர் சிலர். இது தொற்றுந்தன்மையதுஆதலினால் இந்நோயாளியை அரசினருதவியுடன் தனியிடத்தில் வைத்து பரிகரித்து பரல்வேண்டும். இன்றேல் இந்நோய் அயலிடங்களிலுள்ளோர்க்கும் பரவி மிகுந்த துன்பத்தையுண்டாக்கும் என அறிக.

37. சுரம் இடைவிடாமற் காயும்; தண்ணீர்த் தாகம் மிகும்; உடல்மூற்ச்சியுறும்; மலசலம் கட்டுப்பட்டு அதனால் தேகத்தில் துர்நீர் தங்கி மினுமினுப்பான அதைப்பும், சொறிவுமுண்டாகும்; புறந்தாள் வீங்கும்; மயக்கமும், உவாந்தியுமுண்டாகும்; இதனை ஆயுள்வேத முறையுணர்ந்த பண்டிதர் சோபைச் சுரமெனக் கூறுவர்.
(வி-ம்) சோபம் என்பது எதுகை நோக்கிச் சோகமெனத் திரிந்து நின்றது. சோபை வீக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. உடம்பிற் செறிந்த விஷநீர்களாலும் படுவான் பருமுதலியவற்றின் விரணங்களாலும் இச்சுரம் உண்டாகும் தன்மையுடையது. இதன்குணம் சுரமுண்டாக்கி அதிகரித்து, விடாமல் காயும் வேதனை மிகுதியால் நோயாளி தன்னைத் தூக்கித் தாங்கிப்பிடிக்கச் சொல்லுவான் பின் நிலைகொள்ளாது விழுவான் ஓயாத தலைவலியாலும் சிரம் பிடரி இவற்றில் உள்ள நரம்புகளை, இசித்து (வலித்து) இழுக்கும் தன்மையினாலும் வருத்தமுறுவான். இதனை நீ விரணவாத சுரமெனக் கூறுக.

(வி-ம்):- இதனைச் சிலர் ஈப்பு (ஏற்பு)ச் சுரமென்றும் கூறுவர்.
வாதத்தில் வருஞ் சுரங்கள் இருபதும் முற்றிற்று.

- 39. மூன்றாம், ஏழாம், நாட்கள், பிறந்தநாள் கஷ்டசாத்தியம், ஆகவே விலக்கிய இந்நாட்களைவிட்டு, நவசுரம் விலக்கி, மருந்து கொடுக்க வேண்டும் என்று முனிவர் கூறினார்.
(இதை உரையாசிரியர் சேர்க்கவில்லை)

40-41. பற்றுதற்கியலாத அழகிய நுண்ணிடையாரே! பித்த சுரத்தின் குணத்தை சொல்லக் கேண்மின். வெப்பம் மிகுந்த வக்கினிபோல் சுரங்காயும். வாய் வரண்டு தடுமாற்றத்தடன் கொன்னித்துப் பிதற்றச் செய்யும். கண்கள் சிவப்பாகவோ மஞ்சலாகவோ நிறங்கொள்ளும். இடையிடையே மலங்கழியும். தண்ணீர்த் தாகமிகும். அறிவுகெடும். முகம் கறுக்கும். தொடை நாக்கு இவற்றில் புண்ணுண்டாகும் கை கால் மஞ்சலிக்கும். வாய் கசக்கும். இரத்தாசயம் மிகக் கொதிப்படையும். மனம் திகைக்கும் என நீவிர் அறிந்து கொண்மின்.
(வி-ம்) இவை இரண்டு செய்யுளும் ஒருதொடர்பொருளுடையன இச் சுரத்தில் பித்த நீர் அதிகமாய் இரத்தத்துடன் கலப்பதால் கண் முதலிய உறுப்புக்கள் மஞ்சல் நிறமடைகின்றன.

42. முன்னர் தனித்து கோளாறடைந்த பித்த தோஷம் இருபங்கும் வாததோஷம் ஒரு பங்கும் அதிகரித்துத் தொந்தித்துண்டாகுஞ் சுரம் வாதபித்த சுரமெனப் பெயர்பெறும். அதன்குணமுரைக்கின் அதிக சுரத்துடன் தேகம்பொருமி மஞ்சல் நிறம் கொள்ளும். கால் கை முதலிய உறுப்புக்களிலுள்ள பொருத்துக்களில் உளைவுண்டாகும் சத்தியெடுக்கும் கண் வெளுக்கும் வயிற்றில் வாய்வு மிகுந்து மந்தமுண்டாகும் என அறிக.

43-45 பித்த சேற்பன சுரத்தின் குணத்தைக் கூறக்கேள் மனத்தளர்ச்சியுடன் புத்தி சபலப்பட்டு இன்னது செய்வது தவிர்ப்பதுஎன்பதை உணராது தடுமாறும். தொண்டையில் கரகரப்புண்டாகிப் புகைந்து இருமலுண்டாகும்.சுரம் விடாமல்காயும் மலசலம் மஞ்சல் அடையும். நித்திரையின்றி உழற்சியுண்டாகும் புறங்கால் முகம் என்பவற்றில் வீக்கமுண்டாகும் பெருமூச்சு இளைப்பு விக்கல் வியர்வை நாவரட்சி அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 உண்டாகும் நாவில் வழுவழுப்புடன் ஆகாயத்தின் இடிமுழக்கம் உண்டாவதுபோன்ற வேதனை தோன்றி விலாப்புறங்களில் குத்து உளைவு மிகும் என அறிக.

(வி-ம்) இச்சுரத்தில் கல்லீரலும் சுவாசநாளமும் வீக்கமுறுவதால் புறங்கால் முதலியஉறுப்புக்களில் வீக்கமுண்டாகின்றது இதுவும் சுவாத சுரங்களில் ஒன்றாகும். இது பெரும்பாலும் ஒருபக்க சுவாசநாளத்தில் தோன்றுவதால் சாத்திய சுரங்களில் ஒன்றாகவைத்து ஆசிரியர் கூறியிருப்பினும் ஏழுநாட்களில் குணமடையாது மேலுமிச்சுரம் தொடர்ந்து நிற்கில் இருபுறச் சுவாச நாளங்களையும் விரணமடையச் செய்து இரு வாரத்திற்கு மேலும் செல்லும் தன்மையுடையதாதலின் அறிவாளிகளான மருத்துவர் இதனை நன்கு கவனித்து ஏற்ற சிகிச்சை செய்ய வேண்டும் இன்றேல் அசாத்தியமாய் முடியும் இதன் அசாத்திய குணத்தை மேல் 54. 55. வது செய்யுட்களில் கூறியிருப்பதை காண்க

46. கருங்குவளை மலரனைய கண்களையுடையவளே! பித்ததாக சுரத்தின் குணத்தை கூறக்கேள். அதிக வேகத்துடன் சுரங்காய்ந்து நாவிற்றுவர்ப்புண்டாகி வரட்சியுண்டாகி அடிக்கடி கடிக்கும். அறிவு மயங்கும் பரதவிக்கும் மலசலம் வெப்பமடையும் என அறிதி.

(வி-ம்) கோப மென்பது எதுகை நோக்கி கோவ மெனமருவியது ஏனைய சுரங்களிலும் மிகுதியாக இச்சுரத்தில் நோயாளிக்கு தாகமுண்டாவதால் இதற்குத் தாகசுரமெனப் பெயருண்டாயிற்று.

47. பித்த விஷ சுரத்தின் குணத்தைக் கூறக்கேள்: உடலை நடுக்கி ஒருபுறம் அதிக வெப்பமாய் சுரங்காயும் மறுபுறம் மிகக் குளிர்ந்து வியர்வையுண்டாகும். தலையிடிக்கும் வாயுமிகுந்து பொருமலுடன் இரைச்சல் காணும். இவற்றோடு நாவரட்சி நித்திரையின்மையாகிய உபத்திரவங்கள் உண்டாகும் என அறிக.

48.49 உயர்ந்த பரந்த இளமுலைகளை உடையவளே! பித்த அத்தி சுரத்தின் குணத்தைக் கூறக்கேள் பித்ததோஷமதிகரித்து நாளடைவில் தேகபலத்தைக்குறைத்து கைகால்களில் குத்தி நோவுண்டாகி இரவில் நித்திரையின்றி உடம்பில் சிறு கொதிகண்டு நாளேறஏற சுரமும் அதிகரித்து தேகம் வரண்டு மெலிந்து என்பு வெளிப்பட்டு அசைவற்ற சித்திரப் பாவை போலாகும். உடல் முகம் கை கால் கண் முதலியன உறுப்புக்களில் எரிவுண்டாகும். நாவரண்டு கசக்கும். சிறு நீர் சிவந்து கடுத்துச் சுருக்கென்று வேதனையுடனிறங்கும். அறிவு மயங்கும் என்பு அக்கினியாற் றகித்ததுபோற் பச்சைத்தன்மையற்று நீறு மென அறிஞர் கூறியுள்ளார் இதனை நீ அறிக

(வி-ம்) இச்சுரமானது தனது வெப்பத்தினால் ஏழுவகைத்தாதுக்களின் முன்னுள்ள இரசமுதல் மேதோதாதுவரையுள்ள நான்கு தாதுக்களையும் முறையே தகித்து வளரச்செய்து பின் அஸ்தியாகிற என்பிற் செறிந்து அதிலுள்ள பச்சைத்தன்மையைக் கெடுத்து சுண்ணத்தை நீற்றி சலத்துடன் வெளிப்படுத்தி நோயாளியை வருந்தச் செய்து நாளடைவில் சயரோகமாக மாறி உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் தன்மையுடையது ஆகவே ஆரம்பத்தில் இதற்கு தக்க சிகிச்சை செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50 ஆரந்தாங்கும் பாரமுலையாய்! முன் (47ம் செய்யுளிற்) கூறிய பித்தவிட சுரமானது நாளடைவில் தொடர்ந்து நின்று அஸ்தி தாதுவைப் பற்றும். இரவில் நடுச்சாமத்தில் நோயாளி நாவரண்டு தாகமுண்டாகித் தண்ணீர் குடிப்பான். கண் முகம் உள்ளங்கால் முதற் சரீரமெங்கும் அழற்சியுண்டாகும். இவ்வேளையில் விஷத்தோடு கூடியபித்தம் சிலேற்பனத்தோடு தொந்தித்து அதிக சுரத்தை பிறக்கச்செய்து அதனால் மூச்சு முட்டுச் சளியுடன் மர்மத்தானத்தில் நோவுமிகுதியாகிய உபத்திரங்களை செய்து பின்னர் அஸ்திதாதுவில் அடங்கும் என்று ஆயுள்வேதம் கூறுவதைஅறிக.

(வி-ம்) பித்தத்தின் அரசியற் காலமாகிய நடுநிசி வேளையில் இச்சுரமானது தோன்றி சிலேற்பன அரசியற் காலமாகிய இருபது நாழிகையின் மேல் இருமல் முதலிய உபத்திரவங்களைச் செய்து வாதத்தின் அரசியல் காலமாகிய உதயத்தில் இச்சுரத்தின் வேகம் குறைந்து உள்ளடங்கி அஸ்திதாதுவைப் பற்றிநின்று மீண்டும் குறித்த காலத்தில் தோன்றும் இது விஷமசுரத்தின் மிகக்கொடிய தன்மையுடையது.

51. பித்த அதிசாரசுரத்தின் குணத்தை கூறக்கேள். நோயாளியின் வயிற்றில் மந்தமுண்டாகி உணவில் வெறுப்புற்று பின்னர் இச்சுரம் தோன்றும் இதன் குணம் கழிச்சல் மிகுந்து தண்ணீர்த் தாகமதிகரித்து நாவில் வரட்சியுண்டாகும். கையும் காலும் வெச்செனக் குளிர்ந்திருக்கும். இதுஆயுள்வேத விதியென அறிக.

(வி-ம்) இச்சுரத்தில் பித்ததோஷ மதிகரித்திருந்தாலும் கால் கை குளிரும்காரணத்தால் சாகைகளில் சிலேற்பனாதிக்கமுமுண்டு. எதனாலெனின் "கபமான நீரதை யின்றி வேர்வை குளிர்ச்சி காணாதே" என இந்நுலாசிரியர் முன்னர் கூறியிருத்தலாலென்க.

52. (பொ-ரை):- அழகு விளங்கும் தனத்தையுடையளே! பித்தமாறற் சுரத்தின் குனத்தையுரைக்கில் ஆரம்பத்தில் குளிருண்டாகிப்பின் சுரமுண்டாகும். அச்சுரம் படிப்படியாக அதிகரித்துக் காயும் இவற்றோடு இருமல் பொறுப்பு வாய்வு உவாந்தி விக்கல் மயக்கம் புலப்பமுண்டாகும் அன்றி நோயாளி வேதனை தாங்காது வெளிச்செல்ல விரும்பி யெழுந்தால் தலைசுழன்று பூமியில் வீழ்த்தவும் செய்யுமென அறிக

(விளக்கம்):- மாறற் சுரமாகிய விஷமசுரத்தில் பல பேதங்களுணடு. அவற்றில் ஐந்து சுரங்களையே விசேஷமாக நுாலசிரியர்கள் கூறினர் அவை:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 1-வது விடாக்காய்ச்சல்:- இதில் திரிதோஷங்களும் கோளாறடைந்து தொந்தித்து சுமார் பத்து பன்னிரண்டு தினங்கள்வரை அதிவேகத்துடன் காய்ந்து எழுவகைத் தாதுக்களையும் கெடுத்து நோயாளியை அபாயத்துள்ளாக்கும் தன்மையும் உடையது.

* 2-வது:- பகலில் ஒரு முறையும் இரவில் ஒருமுறையுமாக நாளொன்றுக்கு இருமுறை விட்டுவிட்டு இரத்த தாதுவைப் பற்றி வருந் தன்மையது இதனை வடநூலார் சததசுரம் என்பர்.

* 3-வது:- வாதக் கோளாறுடன் மாமிசதாதுவை பற்றி நின்று நாளொன்றுக்கு ஒருமுறை குறித்த நேரத்தில் ஒன்றி வரும் தன்மையுமுடையது. இதனை வடநூலார் அந்நியேத்துஷ்கம் என்பர்.

* 4-வது:- வாதபித்த தொந்தத்துடன் மேதோதாதுவையிடமாகக் கொண்டு சுரந்தோன்றி பின்னர் குறித்த நேரத்தில்விட்டு மறுநாள் வராது மூன்றாநாள் குறித்த நேரத்தில் வரும் தன்மையது. இதனை வடநூலார் திரிதீயகசுரம் என்பர்.

* 5-வது:- வாதகப தொந்திப்புடன் அஸ்தி மஜ்ஜை இவற்றை இடமாகக் கொண்டு சுரங்காய்ந்து இடையில் இரண்டுதினம் விட்டு நான்காவது நாள் குறித்த நேரத்தில் தோன்றுவது. இதனை வடநூலார் சதுர்த்தகசுரம் என்பார்.

இஃதன்றி கிழமை, பட்சம் மாதம் முதலிய காலங்களில் இவ்விஷ சுரங்கள் இடைவிட்டு வருவதுமுண்டு. இவைகள் போன்றவையும் விஷசுர பேதங்களாம். நிற்க, 'பித்தப்பையின் வீக்க வித்தியாசத்தால் அந்நியேத்துஷ்க சுரமும் மண்ணீரல் வீக்கமும், கல்லீரல் சுரக்கமும் கொள்வதால் சதுர்த்தக சுரம் தோன்றுவதாகவும், இவ்விஷ சுரத்தை உண்டாக்குவது ஓர்வகை நுளம்புகள் என்றும், ஆங்கில மருத்துவநூல் ஆசிரியர்கள் கூறுவர். இதனை மறுத்து அழுக்கும் அதிலுண்டாகும் விஷவாயுவுமே விஷசுரத்திற்கு காரணமென்றும் இச்சுரத்தை பரவச் செய்வதே நுளம்புகளின் செய்கையென்றும் சிலர் கூறுவர். இஃது எங்ஙனமாயினும் தமிழ் மருத்து நூலோர் இச்சுரம் அசுத்தநீரைப்பருகுதல், அசுத்தக்காற்றைச் சுவாசித்தல் ஆகிய காரணங்களால் தோன்றும் தன்மையுடையதுஆதலால் இதற்கு விஷசுரம் அல்லது மலைச்சுரம் அல்லது காட்டுக்காய்ச்சல் எனப் பெயர் கொடுத்துப் பலபேதங்களாகத் தோஷங்களின் பெயர்களில் வைத்துக்கூறினர்.

---

* 1 அஷ்டாங்கஹ்ருதயம், நிதானஸ்தானம் (துரைசுவாமி ஐயங்கார் பதிப்பு சென்னை 1931 பக்கம் 400 விஷம ஜ்வரம்)

* 2 சததசுரம் = ஸதத ஜ்வரம் (பக். 401)

* 3 அந்யேத்யுஷ்க ஜ்வரம் (பக். 402)

* 4 த்ருதீயக ஜ்வரம் ( ,, )

* 5 சதுர்த்தக ஜ்வரம் ( ,, ) (வ.சிவப்பிரகாசம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. பித்ததோஷம் அதிகரித்து உண்டாகும் சந்நிபாத சுரங்களில் தவணை கழிந்தபின் அதன் விசேட உபத்திரவங்கள் குறைந்து போய் நோயாளிக்கு சிறிது வலியுண்டாகி சுரங்காயும். தண்ணீர்த் தாகமும் தேகவெப்பும் உண்டாகும். இதனைப் பித்தஅசீரண சுரம் என்று கூறுவர்.

வி-ம் சந்நிகளுக்குக் கூறிய தவணை நாட்கழிந்தபின்னும் சில சந்நிகளில் வாத, கபங்களின் கோளாறுகள் காரணமான உபத்திரவங்கள் தணிந்து எஞ்சிய பித்ததோஷத்தின் காரணமாய் இச்சுரம் தொடர்ந்து நின்று இரைப்பை முதலிய சீரணக் கருவிகள் பத்தியபாக பரிகரிப்பினால் இயற்கை நிலைஅடைந்தபின் நீங்கும் தன்மையுடையது ஆதலால் இந்நிலையிலுள்ள சுரத்தைப் பித்தஅசீரணசுரம் என்னும் பெயருடன் சாத்திய சுரங்களில் ஒன்றாகவைத்து ஆசிரியர் கூறினார் என அறிக.

54-55. பித்தசிலேற்பன தொந்தத்தால் உண்டாகும் அசாத்திய சுரத்தைக் கூறுகில், அதிகமாகச் சுரங்காயும். தொண்டையிற் கபம் கட்டிக் கனப்புடன் இருமல் இளைப்பு நாவழுவழுப்பு வரட்சி அதிகவேர்வை மயிர்க்கூச்செறிவு சளிகக்கல் தேகக்குளிர்ச்சி மயக்கம் சித்தப்பிரமையுண்டாம்.

(வி-ம்) : இச்சுரத்தில் இருபுறச்சுவாசநாளங்களும் விரணப்படும். இதனால் நோயாளி மிகவும் வருத்தமுறுவான். சிலருக்கு இச் சுரம் இருவாரங்கள் தொடர்ந்து நின்று உபத்திரவம் செய்து அபின்னியாசம் என்னும் சன்னியைப் பிறப்பித்து மரணத்தையும் தரும் தன்மையுடையது ஆதலின் ஆசிரியர் இதனை அசாத்திய சுரங்களில் ஒன்றாக வைத்துக்கூறியதும்மன்றி 45ம் செய்யுளையே 54ல் சிறிது மாற்றத்துடன் அனுவாதமும் செய்துள்ளார்.

இதனைப் பிறநூலார் 'நியூமோனியா' எனக் கூறுவார். இச்சுவாசாசயசம்பந்தமான சுரங்களின் விரிவை இந்நூலார் திரிதோஷ நிதானம் கூறுமிடத்துச் சிலேற்பன பகுதியிலும் செகராசசேகரநூலார் சுவாதநிதானம் கூறியவிடத்தும் விரிவாகக் கூறியுள்ளார்கள் ஆண்டுக் காண்க.

56. குளிர் பைத்தியக்குணம் மூர்ச்சித்தல் ஊமைபோல விளங்காத மொழி பேசுதல் குளிர் மேலும் மிகுதல் கண் தலை காது மந்தமாதல் ஆகிய இவை பித்தசன்னி சுரத்தின் குணங்களாகும்.

57. பித்த சீதசுரம் செய்கின்ற குறிகளை பேசுகில் உன்மத்த சித்தமுடையவனாவான் மிகவும் மயக்கமும் தோன்றிக் குளிருடன் காயும் சுரத்தின் வேகம் மேலும் மேலும் பற்றிக் கொள்ளும். பயம் ஏற்படும். தாகம் அதிகரிக்கும். உறக்கம் இல்லாமல், கைகால்களை நீட்டிடுவான். சித்திப்பிரமை தோன்றும்.

58. பொன் போன்றவளே! திரிபுரம் எரித்த சிவபெருமான் சொன்ன ஆயுள்வேதத்தில் பித்தசய சுரத்தின் குணம் இது என்று கூறப்பட்டுள்ளது: சுரத்தோடு இருமலும் உண்டாகும். தொண்டைபுகைத்துக் கட்டிக்கொள்ளும். கை முகம் கண் வெளிறி கருமையும் சேர்ந்திருக்கும். நாக்கு அரம்போல சொரசொரப்படைந்தும் வெளிறியும் தோன்றும் அதில் அசறு ஏற்பட்டு நாற்றம்வெளிப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. இருமல் இரத்தமாக வாந்தியெடுத்தல் மயக்கமுண்டாதல் சுரம் தேகவீக்கம் வயிற்றுப்பொருமல் மலசலம் கட்டுப்படலாகிய குணங்களுடன் நோயாளி மிகவும் வருந்திக் கிடப்பான் இதனை இரத்த பித்த உதிரிச்சுரமென ஆராய்ந்து அறிந்துகொள்க

(வி-ம்) இச்சுரம் இரத்த பித்த ரோகத்தை ஆதாரமாகக் கொண்டு தோன்றும். இரத்த பித்த ரோகம் ஊர்த்துவமுக இரத்த பித்தம் அதோமுக இரத்த பித்தம் உபய முக இரத்த பித்தமென மூவகைப்படும். ஊர்த்துவமுக இரத்த பித்தமாவது வாய் மூக்கு வழியாக இரத்தம் வெளிவருவது அதோமுக இரத்த பித்தமாவது மல சலவாயில் வழியாக இரத்தம் வெளிவருவது. உபயமுக இரத்த பித்தமாவது மேற்கூறிய இருபகுதிகளாலும் இரத்தம் வெளிவருவது ஈண்டு கூறியது வாய்வழியால் வெளிவரும் இரத்த பித்தத்தோடு கூடிய சுரமாகும் இதன் விரிவை இந்நுலின் பித்தரோக நிதானத்திலும் அஷ்டாங்கஹ்ருதயம் மாதவ நிதானம் முதலிய நுல்களிலும் காண்க.

60. பறவைகளின் இறகின் அடியை நிகர்த்த வெண்பற்களையுடையவளே! கைகால் எரிவுடன் வெடித்துப் புண்ணாகி அசறுபற்றி துர்நாற்றம்மிகும். அக்கினி போல் சுரம் காய்ந்து வருத்தும் வாந்தி உள்மூச்சு உண்டாகும். மலசலம் மஞ்சள் நிறமடையும். செவ்விதாகிய காதில் இரைச்சல் உண்டாகும். இதனை கரபாதபித்தசுரம் என நீ சொல்வாயாக.

(வி-ம்) : இச்சுரத்தின் வெப்பத்தினால் உள்ளங்கால் உள்ளங்கைகள் வெடித்துப் புண்ணாகும். சீழ் உண்டாகி நாற்றம் மிகும். இது மேகநோய் சம்பந்தம் உடையார்க்குப் பெரும்பாலும் தோன்றும் தன்மையுடையது.

சுத்திக்கிரமம் பற்றிய குறிப்பு:

இந் நூலில் சில இடங்களில் மருந்து செய்யும் முறையை எழுதும் போது, 'சுத்திசெய்தரசம்' என்று குறிப்பிடுகிறார். தாவரவர்க்கத்தில் நச்சுச் சரக்குகளும் வருகின்றன. (உ-ம்) பா.159,161,164 நேர்வாளம் சுத்திசெய்யும் முறை பா.158ல் விளக்கப்பட்டுள்ளது.

கல்லுச்சரக்குகள், தாவரவர்க்கத்தில் நச்சுப் பொருட்களுக்கு வேண்டியசுத்திசெய்வது மிக அவசியமாகும் இடியில் இருந்து தப்பினாலும் தப்பலாம்; சுத்திசெய்யாத மருந்துகளில் இருந்து, மனிதன் தப்பமுடியாது; உயிர் மீளமுடியாத நிலைக்கு ஆளாவான் என்கிறது சரகசம்ஹிதை. சுத்திமுறை பற்றிய நூல்களை மாணவர் கருத்து ஊன்றிக் கற்பாராக.

\- வ.சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. (பொ-ரை):- செம்பஞ்சனைய மிருதுவான அழகிய பாதங்களை யுடையவளே! மார்பின் மேலுள்ள உறுப்புகளிற் சுரங்காயும். வாந்தி, உள்மூச்சு, முட்டு, இளைப்புண்டாகும். கண், முகம் வெளுக்கும், உடம்பு மஞ்சள் நிறமடையம். சிறுநீர் இரத்தத்தோடு கலந்து சிவந்து அதிகமாக வெளிப்படும். இதனைப் பித்த இரத்த சுரமென்று நீயறிந்துகொள்.

(வி-ம்):- இச்சுரத்தில் அதோமுக மார்க்கமாகிய மூத்திரத்துவாரத்தில், இரத்தம் வெளிவரும் காரணத்தால் இது அதோமுக இரத்த பித்த ரோகத்தின் சார்பில் உண்டாவதென அறிக.

62. (பொ-ரை):- சுரத்தோடு தாகம், மயக்கம், சோர்வு, நாவரட்சியுண்டாகும். சிறுநீர் கடுத்துத்துர்நாற்றமுள்ள மஞ்சளித்த சீழுடன் வெளிப்படும். வாய்வு அதிகரித்து உணவு குறையும் எந்நேரமும் தேகத்தில் அக்கினிபோற் காந்தலுண்டாகும். இது பித்தப் பிரமேக சுரமாகும்

(வி-ம்):- இச்சுரம் அளவுகடந்த சம்போகத்தாலும் அதிக உஷ்ணத்தினாலும். கெட்ட நடையுள்ள பெண்களின் சேர்க்கையாலும் மாறுபட்ட உணவு முதலியவற்றாலும் இந்திரியவாகி, மூத்திர நாளம் முதலிய உறுப்புக்களிற் சூடுகொண்டு விரணமுண்டாகிப் பீஜகோசங்கள் வீங்கிச் சீழ்வடியும் தன்மையது. இதனைப் பிறநூலார் கொனோறியா(gonorrhoea) என்பர். இந்நோயின் காரணத்தையறிந்து தக்க சிகிச்சை செய்யாவிடில் பல அசாத்திய நோய்களை உண்டாக்கும் தன்மையுடையது.

63-64. (பொ-ரை):- அக்கினிபோல் அதிகரித்துச் சுரங்காயும். நாவெடித்தமர்ந்து புண்ணுண்டாகி நாற்றமிகும் வயிறுங் காலுஞ் சினத்து அதைக்கும். இருமலும் வாந்தியுமுண்டாகும். சிறிது உணவு உட்கொண்டாலும் வயிறு பொருமிக்கொள்ளும். அரைக்குக் கீழுள்ள உறுப்புகள் குளிர்ந்து காட்டும். கண்கள் குழிவிழுந்து கரிக்கும். நாக்கு கசக்கும். மர்மத்தானங்களில் அதிக அழற்சியுண்டாகும். கை கால் முதலிய பொருத்துக்கள் உளைந்து முறிந்து போவதுபோன்ற வேதனையுண்டாகும். அவ்விடத்து நெட்டிகள் முறியும். மலம் அதிக சிவப்பாகக் கழியும். உடம்பிற் சொறிவுண்டாகும். அத்தோடு மேலிளைப்பு விக்கல் திடுக்கிடுதல் ஆகிய உபத்திரவங்களையும் செய்யும். இது பித்த இரத்தப் பிரதாப சுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி-ம்):- இச்சுரம் பித்தத்தோடு கூடிய இரத்த தாதுவை அதிகமாகக் கொதிப்புறச் செய்யும் தன்மையுடையதாதலால் பித்த இரத்தப் பிரதாப சுரமெனப் பெயர் பெற்றது.

65. பொ-ரை:- உடுக்கினை அடித்தாற்போல் நெஞ்சிடிக்கும். விலாப்புறங்களில் பிடிப்புண்டாகும். அவயவங்களின் ஓர் இடத்திற்பெரும் புண்ணுண்டாகும். கால்கைப் பொருத்துகளிற் குத்தியுளையும். நோயாளி வேதனை தாங்காது தன்னைப் பிடித்துத் தூக்கும்படி சொல்வான். எழுந்தால் நிலைகொள்ளாது பூமியில் விழுவான். புலப்பமும் பயமும் உண்டாகும். சுரம் அதிகரித்து விடாமற்காயும். இது பித்த விரண சுரமாகும்.
(வி-ம்):- இச்சுரம் பித்ததோஷ மதிகரித்துண்டாகும் விரணங்களில் தோன்றுந் தன்மையது. இதனையும் ஏற்புச் சுரமென்பர்.

66. (பொ-ரை):- சுரத்துடன் வயிறு பொருமி இரைச்சலு மதிகரித்து இரத்தக் கழிச்சலுண்டாகும். தேகஞ் சோரும். மயககமிகும் பொருததுக்கள் தோறும் புண்போல் குத்தி நோவுண்டாகும் இக்குணங்களையுடைய சுரம் பித்த இரத்த அதிசாரசுரம் எனப்பெயர் பெறும்.

67. (பொ-ரை):- வாசனையுடைய கூந்தலையுடையவளே! பித்த விடசுரத்தின் குணத்தைக் கூறுகில் ஒரு பக்கம் குளிரும் மற்றொரு பக்கஞ் சுரம் காயும். அத்துடன் வாந்தி, மூச்சு, தண்ணீர்த் தாகம் உண்டாகும். இடையிடையே சுரத்தின் வெப்பம் தணிந்தும் மிகுந்தும்காணும். பொய்த் தோற்றங்களைக் கண்டு பயங்கொள்ளும். சோம்பல் விக்கல் உண்டாகுமென முன்னுள்ள அறிஞர் கூறுவர்.

68. (பொ-ரை):- பாகுபோன்ற இனிய மொழியை உடையவளே! மோக சுரத்தின் குணத்தைச் சொல்லுகில், அதிகதாகமும், பிரமையும் உண்டாகும். அக்கினிபோல் சுரங்காயும். உடம்பில் சோர்வுகாணும். மலசலம் அடைத்துக்கொள்ளும் சோகம் வெளிப்படும். களை, உண் மூச்சு, இளைப்பு, துரப்பு தோன்றும் என அறிக.

(வி-ம்):- இதனை பித்ததோஷம் அதிகரித்துண்டாகும், காமச் சுரமெனப் பிறர் கூறுவர் (மாதவநிதானம், பக் 17, 18.)

69. உள்ளங்கை உள்ளங்கால் எரியும். அடிக்கடி மிகுந்தும் குறைந்தும் சுரங்காயும். தொண்டை கனத்துப் புகைந்து புண்போல் நொந்து இருமும். சிறுநீரில் இரத்தம் கலந்து கடுப்புடன் வெளிவரும் காதடைத்து இரைச்சல் உண்டாகும். உடம்பில் ஒருவகைத் துநாற்றம் வீசும். இக்குணங்களையுடைய சுரத்தை இரத்தப் பிரமேக சுரம் என நீ அறிந்துகொள். (வி-ம்): இச்சுரமும் முற்கூறிய காரணங்களினால் பிறக்கும் தன்மையுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. (பொ-ரை):- சுரத்தோடு வியர்வை கண்டு நாக்கு வெளுத்துக் கசக்கும். தொண்டைவ்ரண்டு கட்டிக் கபம் இறுகி வெளிவராது இருமலுண்டாகும். இக்குணங்களையுடைய சுரத்தினை சிலேற்பன பித்த சுரமெனக் கூறுக. ("வைத்தியன்", பா. 81)

71. (பொ-ரை):- சுரத்துடன் அதிக தலைநடுக்கமும், தேகம் முழுவதும் விறைத்துப்போதலும் இருமல்உண்டாகி அவயவங்களை அலைவுசெய்வதும் அழகிய கையும்காலும் குளிர்ந்திருத்தலும், குலைப்பனுண்டாவதும் ஆகிய சுரத்தைப் பொதியமலை வாசராகிய அகத்திய முனிவர் ஆராய்ந்து வகுத்தருளிய ஆயுள்வேதம் சிலேற்பன வாத சுரமெனக் கூறும். இதை நீயறிந்துகொள்க.

72. (பொ-ரை):- இருமல், கூதல், இளைப்பு, விக்கல், செருமல், முகக்கனப்பு, தலையிடி ஆகிய உபத்திரவங்களுடன் அக்கினிபோல் சுரங்காயுந் தன்மையும் உளதாயின் இதனைச் சிலேற்ப சய சுரமெனச் சொல்லுக. (க்ஷய=சய) (பா. 83)

(வி-ம்):- சில காச சம்பந்தமான தேகிகளுக்குக் கால சுவாத்திய மாறுபாட்டால் இச்சுரமானது தோன்றிச் சுமார் ஒருவாரம் வரையில் உபத்திரவம் செய்து நீங்குந்தன்மையுடையது. ஆதலினால் இந்நூலாசிரியர் இதனைச் சாத்திய சுரங்களில் ஒன்றாகக் கூறியிருப்பினும் சில பிரகிருதிகளுக்கு யாப்பியமாகத் (யாப்யம்=வியாதி அசாத்திய மாயிருந்தும் விரைவில் உயிருக்கு அபாயம் உண்டாக்காமல் நோயாளி நீண்டகாலம் இருக்கும்நிலை) தொடர்ந்து நின்று, பின் அசாத்திய நிலைமையை அடையுமாதலால், தக்க சிகிச்சை செய்து இதன் மூலகாரணத்தை நீக்கும் ஔஷதங்களைக் கையாள வேண்டியது அறிவாளிகளாகிய வைத்தியர்களின் கடமையாகும். இதன்விரிவைச் பரராசசேகரம்--10வது சிலேற்பனரோக நிதானத்திற் காண்க.

73. (பொ-ரை):- உடம்பிலுள்ள பொருத்துக்களிற் புண்ணைப்போல் நொந்து உளைந்து மிகவும் துன்பமுண்டாகும். இவற்றுடன் சுரம். மயக்கம், உவாந்தி அறிவுகேடு விக்கல். வியர்வையாகிய பல விகாரங்களைச் செய்வதும் சிலேற்பன மாங்கிஷ உதிரிச் சுரமெனவறிக. (பா. 84)

75. (பொ-ரை):- பாகு போன்ற இனிய மொழியை உடையவளே! கேட்பாயாக. தாகமதிகரித்து மலசலங் கட்டி, உடம்பும் முகமும் அதைக்கும். வயிற்றில் வாயு மிகுந்து பொருமி, மூச்சு முட்டு உண்டாகும். இதனை முன்னோர் கபதோஷ சுரமெனக் கூறுவர்.

76. (பொ-ரை) முருக்கம் பூவை நிகர்த்த சிவந்த அதரத்தை யுடையவளே! சுரம், வயிற்றிற் பொருமல். கழிச்சல் இவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றி நாவரட்சி, தாகம். தாபம் முறையே கண்டு உபாதை செய்யுமாயின் இதனை நீ சிலேற்பன அத்திசுரமெனக் கூறுக. (பா.87)

77. பொ-ரை:- சுரங்காயும் இருமலுண்டாகும் முகமதைக்கும் வயிறு பொருமும். அதிக தண்ணீர்த் தாகமுண்டாகும் இடையிடையே வயிறிரையும். புலால் நாற்றமுடன் மலங்கழியும் புறங்கால் புறங்கை வீங்கும். இதனைச் சிலேற்பன அதிசாரசுரமென ஆயுள்வேதம் கூறும். (பா. 88)

78. (பொ-ரை):- கபமேக சுரமென்னும் சிலேற்பனப் பிரமேக சுரத்தின் குணத்தை ஆராய்ந்து உரைக்கின், அதிகமாகக் கை கால் எரிந்து விடாமற் சுரங்காயும். சிறுநீர் சீழ் முதலிய அழுக்குப் பொருள்களுடன் கலந்து தடித்து, வெளிவரும். உடுக்கடிபோல் இருதயம் இடைவிடாது வேகமாக அடிக்கும் என்று கூறுக. (பா. 89)

79. (பொ-ரை):- குளிருடன் சுரம் காய்ந்து வெயர்த்துவிடும். பின் அடுத்த இரண்டு தினங்கள் அச்சுரம் வராமல்நின்று நான்காம்நாள் குறித்த நேரத்தில் வந்து முன்போற் காயும், அத்துடன் வாந்தி. இருமல். இரைப்பு உண்டாகும். கெண்டைக்கால்களிலுள்ள விசை நரம்புகளிற் சீதளம் பொருந்தி குறுக வாங்கி வலிக்கும். பொருத்துக்கள் பிடரி, கழுத்து இவைகளில் நோவுகாணும். இதனை சிலேற்பன நாலா மாறற் சுரமென நீ கூறுக.

(வி-ம்):- சிலேற்பன சுரங்களில் பத்துச் சுரங்களை சாத்தியமென ஆசிரியர்கூறினும் பொதுவாக இங்கு கூறிய சிலேற்பன சுரங்கள்யாவும் அசாத்தியத் தன்மையுடையன என்றே நாம் கருதவேண்டும். எதனாலெனில் அவைகள் ஆரம்பத்தில் சாத்தியமாய்த் தோன்றினும் யாப்பியமாய்த் தொடர்ந்துநின்று பின் நோயாளியை அபாய நிலைக்குள்ளாக்கும் தன்னையுடையன. உதாரணமாக மேலே கூறிய நான்காம் முறைச்சுரம், பிரமேகசுரம் இவைகளை நுண்ணுணர்வினால் ஆராய்ந்து அறியின் இனிது விளங்கும். (பா. 90 )

80. (பொ-ரை):- உடம்பில் வெப்பத்துடன் சுரங்கண்டு இருமல், தேகமினுமினுப்பு, விக்கல். வியர்வை குளிர் உள்ளுறுப்புகளில் அழற்சி. மனவேதனை, அழகிய முகம் கை கால்களில் வெளுப்பு, களை. மூச்சு. இளைப்பு. மிகுதாகம். நெஞ்சிற் சழி அடைத்துக் குறுகுறு என்னுந் தொனி. களிச்சல் காந்தல் இவைகள் தோன்றுமாயின் இதனை அசாத்தியமான சிலேற்ப சுரமென ஆயுள்வேத சாஸ்திரத்தை உணர்ந்த அறிஞர் கூறுவர். (பா. 71)

83. (பொ-ரை):- முற்கூறிய குணங்களுடன் தொண்டையிற் சேற்பம் கட்டி இருமலுண்டாகி அசறுடன் சளியைக் கக்கி. இளைப்புத் தோன்றி வயிறு கழிந்து அரைக்குக் கீழுள்ள அவயவங்கள் குளிர்ந்து மார்பு முதலியவிடங்களில் அதிக சுரமுண்டாகும். இவற்றோடு உள்ளுறுப்புகளில் அவியல், அழற்சி. மயக்கமோடு மிகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகமுங் காணும். அன்றி இடையிடையே நெஞ்சடைத்து வேதனையும் செய்யும். இவ்வேதனை செருமினாற் சிறிது சுகமுண்டாகும் இது சிலேற்றும தோஷமதிகரித்துப் பிறதோஷத்துடன கூடியுண்டாகும். அசாத்தியமுள்ள சிலேற்பன தொந்த அதிசாரசுரமெனத் தேர்ந்தறியும் வல்லோர்களான வைத்தியர்கள் **யாரெனில் ஒப்பற்ற உபநிடதங்களைப் போற்றிக்கற்போராவர்** - (வ. சிவப்பிரகாசம்) (பா. 72)

(விளக்கம்):- இதற்கு முன்கூறிய சிலேற்பன மாங்கிச அதிசாரசுரத்திற்கும் இதற்குமுள்ள பேதம் யாதோவெனில் அது சிலேற்றும் தோஷமதிகரித்துப் பதனழிந்தமாங்கிஷம் போன்ற தன்மையுடன் கழிச்சல் காணும். இது சிலேற்பனம் பெரும்பாலும் பித்தத்துடன் தொந்தித்து உண்டாகி, வாய் முதற் குதமீறாகவுள்ள உறுப்புகளை விரணமுறச்செய்து கழிச்சலுண்டாக்கும். இச்சுரத்தினை பிறவிடங்களில் அக்கர சுரமெனக் கூறுவர். இது ஈற்றில் வாததோஷத்துடன் கூடி வயிறுபொருமல் முதலிய துர்க்குணங்களுண்டாகில் அபாயமுஞ் செய்யும்.

84. (பொ-ரை):- வெப்பமாகச் சுரங்காயும். உடம்புழற்றும். விக்கல் சத்தி இளைப்பு இருமலுண்டாகும். நோயாளி மிகவும் பரிதாபப்படுவான். அவயவங்களிலுள்ள தோலில் நீர்கோத்து வீக்கமுண்டாகி வெடித்து நீர்வடியும். வயிறிரையும். நாக்கு நற்சுவையற்றுக் கருநிறமடையும். இதன்பின் உடம்பு மெலியும் இத்தகைய குணங்களுடைய சுரத்திற்கு. உயிர்கட் கின்பமருளுமிறைவன் உமாதேவியார்க்கு அருளிச்செய்த ஆயுள்வேதத்தில் அசாத்தியமுள்ள சிலேற்பன நீருதிரிச்சுரமெனப் பெயர் கூறியருளினா ரெனவறிக. (பா. 73)

85. (பொ-ரை):- உடம்பிற் சுரவேகமதிகரித்து நாளடைவிலே என்பினுள்ளிருக்கும் மச்சையைப்பற்றி அதையுருகச்செய்து சலப்பைக்கு வந்து சலத்துடன் கருநிறமாய் வெளிப்படும். அபானம் வரட்சியடையும். எண்சாணளவான உடம்பிற் செறிந்துள்ள பொருத்துக்கள் உளைந்து நோவும் வீக்கமும் உண்டாகும். அவ்வீக்கத்தில் விரல் நுனியால் அமர்த்திப் பார்த்தால் பள்ளமுண்டாகி அப்பள்ளம் நெடுநேரம் மறையாமல் இருக்கும். இடையிடையே சலத்தோடு இரத்தமும் கலந்து வெளிப்படும். அதிசாரம் இளைப்பு இருமல் தோன்றும் இத்தகைய குணங்களுள்ள சுரத்தை அசாத்தியமுள்ள சிலேற்பனப் பிரதாபசுரமென கூறுக.(பா.74)

(வி-ம்) இச்சுரத்தின் வேகத்தால் என்புகளும் மச்சையென்னும் நெய்த்தன்மையுள்ள மூளைப் பொருளும் உருகிக் கரைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலப்பைக்குள் வந்து சலத்துடன் கலந்து வெளிப்படும் இந்நோயாளியின் சலத்தை ஒரு வர்த்தியில் நனைத்து கொழுத்தினால் அது விளக்குப்போல் எரியும் இச்சுரத்தைப் பிறநூலார் (மாதவநிதானம்(பக்.24)) மச்சாதாதுகத சுரமெனக் கூறுவர்.

87. (பொ-ரை):- சுரத்தினோடு சிலேற்றுமம் அதிகரித்து இருமலுண்டாகும் உடம்பிலுள்ள பொருத்துகளில் உளைவு மிகுந்து நோயாளி புலம்புதலும், அதிகதாகம் களை, கோழை யுண்டாதலுமாகிய சுரம் சிலேற்பனசோகைச் சுரமெனப் பெயர்பெறும் (பா. 76)

(வி-ம்):- இச்சுரத்தில் நோயாளி அதிகமாகக் களைப்படைவதால் இது சோகச்சுரமெனபெயர் பெற்றது, (சோகம்-களை). இறுதி அடியிற்பாடபேதம்: "தரவும் சேற்பன சோகைச் சுரமிதே".

88. (பொ-ரை):- மயக்கம் அதிதாகம் அறிவற்றுப்பேசுதல் அடி நாக்குக்கறுத்து அரம்போல் முள்ளுண்டாதல் கைகால் கனப்புடன், தடித்து வீங்குதல் ஆகிய குணங்களையுடைய சுரத்தை ஆயுள்வேதம் சோகைச்சுரமென அறுதியிட்டுச் சொல்லும். (பா. 77)

(வி-ம்):- சோபை என்னும் வடமொழிச்சொல் இங்கு சோகை என மருவியது. (சோபை- வீக்கம்.)

89,90. (பொ-ரை):- குளிர்ந்த தேன்போலும் இனிய மொழியை யுடையவளே! சிலேற்பன சன்னிபாதசுரத்தின் குணத்தைச் சொல்லக்கேள். தேகத்தின் பிடரி, தலை முதலிய உறுப்புக்கடோறும் புண்போல் நோவுமிகும். அறிவுகெட்டு பிதற்றிப் பேசும். இருமல் இளைப்புத் தோன்றி அதிக தாகமெடுக்கும், வாயில் விடஞ்செறிந்த தன்மைபோல் கசப்புச்சுவை கண்டு நா வரண்டு கறுக்கும். அதிக வெப்பம். கழிச்சல் உழலை உண்டாகும் அதரம், நா, மூக்கு இவைகள் வெடித்துப் புண்ணாகும் சத்தியுடன் கழுத்து நெற்றி இவைகளில் வேர்வை காணுமென அறிக.

(வி-ம்):- இது சிலேற்பனதோஷம் அதிகரித்தும் ஏனைய தோஷங்கள் கோளாறடைந்து தொந்தித்தும் உண்டாவதாற் சிலேற்பன சன்னிபாதசுரமெனப் பெயர் பெற்றது.

91. பொ-ரை:- சிலேற்பன நாடி மேல்நோக்கி நடந்திடினும், மார்பிலும், முகத்திலும் பிசுபிசுத்த வேர்வையுண்டாயினும், தேகம் மிகக் குளிர்ந்து நடுக்கமுறினும் நோயாளி படுக்கையிற் கிடை கொள்ளாதிருப்பினும் நாவும் பல்லும் கருநிறமடையினும், அழகிய வயிற்றில் வலி கடுப்பு முதலிய வேதனையுடன் இரத்தக் கழிச்சலுறினும் கைகால் முகம் இவைகளில் வீக்கமுண்டாயினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிறு மினுமினுத்துச் சிவக்கினும் சன்னிபாத சுரங்களில் மரணம் உண்டாகுமென அறிந்து கொள்க.

(வி-ம்):- இம் மரணக்குறிகள் ஏனைய சன்னிபாத சுரங்களுக்கும் பொருந்தும்

92. (பொ-ரை):- மூளையிற் பித்த தோஷமதிகரித்து கண் செவி முதலிய இந்திரியங்களின் செயலைக் கெடுத்துப் பல்லீறில் உதிரம் வடியச் செய்யும். தேகத்தில் அதிக வெப்பத்துடன் சுரங்காயும். நாவரண்டு தடுமாற்றமான வார்த்தையாடும். இது சிறந்த மூளையென்னுந் தாதுவைப்பற்றி உண்டாகும் சுரமெனஆயுள்வேதம் விதிக்கும்.

(வி-ம்) :- இச்சுரத்திலதிகரித்த பித்தம் மூளையிலுள்ள வுணர்ச்சி நரம்புகளைத் தாக்கி விகாரமடையச்செய்து, இந்திரியங்களின் உணர்ச்சியைக் கெடுப்பதுமன்றி நாளடைவில் மற்றத்தோஷங் களுடன் தொந்தித்துச் சித்தவிப்பிரமம் போன்ற சன்னிபாத சுரங்களாக மாறுந் தன்மையுடையதாதலால், புத்திசாலியாகிய மருத்துவன் அதிக கவனத்தோடு சிகிச்சை செய்யவேண்டும். "விதியின்வாறே" என்பதற்கு நோயாளியின் தலைவிதிப்படி ஆயுள் நிலைபெறும் எனப் பொருள் கூறினும் அமையும்.

93. (பொ-ரை):- காலிலும் வயிற்றிலும் எரிவு உண்டாகும் கண்ணுந் தலையும் நோகும். பால், பழம், போன்ற மதுரசுவையுள்ள பொருள்கள் கசப்புச்சுவையுண்டாக்கும், அதிகமாக நா வரளும் உடம்பில் வியர்வையின்றிச் சுரங்காயும். இத்தகைய குணங்களுடைய சுரத்தை சிலேற்பனமும் பித்தமும் சேர்ந்து தோலைப் பற்றுவதாலுண்டாகியதென நீயறிந்துகொள்ளுக.

(வி-ம்):- இச்சுரத்தில் சிலேற்பன தோஷத்தோடு பித்ததோஷமும் தொந்தித்துச் சர்ம தாதுவிலுள்ள நுண்ணிய துவாரங்களைச் சுருங்கச் செய்து அடைப்பதால் வியர்வை வெளிவராது தடைப்படுகின்றது. இந்நிலைமை 7 நாள் முதல் சுமார் மூன்று வாரம் வரையிற் சுரங்களின் வன்மை மென்மைக்கேற்ப நிகழும். இது எவ்வளவு நாட்கள் நீடித்திருககுமோ அவ்வளவிறகேற்ப நோயாளியின் உள்ளுறுப்புககளில் வெப்பம் அதிகரித்து அவைகளைக் கெடுதலடையச் செய்யும். இச்சுரத்தை சர்மதாதுகத சுரமென வேறு நூல்கள் கூறும். (மாதவநிதானம், பக்கம் 90) இது சிலேற்பன பித்த தொந்தத்தால் வருவது.

94. (பொ-ரை):- அலர்ந்த பூக்களினாற் றொடுக்கப்பெற்ற மாலையையணிந்த கூந்தலையுடையவளே! நோயாளிக்குச் சுரம், தேகநடுக்கம் பொருத்துக்களிலும் வயிற்றிலும் நோவு கடுப்பு பொருமல், பிதற்றிப்பேசுதல் ஆகிய குணங்கள் காணப்பெறின் இதனை நீ வலிய தசையைப் பற்றிய சுரமென அறிந்துகொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி-ம்):- இச்சுரத்தை ஆசிரியர் வாததோஷக் கதிப்பால் வருவதெனக் கூறாவிடினும், இதிற் காணப்படும் குணங்கள் மிகுதியும் வாததோஷத்திற் குரிய ஆதலால் இதனைத் தசையைப் பற்றிய வாத சுரமென்றே கொள்ளுக. முற்பதிப்பாசிரியருக்கும் இதுவே கருத்தாகும்

95. (பொ-ரை):- தேகத்திற் குளிருண்டாகி பின் அழற்சியுடன் கொடிய சுரந்தோன்றும் அத்துடன் சோர்வு இருமல் வியர்வை சிறுநீர்க்குறைவு முகங்கறுத்தல் தேகவரட்சி உளைவு . நோவு, உவாந்தி விக்கல் இவைகளுண்டாகும் இது மேதசைப் பற்றியுண்டாகும் விஷசுரத்தின் விதியென வறிந்துகொள்க.

(வி-ம்):- இச்செய்யுளில் "சலமு முகமு மெய்கருகி" என்றிருப்பதனால், 'கருகி' என்னும் ஈற்றிலுள்ள சொல்லைப் பொருட்கேற்ப, சிறுநீர் குறைந்து முகங்கருகித் தேகம் வரண்டும் எனப் பொருள் கூறினோம். அன்றியும் சலம் குறையுமாயின் வியர்வை யுண்டாதலுண்மையாதலின், வியர்வையை வருவித்தும் கூறினோம் தவிர இருமல் முட்டு முதலியப் பிறகுணங்களினால் இதிற் பிரகோபித்த தோஷங்கள் பித்த சிலேற்பன தொந்த நிலையென ஊகித்துக் கொள்ளவேண்டியுமிருக்கிறது. திரு. ஐ.பொ.அவர்கள் பதிப்பித்த புத்தகத்தில், "விளைந்த தசையைப் பற்றிநிற்கும் விடமாம் சுரத்தின் விதியிதுவே" என்றிருக்கிறது. அது பிரதிகள் எழுதியவர்களின் பிழையென்றே கொள்ளவேண்டியிருக்கின்றது. எதனாலெனில் இந்நிரைகளில் மேதசைப்பற்றிய சுரம் வேறு காணப்படாமையாலென்க.

96. (பொ-ரை):- தினந்தோறும் தேகம் நடுங்கிக் கடுத்து அழன்று அதி தாகமுண்டாகி மிக மினுமினுப்புடன் கண்களுஞ் சிறுநீரும் மஞ்சள் நிறமடைந்து சுரங்காயும். இச்சுரம் மூன்று அல்லது நான்காம் நாள் வியர்வையுண்டாகி விடுந்தன்மையுடையது. இதனை இரத்த தாதுவைப்பற்றிய சுரமென நீ அறிக.

(வி-ம்):- கண்களும் சலமும் மஞ்சள் நிறங்கொள்ளும் காரணத்தால் இச்சுரத்துக்குரிய தோஷம், பித்தமென அறியக்கிடக்கின்றது. இதனை இரத்தக்கொதிப்பென்றும் சிலர் கூறுவர். பிறநூலார் இதனை இரத்த தாதுகத சுரமெனக் கூறுவர். காமாலை ரோகத்திலும் இத்தகைய சுரமுண்டாகும்.

97,98. (பொ-ரை):- கொடிய சுரங்காயும். நெற்றியுங் கழுத்தும் வேர்க்கும். நெஞ்சிற் குத்தி அடைப்புண்டாகும். இருமல் அறிவுகேடு களை தோன்றும். தேகம் வரண்டு சர்மத்திலும் நா முதலிய உள்ளுறுப்புக்களிலும் விரணமுண்டாகிப் பரவும். உடம்பு அசையில் நோவு மிகும். தலைவலியுண்டாகும். தடுமாற்றமான வார்த்தையாடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகம் மெலியும். இது வாத சேற்பன தோஷ தொந்தத்தால் 69 அஸ்தியை நீறச்செய்யும் சுரமெனக் கூறுக.

99. (பொ-ரை):- அதிக சுரம் தலைவலி தேகஅழற்சி யுண்டாகும் உடம்பதைத்துக் கருநிறமடையும். மலசலம் வெளுக்கும். வயிறெரிந்து சத்தியெடுக்கும். (இந்திரகோபம்- தம்பலப்பூச்சி) இந்திரகோபம்போற் கண்கள் சிவந்து குழிவிழும். பிதற்றிப் பேசியாரவாரஞ் செய்யும். இது நாபியின் கீழுள்ள சுக்கில தாதுவைச் சிலேற்பன தோஷம் பற்றியுண்டாகுஞ் சுரமென அறிக.

100. (பொ-ரை):- மேகம் போன்ற கூந்தலையும் குவிந்த தனங்களையுமுடைய மகாலக்குமி போன்றவளே! மந்திரமும் மருந்தும் வேதமொழியும் குருமொழியும் தெய்வமும் ஆகிய இவைகளைப் பொய்யென நினைக்கிற் பொய்யாகும். மெய்யென நம்பில் மெய்யாகும். ஆகையால். நீ இனிக் கூறப்படுஞ் சுரத்திற்குரிய சிகிச்சை முறைகளில் அதிக நம்பிக்கை வைத்துக் கேட்பாயாக.

(வி-ம்)- முதிரமென்பது எதுகைநோக்கி முந்திரமென மருவிற்று. முதிரம்- மேகம்..

101-104. (பொ-ரை):- சுரம் வருதற்குரிய (மாதவநிதானம், பக்.9-11) காரணமும் (நிதானமும்) அச்சுரம் வருதற்கு முன்னுண்டாகும் உபத்திரவங்களும் (பூர்வரூபம்) சுரந்தோன்றிய போதிருக்கும் நிலையும் (ரூபம்), இரைப்பை முதலிய சீரண உறுப்புக்களிலுள்ள சீரண அசீரணத்தன்மையும். (தீபனபாசனம்) அதனாற்றேகத்திற் பரவியுள்ள கோஷ்டங்களின்
விடத்தன்மையும் (சம்ராத்தி) அச்சுர வெப்பத்தின் அளவும் மூர்ச்சை முதலான அவத்தைகளும் நோயாளியுண்ட உணவு செயல் முதலியனவும், நாவிலுண்டாகும் இனிப்பு முதலிய சுவைத்தன்மையும் தேகநிற வேறுபாடுகளும். வாத பித்த கபதோஷங்களின் தனித்த தொந்த சன்னிபாத நாடி விகற்பங்களும் அவைகள் கூடித் குறைந்து நிற்குமளவுகளும் சுரந்தோன்றிய நாள், நட்சத்திரம் காலபலம் மிருத்து தோஷங்களும் சுரம் வந்த மூன்று. ஏழு, எட்டு. ஒன்பதாம் நாட்களில் காணும் குணாகுணங்களும் அவ்வச் சுரங்களின் தவணை நாட்களும் தேகக் கூறுகளும் அவைகளுக்கேற்ப பரிகரிப்பு முறைகளும் கொடுக்கும் அவுடதங்களும் பத்தியவகைகளும் கற்றுச் தேறி அறிவும் அன்பும் அனுபவமும் வாய்ந்தவனே சுரரோகங்களில் சிகிச்சை புரிய வல்ல வைத்தியனாவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105. (பொ-ரை):- நோய்கள் வருதற்குரிய காரணங்களும் அவைகளின் குணங்களும் குறிகளும் உடற்கூறும் வேகங்களும் எதிரிடையான மாற்றங்களும் வாத முதலிய தோஷங்களின் விகாரங்களும் கால நுட்பங்களும் சுரஅளவும் ஆகிய இவற்றை ஆராய்ந்து அந்நோய்களுக்கு உபயோகிக்கும் அவுடதங்களும். நோய் நீங்கும் கால அளவுங் கண்டு, செய்யும் மருத்துவரின் மருந்தே மேன்மையான மருந்தாகும்.

106. (பொ-ரை):- நல்லாசிரியரிடம் வைத்திய நூல்களை முறையாகக் கற்றறியாது மருத்துவம் செய்பவரிடம் சிகிச்சை பெறுவோர் தம்பாலுள்ள நோய்கள் நீங்கப் பெறாது, மாறுபட்ட மருந்துகளினால் வேறு நோய்களுக்கும் ஆளாவார் அன்றி. அவர்கள் நோயை நிதானித்து அறியாது கொடுக்கும் மருந்துகளும் நோயாளியை எளிதிற் கட்டி எமபுரத்திற்கு இழுத்துச் செல்லும் கொடிய காலபாசம் போன்றவையாகும்.

107. (பொ-ரை):- பொருளாசை கொண்டு நோயாளியை வருத்திப் பணம் பறிக்கும் இழிகுணமுடையோரும் ஆயுள்வேதத்திற் கூறிய அருள் நிறைந்த தருமத்தையறியாதோரும் அவ்வேதத்திற் கூறிய நிதானமாகிய பஞ்சலக்கணம் முதலியவற்றின் உண்மைப் பொருளறியாது தம் மயக்கவுணர்வினால் மாறுபட்ட பொருள் கொள்வோரும் ஆகிய மருத்துவர்கள் நோயாளிகளின் பிணிக் கேற்ப மருந்து செய்யார்கள். அன்றி அவர்கள் கொடுக்கும் மருந்தினையுண்டோரும் நோய் நீங்கப்பெறாது உலகிற்றினமும் வருந்துவர்.

108. (பொ-ரை):- இரு தினங்களும் வலிய இலங்கண சிகிச்சை செய்யவேண்டும். மூன்றாம் நாள் தொடங்கி ஏழாம் நாள் வரை 4 தினங்களுக்கும் கருக்குக் குடிநீர் கொடுத்து அன்னக் கஷாயங்கொடுத்து வருக. பின் இரண்டு தினங்களுக்கு இலங்கணசிகிச்சை செய்து ஒன்பதாம் நாள் மருந்து கொடுத்தல் சிறந்தமுறையாகும்

(வி-ம்): எதிரிடையான உணவுகளாலும் எதிரிடையான செயல்களாலும் இரைப்பை கோளாறடைந்து அசீரணத்தைப் பிறப்பித்து அங்குள்ள சீரணாக்கினியை விஷமாக்கினியாகச் செய்து தேகமுற்றிலும் பரவச்செய்து சுரத்தையுண்டாக்கும் ஆனதால் முதலில் இரைப்பையிலுள்ள விஷமத்தைச் சுத்தி செய்தற்கு வமன சிகிச்சையும் அதன் பின் தேகத்திற் பரவியுள்ள தோஷங்களைச் சீரணஞ் செய்வதற்காக இலங்கண சிகிச்சையும் பின்பு சுரோதஸ் முதலியவிடங்களில் அடைந்து கட்டுப்பட்டுள்ள தோஷத்தைச் சமனஞ் செய்வதற்குத் தீபனபாசனமுள்ள கருக்குக் குடிநீரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈற்றில் தோஷங்களை வெளிப்படுத்த விரேக சிகிச்சையும் முறையே செய்வதனால் சுரம் எளிதில் பக்குவமடையும், அங்ஙனமின்றி ஏழு நாட்களின் மேலுஞ் சுரம் தொடர்ந்து நிற்குமாயின் மீண்டும் இரண்டு தினம் இலங்கண சிகிச்சை செய்து சுரத்தை பரிகரிக்கக்கூடிய அவுடதங்களைக் கொடுக்கும்படி மருத்துவ நூல்கள் கூறும்.

109. (பொ-ரை)) பெண்ணே! வில்வவேர் நெற்பொரி அல்லது பொரித்த அரிசி சுக்கு இவைகளைச் சமனாக எடுத்து 2 படி நீர் விட்டு எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சிக் குடிக்கில் சுரம் தண்ணீர்த் தாகம் நாவரட்சி இவைகள் தீரும். இது சுரநோயில் மிக நன்மை பயக்கும் அன்னக் கஷாயமென அறிக.

110. (பொ-ரை):- நன்கு பழுத்த இனிய மாதுளை வித்து சுக்கு விளாத்தியிலை இதன் பட்டை திப்பிலி, ஏலரிசி இவைகளைச் சமனாக எடுத்து 2 படி நீர்விட்டு எட்டொன்றாக வற்றக் காய்ச்சிக் குடிக்கில் சுரத்தின் உபத்திரவங்களில் ஒன்றாகிய உவாந்தி நீங்கும்.

111. (பொ-ரை):- வில்வவேர் சிற்றமட்டிவேர் ஏலரிசி அதிமதுரம் கோட்டம் நற்சீரகம் சுக்கு சந்தனம் வகை கழஞ்சு 2. முன் போற் குடிநீர் காய்ச்சிச் சர்க்கரை* கலந்து குடிக்க உவாந்தி தீரும் என முன்னுள்ள ஆயுள்வேதியர் கூறுவர். (* சீனி)

(வி-ம்):- "பூவின் நல்ல சர்க்கரை" என்பதற்குப் பூமி சர்க்கரைக் கிழங்கென திரு .ஐ.பொ அவர்கள் பதிப்பித்த புத்தகத்திற் குறிப்புரை கூறியிருக்கிறார். அது பொருந்தாது. என்னை? சத்தியெடுப்பதற்குக் காரணமானது பித்ததோஷம். அப்பித்தத்தைச் சமனஞ் செய்வதற்குச் சர்க்கரை சிறப்பான பொருள். பூமி சர்க்கரைக் கிழங்கிற்கு அக்குணஞ் சிறிதுமில்லை. இதனைப் பதார்த்த குணங்கூறும் நூல்களிற் கண்டுதெளிக. 'இட்டுக்'குடிநீர்கொள்ளவென ஒருசொல் வருவித்துப் பொருள் கூறப்பட்டது. (பா. 105)

112. (பொ-ரை):- கோரைக்கிழங்கு கராம்பு முந்திரிகைப்பழம், கொத்தமல்லி, வில்வவேர் கோட்டம் இலவங்கபத்திரி, தாளிசபத்திரி, சாதிபத்திரி இவைகள் சமனெடை முன்போற் குடிநீர் காய்ச்சித் திற்பலிச் சூரணங் கலந்து குடிக்கில் கழிச்சல் நீங்கும். (பா. 106)

113. (பொ-ரை):- சந்தனம் ஏலரிசி இலாமிச்சம்வேர் சுக்கு, மிளகு, திற்பலி. கராம்பு. இஞ்சி வில்வவேர் பூசினிவித்து இவை வகைகழஞ்சு-1 எடுத்து நறுக்கி இடித்து ஒருபடி நீரிலிட்டு எட்டொன்றாக வற்றக்காய்ச்சி சர்க்கரை கலந்து குடிக்க சுரதாகந் தீரும். (பா. 107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி-ம்):- சுக்கு பற்படாகம் கோரைக்கிழங்கு சீந்திற் கொடி மலைதாங்கிவேர், கண்டங்கத்தரிவேர். செம்முள்ளிவேர் முன்னைவேர் வகை களஞ்சு 2 எட்டொன்றாக குடிநீர் காய்ச்சிக் குடிக்க வாத சுரமும் அதனாலுண்டாகும் உபத்திரவங்களும் தீரும்.
நொச்சியிலை ஒருபிடி சிற்றரத்தை சுக்கு சதகுப்பை வகை கழஞ்சு2 முன்போற் குடிநீர் காய்ச்சிக் குடிக்க வாதசுரம் தீரும்.
**********

116. சீந்தில் வேப்பிலைக்காம்பு சிறுகாஞ்தோன்றி. சுந்தனம். சூறனை. இஞ்சி. பெருங்குரம்பை பேய்ப்புடோல் பெருமுந்திரிகை. பேரீச்சம்பழம் வட்டத்துத்தி. கற்றாளை. விஷ்ணுகிரவந்தி. இராமிச்சுவேர். நன்னாரி ஆடாதோடை. வில்வவேர். கொன்றை. முத்தற்காசு. தூதுவளை. மல்லி சிற்றமட்டி. நிலவேம்பு முள்ளிவேர். முல்லை. வேலம்பட்டை. கருவேம்பு இலுப்பைப்பூ இருவேலி, கோட்டம் கடுக்காய் மிளகு. அவுரி. பற்படாகம். அதிமதுரம் வெட்பாலரிசி. நெல்லி. தான்றிப்பலி. சுக்கு. சிறுதேக்கு. தேவதாரம். ரோமம். அரத்தை. சதகுப்பை. கருஞ்சீரகம் கொத்தமல்லி கடுகு. சமஅளவாய் இடித்து பானையில் 4 நாழி நீர்விட்டுக்காய்ச்சி 18 ஆக்கி சரக்குகள் நன்றாக வெந்து பதத்தில் இறக்கி. வடித்து. திப்பலிப் பொடியை தூவித் தேன் சேர்த்துகுடித்தால். 64 வகை சுரங்களும் நீங்கும். என்று சிவன் உமைக்கு கூறிய ஆயுள்வேதத்தில் திளைத்த அகத்திய முனிவர் மனிதர் மீது கொண்ட கருணையினால் கூறியமுறை இதுவாகும்.(பா122)
*****

119. (பொ-ரை):- வாசனை யூட்டப்பெற்ற கூந்தலையுடையவளே! வாத பித்த கப தொந்தமாயுள்ள நால்வகைச் சுரங்களில் வாத சுரத்தின் முற்றோன்றும் உபத்திரமாகிய குலைப்பன் நீங்குதற்கு வெளிப்படையாக ஒரு குடிநீர் சொல்வேன். நீ இதனைக் கேட்பாயாக. சிறுகாஞ்சோன்றிவேர் நிலவேம்பு, கோரைக்கிழங்கு பற்படாகம் சுக்கு இவைகள் வகை கழஞ்சு 2 முன்போற் குடிநீர் காய்ச்சிக் குடிக்க வாத குலைப்பனுடன் சுரமுந் தீரும்.

120. (பொ-ரை):- பேய்ப்புடோல் கோரைக்கிழங்கு பற்படாகம் சீந்திற்கொடி சுக்கு இவைகளை நறுக்கி நுண்பொடி செய்து முன்போற் குடிநீர் காய்ச்சித் தேனுடன் கலத்தலைக் கேட்டசுரம் தனது தோழனான குளிரைப் பார்த்து நாமினியிங்கிருத்தல் தகுதியன்றெனக் கூறி இருவரும் நோயாளியின் தேகத்தினின்றும் நீங்கி விடைபெற்று விரைவிற் செல்லும், இது பெரியோர்களின் ஆணையாகும்.

121. (பொ-ரை):- ஆடாதோடைவேர். நன்னாரிவேர். சீந்திற்கொடி வட்டுக்கத்தரிவேர், பற்படாகம் சுக்கு, ஆடுதின்னாப்பாலைவேர், சந்தனம் வகை கழஞ்சு 1 நாலொன்றாக வற்றக் காய்ச்சிக் குடிக்க குளிர் சுரம் விரைவில் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122. (பொ-ரை):- நஞ்சுபொதிந்த விழிகளையுடைய இளமை பொருந்தியபெண்ணே!நொச்சியிலை ஆடாதோடையிலை,இயங்கிலை துளசியிலை வகை பிடி-1, 2-படி நீர்விட்டு எட்டொன்றாகக் குறுகக் காச்சித் திரிகடுகு. உள்ளி நற்சீரகம் சிற்றரத்தை இவைகளைச் சமனாகவெடுத்து இடித்துச்சூரணஞ் செய்துவைத்துக் கொண்டு ஒருபலம் குடிநீரில் கால் ரூபா இடை சூரணங் கலந்து நாளொன்றுக்கு மூன்று முறை குடித்துவரச் சீதளத்தோடு கூடிய வாதசுரந் தீரும்

123 திற்பலி. கோட்டம். பற்படாகம். சிறுகாஞ்சோன்றி. சிறுதேக்கு கண்டங்கத்தரி பேய்ப்புடோல். வோ்க்கொம்பு. நிலவேம்பு. சீந்தில். கழஞ்சு.1 இரண்டு கொத்து நீர் விட்டு ஓர் உழக்கு ஆகும் மட்டும் எரித்து அதனைக் குடித்து வர சுரக்காய்ச்சல்கள் எல்லாம் ஓடி விடும். (பா. 114)

124. (பொ-ரை):- வேப்பந்தோல் வேப்பம்பட்டை சந்தம் சந்தனம் முத்தம் கோரைக்கிழங்கு. ஏடார் குழலீர் பூவிதழ்களால் அழகுபெற முடித்த கூந்தலையுடையவளே! சன்னி திரிதோஷக் கோளாறு மற்றவை வெளிப்படை.

125. (பொ-ரை):- மேகத்தை வென்ற கரிய பெரிய கூந்தலும். சிவந்த அதரமும். கச்சணிந்த அழகிய தனபாரங்களுமுடைய பெண்ணே! கேள் பேராமட்டியும். சுக்கும் குடிநீர் காய்ச்சிக் குடிக்கக் குளிர் சுரம் நீங்கும்.

126. (பொ-ரை):- கடுக்காய். சீந்தில் தூதுவளை கண்டங்கத்தரி. முசுமுசுக்கை பற்படாகம். ஆடாதோடை சிறுபயறு பொன்னாங்காணி பேய்ப்புடோல். வற்றக்காய்ச்சி. சீனிசேர்த்துகுடிக்க பித்தசுரம் குலைப்பன் நீங்கும்.

127. (பொ-ரை):- நெல்லி. தான்றி வேப்பலகு சீந்தில் கொத்தமல்லி முத்தற்காசு இவைகளை நறுக்கி 1நாழி நீர் விட்டு1 உழக்கு ஆகக் காய்ச்சி வடித்து. அக்குடிநீரைக் குடித்தால் பித்தகுலைப்பன் போகும்.

128. சீந்தில் தண்டு சிவதைவேர். கடுக்காய் களிப்பாக்கு. சுக்கு. கடுகு ஆகியவற்றை நன்றாக இடித்து 1 நாழி நீர் சேர்த்துக்காய்ச்சி. 14 ஆகியபினதினமும்அக்குடிநீரைக்குடித்துவர காய்ச்சல் குறைந்து வயிறு பொருமக் காரணமான மலம் போகும்.

129. (பொ-ரை):- வெட்பாலையரிசி. நெல்லிக்காய் ஓமம் வேர்க்கொம்பு கடுக்காய் கோரைக்கிழங்கு. இருவேலி. இலாமிச்சவேர். பேய்ப்புடோல் என்பவற்றை சமஅளவில் பானையில் காய்ச்சி 18 ஆக்கிய குடிநீரை முலைப்பாலும். தேனும் சேர்த்துக் குடித்து வந்தால் முத்தோஷ சுரம் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

130. (பொ-ரை):- கடுகு.நொச்சிவேர், மஞ்சள் வெட்பாலையரிசி. சிறுநாகம்பூ சுக்கு. மிளகு. திப்பிலி இவைகள் வகை கழஞ்சு 2 இருபடி நீரிலிட்டு எட்டொன்றாகக் குடிநீர் செய்து முன்போற் குடிக்கில் மூளையைப்பற்றிய கொடிய சுரந்தீரும். என்று பெரியோர் அருளிச் செய்தனர். (பா. 124)

131. (பொ-ரை):- கண்டங்கத்தரிவேர் மரமஞ்சள். சுக்கு. மிளகு. வெட்பாலையரிசி. நாகம்பூ. இவை வகை கழஞ்சு 2 முன் முறைகளிற் கூறியபடி குடிநீர் செய்து குடிக்கில் தோலைப்பற்றிய சுரந்தீரும் என அறிஞர் கூறுவர்.

132. உரை வெளிப்படை (பா. 125)

133. (பொ-ரை):- கருவேம்பு. துளசி. புளி. வேம்பு. மா இவைகளின் ஈர்க்கு, கடுகு, மல்லி, கஞ்சாங்கோரை. விட்டுணுகிராந்தி நீர்முள்ளி முட்காவிளாய் தூதுவளை. கண்டங்கத்தரி. மல்லிகை. காட்டுமல்லிகை கொடிவேலி இவை வேர் வகை கழஞ்சு 1 முன்போற் கஷாயமிட்டு நாளொன்றுக்கு 3,4 முறை குடிக்கத் தசையைப்பற்றிய சுரஞ்தீரும். (பா. 127)

134. உரைவெளிப்படை (பா. 128)

(வி-ம்):- திரு.ஐ.பொ. அவர்கள் பதிப்பில் 'ஏக்கு மசதி சுரங்களுடனேகு முதிரந் தனிச்சுரமும்' என்றிருக்கின்றது. எம்மிடமுள்ள ஏட்டுப் பிரதிகளில் ஏக்கு மசதி மலமுடனே என்றிருக்கிறது. அன்றி இங்கு கூறப்பட்ட சரக்குகள் சிறிது மலத்தை இளக்கி வெளிப்படுத்தும் தன்மையுடையது மாயிருந்ததால் ஏட்டுப் பிரதிகளிலுள்ள பாடமே சரியெனக் கொண்டோம்.

135. உரைவெளிப்படை. (பா. 129)

136. (பொ-ரை):- கோரைக்கிழங்கு சுக்கு. அதிவிடயம். பேய்புடொல் சீந்திற்றண்டு வேப்பம்பட்டை சிறுகாஞ்சோன்றிவேர், வகை-கழ 2 இருபடி நீர்வைத்து எட்டொன்றாக வற்றக் காய்ச்சி நாளொன்றுக்கு3முறை குடிக்கில் சுக்கிலசுரந் தீரும் (பா. 130)

137,138. ******

139-141. (பொ-ரை):- வசுவாசி. கராம்பு, கல்நார், இலவங்கப்பட்டை ஓமம் வெட்டிவேர், செண்பகப்பூ கடுக்காய். தான்றிக்காய் அதிமதுரம். நாகப்பூ. அதிவிடயம். நற்சீரகம். குருஞ்சீரகம். வெந்தையம் சாத்திரவேதி. மாதுளம்பூ. மாதுளம்பிஞ்சு செஞ்சந்தனம். தேவதாரம். வெண்கோட்டம். சாயவேர் மாசிக்காய் வகை கழஞ்சு இவைகளில் கலநார் சாத்திரவேதி இரண்டையும் நீக்கி மற்றவைகளை நறுக்கி இடித்துத் தூள் செய்து 8, படி நீரிலிட்டு ஒரு படியாக வற்றக்காய்ச்சி இளஞ்சூட்டிலிருக்க செய்துகொள்ளவும் கல்நார் சாத்திரவேதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையிரண்டையும் அரைத்து நன்கு பொடி வெய்த 16 பங்கு செய்து வைத்து கொள்ளவும். நேரம் 1¼ அவுன்ஸ் வீதம் நாளொன்றுக்கு மூன்றுமுறை குடிநீர் குடிக்கும்போது முன்னர் பங்கிட்டு வைத்திருக்கும் பொடியில் ஒருபங்கைக் கரைத்து உடனே உட்கொள்ளவும். பித்தகாமாலை தேகவரட்சி. உட்காய்ச்சல். வாயு. எப்பம் விக்கல் குளிர் சுரம். அதிசாரம். பெண்களுக்குண்டாகும் சோமரோக மென்னும் ஒரு வித வெள்ளை நோய் தீருமென்க.

146. (பொ-ரை):- திற்பலி. வெள்ளுள்ளி. சுக்கு. சீரகம். மிளகு. வகை கழஞ்சு1. இவைகளை வெந்நீர் விட்டு அரைத்து 9 பங்கு செய்து நேரம் ஒரு உருண்டைவீதம் நாளொன்றுக்கு மூன்று முறை மூன்றுநாளுட்கொள்ள அக்கினிபோற் காய்கின்ற கொடிய சுரங்களும் வயிற்றி லுண்டாகும் பல நோய்களும் நீங்குமென ஆயுள்வேத நூல்கள் கூறும்.

147. (பொ-ரை) சுத்திசெய்த கெந்தகம் இரசம் வெண்காரம். திற்பலி கடுகுரோகணி வகை கழஞ்சு 1 நேர்வாளம் கழஞ்சு 5 இவைகளைப் பரகலிலைச் சாற்றினால் நாலுசாமமரைத்துப் குன்றுமணிப் பிரமாணம் குளிகை செய்து நிழலிலுலர்த்தி இள வென்னீரில் வயதுக்கேற்ப 1-2. குளிகை கொடுக்க இரண்டு மூன்று தரம் பேதியாகிச் சுரம் விடும்.

148. (பொ-ரை):- சுக்கு. மிளகு. திற்பலி. கடுக்காய். நெல்லிக்காய் தான்றிக்காய். சிவதைவேர். கடுகுரோகணி. இந்துப்பு. இரசம். அப்பிரகநவநீதம். நேர்வாளம். பொரிகாரம். நவச்சாரம். ஏவாச்சாரம். சீரகம், ஏலம். செண்பகப்பூ வகை கழஞ்சு 1 எலுமிச்சம் புளியினால் நாலுசாமமரைத்துச் சிறு பயறுப் பிரமாணங் குளிகை செய்து நிழலுலர்த்தி பக்குவஞ் செய்து முலைப்பால் முதலிய அனுபானங்களிற் கொடுக்க வாய்வு மலக்கட்டு நீங்கும். இது சோமசூரியாக்கினி யென்னும் முச்சுடர்களையும் கண்களாகவுடைய இறைவனாலருளிச் செய்யப்பெற்ற ஆயுள்வேத மொழியாகும்.

149. (பொ-ரை):- கெவுரிபாஷாணம். துத்தம், அரிதாரம், இவைகள் மூன்றையுஞ் சுத்திசெய்து வகை கழஞ்சு 1. அவுரிச்சாறு ஊமத்தமிலைச்சாறு இவைகளில் வகைக்கொரு நாடிளாளரைத்துப் பயறு பிரமாணம் குளிகை செய்து நிழலுலர்த்தி நேரம் ஒரு குளிகை வீதம் நாளொன்றுக்கு மூன்று முறை இஞ்சிச்சாற்றிற் கொடுக்க மூன்று நாளையிற் குளிர் சுரங்கள் தீரும்.

150. (பொ-ரை):- மலர்மாலையணிந்த கூந்தலை யுடையவளே! சாத்திரவேதி. வெள்ளைப் பாஷாணம்: துரிசு, துத்தம் ஆகிய இவைகள் வகை கழஞ்சு 1 சுத்தி செய்து நிறுத்தெடுத்துச் செம்பையிலைச் சாற்றால் ஒருநாளரைத்துப் பயறளவு குளிகை செய்து நிழலுலர்த்திப் பக்குவஞ் செய்து தக்க அனுபானத்திற் கொடுக்க முறைச்சுரங்கள் தீரும்.

151. (பொ-ரை):- சந்தனம். கோட்டம் இருவேலி. அகில் கோரைக்கிழங்கு சாதிக்காய். ஏலம். இலவங்கப்பட்டை. சிறுநாகப்பூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கோலம்.முந்திரிகைபழம் பேரீச்சம்பழம். கோரோசனை. பச்சைக்கர்ப்பூரம். வெட்பாலையரிசி கடுக்காய். நெல்லிக்காய். தான்றிக்காய். கெருடபச்சைக்கல்லு பச்சிலை இவை வகை கழஞ்சு 1 இவைகளிற் கோரோசனை. பச்சைக்கர்ப்பூரம் நீங்கலாக மற்றச் சரக்குளைப் பொடிசெய்து வில்வப்பூப் பன்னீர் விட்டு நாலுசாமமரைத்துப் பின் கோரோசனை பச்சைக்கர்ப்பூரத்தை சேர்த்து ஒரு சாமம் அரைத்துக் குன்றுமணிப் பிரமாணம் குளிகை செய்து இளநீரிற் கொடுக்கச் சகல சுரமுந்தீரும்.

(வி-ம்):- 'ஐந்திவைகடாமும்' என்பது முன்கூறிய ஐந்து சரக்குகளும் எனக் கொள்க.

152. (பொ-ரை):- கோரைக்கிழங்கு இருவேலி இலாமிச்சம்வேர் வெட்டிவேர். கடுக்காய்.நெல்லிக்காய். தான்றிக்காய் கெருடபச்சைக் கல்லு அகில். தேவதாரம். இலவங்கபத்திரி கல்நார். தக்கோலம் கோட்டம். செண்பகப்பூ கோரோசனை பச்சைக்கர்ப்பூரம். கொத்தமல்லி அதிமதுரம். ஏலம் இலவங்கப்பட்டைஇவை வகை கழஞ்சு1. இவைகளை இளநீரால் முன்போல் அரைத்துக் குளிகைசெய்து தக்க அனுபானத்திற் கொடுக்கில் அதிக வெப்பமுள்ள சுரங்கள் நீங்கும்.

153. (பொ-ரை):- ஏலரிசி இலவங்கப்பட்டை கோரைக்கிழங்கு நற்சீரகம். இருவேலி. நன்னாரிவேர் புனுகுச்சட்டம் கோரோசனை. முந்திரிகைப்பழம்.பேரீச்சம்பழம். வசுவாசி தேவதாரம். அதிமதுரம். கோட்டம். நெரியரிசிப்பால். இலாமிச்சம்வேர். வெட்டிவேர் கொத்தமல்லி. செண்பகப்பூ சந்தனம். வகை கழஞ்சு 1 எடுத்து இடித்து வில்வப்பூப் பன்னீரினால் நான்குசாமம் அரைத்து மிளகுப்பிரமாணம் மாத்திரைகள் செய்து முலைப்பாலிற் கொடுக்க அனல் கொண்ட சுரங்கள் தீரும்.

154-157. (பொ-ரை):- கோரோசனை. சாதிக்காய். கோட்டம். இந்துப்பு குறாசாணி. இலாமிச்சம்வேர். குங்குமப்பூ விளாம்பிசின். ஏலரிசி. இலவங்கப்பட்டை. தங்கம். கஸ்தூரி இலவங்க பத்திரி நற்சீரகம். கருஞ்சீரகம். அதிமதுரம். மஞ்சிட்டி. வெட்டிவேர். நெல்லிக்காய். தான்றிக்காய். பவளம், பச்சைக்கர்ப்பூரம் பொரித்த வெண்காரம். சடாமாஞ்சில். அதிவிடயம். அகில். சுக்கு. மிளகு. திற்பலி. மூலம். கோரைக்கிழங்கு. மான்கொம்பு செவியம். வலம்புரிக்காய்.புனுகு. செண்பகப்பூ. சாத்திரவேதி. அக்கராகாரம் நவச்சாரம் தேவதாரம் சத்திச்சாரம் எவாச்சாரம் வகை கழஞ்சு1. கிரமப்படி கல்வத்திலிட்டு கருப்பஞ் சாற்றில் தங்கம் முதலியன மாள நன்கு அரைத்து உருட்டக்கூடிய பதத்திலெடுத்து உழுந்தளவு குளிகை செய்து நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு முலைப்பாலிற் கொடுக்க வாத பித்த கப சுரங்களும் வயிற்றுக்கடுப்பு கழிச்சல். வயிறெரிவு சன்னிபாத சுரங்கள் முதலிய பிணிகளுந் தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி-ம்):- கொள்ளாய் முத்தம் என்பதை கொள்ளாய் முத்தும் எனப பாடங்கொண்டு முத்தினைச் சேர்த்துச் செய்பவர்களும் உண்டு. இதுவும் குணஞ் செய்யக்கூடியதே

158. (பொ-ரை):- எருமைச்சாணி. எருமை மூத்திரம். எருமைத்தயிர் எருமைமோர். எருமைகப்பால் அரிசி.கழுவியநீர். கடுக்காய்க்குடிநீர். பசுநெய். இவைகளில் எருமைச்சாணியிற் பொதிந்து சுட்டும். மற்ற மோர் முதலிய திரவப்பொருள்களில் சிறுகொதிவர அவித்தெடுத்து மேலோட்டை நீக்கிப் பருப்பை எடுத்துப் பிளந்து உள்ளிருக்கும் முளையைநீக்கி நெய்யில் பொன்வண்ணம்வர வறுத்தெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும். இதனால் குடலிலுள்ள மலமும் மற்றும் தோஷங்களும் வெளியாகும்.

(வி-ம்):- தோடு முளை முதலியவற்றை நீக்கும்போது கையில் பசுநெய் (அது கிடைக்காவிடில்) நல்லெண்ணயாவது பூசிக்கொள்ள வேண்டும். .இன்றேல் சிலர்க்குத் தேகத்தில் அழற்சியும் அதைப்பு முண்டாகும். மோர். தயிர் நெய் இவைகளைச் சேர்த்து அன்னமுட்கொள்ள அவ்வதைப்பு முதலியன நீங்கும்.

159. (பொ-ரை):- சுத்திசெய்த பொன்னரிதாரம். சிவந்தபாஷாணம். வெள்ளைப்பாஷாணம்.நேர்வாளம், இவை முறையே 3.5.2.4.கழஞ்சு எடுத்துக்கொள்ளவும். இவற்றுடன் சுக்கு. மிளகு. திற்பலி. வகைக்கு ஆறு கழஞ்சு கூட்டிப் பொடிசெய்து முதலில் அரிதாரத்தைக் கல்வத்திலிட்டரைத்து பின் மற்றச் சரக்குகளை ஒன்றன் பின் ஒன்றாகச் சேர்த்து இலைக்கள்ளிச் சாறு விட்டு ஒருநாள் அரைத்து மறுநாள் நொச்சியிலைச் சாறு விட்டரைத்து எடுத்து மிளகுப் பிரமாணம் குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு விஷசுரங்களுக்குப் பன்னீரில் நேரம் ஒரு குளிகை வீதம் நாளொன்றுக்கு மூன்றுமுறை கொடுத்துவர விரைவிற் குணமாகும்.

(வி-ம்):- முறையே என்பது பொன்னரிதாரம் கழ.3, சிவந்த பாஷாணம் கழ.5 வெள்ளைப்பாஷாணம் கழ 2., நேர்வாளம் கழ.4. (இது நிரல்நிரைப்பொருள்கோள் ஆகும்).

160. (பொ-ரை):- சுத்தி செய்த இரசம். கெந்தகம். அரிதாரம். நாவி. இருவி. ஆனைத்திற்பலி. நேர்வாளம். வெண்காரம். சுக்கு. மிளகு. திற்பலி. கடுக்காய். நெல்லிக்காய். தான்றிக்காய். துரிசு. துத்தம் சிவந்த பாஷாணம் வகை கழஞ்சு. 1 இவைகளைக் கையாந்தரைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றால் நன்கு அரைத்து குன்றுமணிப் பிரமானம் பக்குவஞ் செய்து கடுக்காயவித்த கஷாயத்தில் நேரம் ஒரு குளிகை வீதம் நாளொன்றுக்கு 3 முறை கொடுக்கப் பலவகைச் சுரமுந் தீரும்.

161. (பொ-ரை):- சுத்தி செய்த அரிதாரம். கெந்தகம் நாவி . இரசம். வெண்காயம். இருவி, சுக்கு. மிளகு. திற்பலி. கடுக்காய். நெல்லிக்காய். தான்றிக்காய். இவை வகை கழஞ்சு 1. இவை யாவுங் கூடிய நிறையிற் பாதிப்பங்கு கடலாமணக்கம் வித்துக்கூட்டி எலுமிச்சம் புளியாலரைத்துப் பயறளவு குளிகை செய்து தக்க அனுபானத்திலிடக் கொடிய சுரங்கள் தீரும்.

(வி-ம்):- கடலாமணக்கை திரு.ஐ.பொ அவர்கள் காட்டாமணக்கென்பர். வாளம் என்பது வேறு சிலரின் கொள்கை. நிம்பப்பழத்தை வேப்பம்பழமென்பர் சிலர். இவைகள் எங்ஙனமாயினும் யாம் பல வைத்திய நண்பர்களோடு இதைப்பற்றி ஆராய்ந்த பொழுது இம்மருந்தைத் தாங்கள் செய்ததில்லை என்று கூறுப. அன்பர்கள் யாருக்காவது இதைப்பற்றிய விபரம் தெரிந்து இருந்தால் இவ் "வைத்தியன்" பத்திரிகை வாயிலாக வெளியிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அது நமக்கும் பிறருக்கும் மிகப் பயன் தரும்.

162. (பொ-ரை):- சுத்தி செய்த துத்தம், துரிசு. எலிபற்பாஷாணம். கெந்தகம் இவை வகை கழஞ்சு 1 பாகலிலைச்சாறு விட்டு நாலுசாமமரைத்து எள்ளுப் பிரமாணங் குளிகை செய்து ஏற்ற அனுபானத்திற் கொடுக்கக் கொடிய சுரங்கள் நீங்கும்.

163. (பொ-ரை):- சுத்தி செய்த கெந்தகம். இரசம். நேர்வாளம். சுக்கு. மிளகு. திற்பலி. கடுக்காய். சிவதைவேர். இவை வகை கழஞ்சு1 முலைப்பாலால் நான்கு சாமமரைத்து மிளகளவு குளிகை உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு ஏற்ற அனுபானங்களிற் கொடுக்கச் சகல சுரங்களுந் தீரும்.
(வி-ம்):- கடு என்பதற்குக் கடுக்காயென்றும். பொருள் கொள்ளப்பட்டது அதுவே இவ்விடத்திற் கேற்றதாகும். சிலர் கடுகு என்பர்.
164. (பொ-ரை):- சுத்தி செய்த அரிதாரம். இலிங்கம். வெண்காரம் அப்பிரகநவகீதம். துத்தம். நாவி. துரிசு. மனோசிலை. இந்துப்பு. இரசம். பாம்புப்பித்து. வகை கழஞ்சு 1 இஞ்சிச்சாற்றால் நாலுசாமமரைத்துப் பயறுப் பிரமாணம் உண்டை செய்து ஏற்ற அனுபானங்களிற் கொடுக்கச் சுரங்கள் தீரும்.

165. (பொ-ரை):- எலிப்பற்பாஷாணம் 1¾ கழஞ்சு சந்தனம். சாதிக்காய் வகை கழஞ்சு 3 முலைப்பாலால் நன்கு அரைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலர்த்தி எள்ளுப் பிரமாணம் தேனிற் குழைத்துச் சாப்பிடக் குளிர் சுரம் நீங்கும்.

166. (பொ-ரை):- எலிப்பற் பாஷாணம் நேர்வாளம். அரிதாரம். சுக்கு. மிளகு. திற்பலி. துத்தம். துரிசு. நாவி, இரசம், வகை கழஞ்சு 1 எருக்கலம் பாலாலரைத்து மணல் பிரமாணங் கொடுத்து வர நாலாமுறைக் காய்ச்சலும். மலக்கட்டுந் தீரும்.

167. (பொ-ரை):- எலிப்பற் பாஷாணம் கழஞ்சு 6, சாதிலிங்கம் கழஞ்சு-4 எருக்கலம்பால் விட்டு நன்றாக அரைத்து மணல் பிரமாணந் தேனிற் கொடுக்க நாலாமுறைச் சுரம் முதலிய விஷம சுரங்கள் நீங்கும். பசுப்பாலுணவு கொடுக்கவும். வேறொன்றுமாகாது.

168. (பொ-ரை):- பெருங்காயம். பொன்னரிதாரம் வெள்ளுள்ளி வெண்காரம். நாவி, இருவி. கடுக்காய். தான்றிக்காய். கெந்தகம். இரசம். நேர்வாளம் வகை கழஞ்சு1 முள்முருக்கஞ் சாற்றிலும் எலுமிச்சம் புளியிலும் வகைக்கு நாலுசாமமரைத்துக் குன்று மணிப்பிரமாணங் குளிகைசெய்து நேரம் ஒரு குளிகை வீதம் இஞ்சி நொச்சியிலைச் சாறு முலைப்பால் இவைகளொன்றிற் கொடுக்க எவ்வகைச் சுரங்களுந் தீரும்.

169-172. (பொ-ரை):- எருக்கலைவேர்ச் சாறு 4 கொத்து. பருத்தியிலைச் சாறு 2 கொத்து எலுமிச்சம்பழச்சாறு 1 கொத்து எள்ளெண்ணை 1 கொத்து இவைகளை ஒரு பாண்டத்திற் கலந்து வைத்துக்கொண்டு இருவேலி இலாமிச்சம் வேர். தோடைவேர். எலுமிச்சம்வேர். சிற்றாமட்டி. சிறுநெருஞ்சி. கோரை. ஓரிதழ்த்தாமரை நன்னாரி. நாயுருவி. குப்பைமேனி. பெருமருந்து கிலுகிலுப்பை. அவுரி. மலைதாங்கி, கொடிக்கழற்சி சன்னிநாயன். கிரந்திநாயன் தயிர்வேளை. சித்திரமூலம். காட்டுமல்லிகை, சாயவேர், இவை வேர் வகைக்குப் பலம் 10. நறுக்கி இடித்துத் தூளாக்கி 16 கொத்துத் தண்ணீரிலவித்து இருபடியாக வற்றக்காய்ச்சி வடித்து முன் கஷாயத்திற் கலந்து கொண்டு சுக்கு. மிளகு. திற்பலி, வசம்பு. பெருங்காயம். மரமஞ்சள். சதகுப்பை, நற்சீரகம். கருஞ்சீரகம். கொத்தமல்லி. பீநாறி அதிமதுரம்,ஏலரிசி, சாதிக்காய,. தேவதாரம். வெண்கோட்டம். அதிவிடயம். மஞ்சள், செவ்வள்ளி. விளாலரிசி. வெட்பாலையரிசி வெளுத்தற்பிசின். வெந்தயம் செஞ்சந்தனம். உள்ளி கச்சோலம். கராம்பு வகை கழஞ்சு 1 இடித்துத் தூளாக்கி எலுமிச்சம்புளியால் அரைத்து எண்ணெய் முதலிய கஷாயத்துடன் கலந்து 3 நாள் வரை சிறு கொதியிட்டு 4ம் நாள் மெழுகு பதத்தில் வடித்துச் சர்வாங்கமும் பூசிவர, திரி தோஷ விகாரங்களும் அவற்றால்வரும் சன்னிபாத சுரங்களும் வாத சுரம், தசவாயுக்களின் கோளாறு, உளைவுகுத்து, கடுப்பு, முட்டு, குளிர் காய்ச்சல் இவைகளும் தீரும்.

173-176. (பொ-ரை):- பச்சைமஞ்சள் சாறு நாழி 2 எலுமிச்சம்பழச்சாறு நாழி 4 எள்ளெண்ணெய் நாழி 4 இவைகளை ஒரு பாண்டத்திற் சேர்த்து வைத்துக்கொண்டு காவிளாய் பெருமருந்து வாதமடக்கி. கொடுவேலி. அமுக்கரா நன்னாரி. மணத்தக்காளி. கண்டங்கத்தரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுரிகுன்றுமணி, பேய்மருட்டி, முதியார்கூந்தல், கீழ்காய்நெல்லி, ஆடாதோடை, குப்பைமேனி , வேம்பு, கொன்றை, அழிஞ்சில், கையாந்தகரை, முட்காவிளாய், அடம்பு, மல்லிகை, காட்டு மல்லிகை சாறணை, தவசிமுருங்கை , திராய், கம்பந்திராய் இவைகளைப் பொடிசெய்து 32 கொத்துத் தண்ணீர்விட்டு அவித்து 4 படியாக வற்றக்காய்ச்சி முன்கஷாயத்துடன் கலந்துகொண்டு சிறுகொதியிட்டுக்கொள்ளவும்.

கோட்டம், மஞ்சிட்டி, அதிமதுரம், மஞ்சள், ஏலரிசி, அகில், காரகில், சிற்றரத்தை, கடுகுரோகணி, மரமஞ்சல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் பூலாங்கிழங்கு, சுக்கு, மிளகு, திற்பலி, வெளுத்தற்பிசின் சதகுப்பை இலவங்கப்பட்டை, சவர்க்காரம், நற்சீரகம், கருஞ்சீரகம், இலவம்சின், கர்க்கடகசிங்கி வகை கழஞ்சு4. எடுத்து இடித்து அரித்து முன்கஷாயத்துடன் கலந்து சிறுதீயிலெரித்து 4 தினத்தின் பின் மெழுகுப்பதத்தில் வடித்துக்கொண்டு நோயாளியின் தலையில் வைத்து உடம்பிலும் பூசி, கண், காது, மூக்கு இவைகளில் மும்மூன்று துளிகள்விட்டு உள்ளுக்குங் கொடுத்து வாரம் இருமுறை முழுகி வரின், சகல சுரங்களும் பித்தரோகத்தாலாகிய களை முதலியனவும்நீங்கும்.

குறிப்பு :- திரு. ஐ. பொ. அவர்கள் பதிப்பித்து வெளிப்படுத்திய புத்தகத்தில், "தங்க ஏலாதி மாத்திரை" முதலிய சில முறைகள் "சேர்க்கப்பட்டவை" என்ற தலையங்கத்தின்கீழ் காணப்படுகின்றன. அவைகள் இந்நூலுக்குரியனவல்ல ஆதலால், இங்கு பதிபிக்காது விடுகின்றோம். இச் சுரரோகம் புத்தகரூபமாய் வெளியிடும்போது அவைகளை இறுதியிற்சேர்த்து வெளியிடுவோம்.

202. (பொ-ரை) சுரரோகத்திற் சொல்லிய பத்தியம் பரிகரிப்பு முதலியதற்கு மாறான உணவு, செய்கைகளால் மந்தமுண்டாகி சடாராக்கினி விஷமாக்கினியாகி சித்தப்பிரமையுடன் திடீரென மூர்ச்சையுண்டாகும். அன்றி அதிக தாகம், மார்பில் நோவு, வாய்புலமபல் ஆகிய குணங்களுந் தோன்றும். இது அவபத்தியத்தினாலுண்டாகிய தோஷம் என அறிக.

203. (பொ-ரை) சுரநோயினாற் பீடிக்கப்பட்டவர்கள் பெண்களுடன் இணைவிழைச்சுசெய்யின்அதனாலுண்டாயதோஷ குணத்தைச் சொல்லுகில்: நோய்க்கு இடமாகிய உடம்பு நோகும் நெஞ்சில் எரிவுகாணும், கண்கள் நிறம்மாறும்பட்டுச் சிவக்கும். பத்துடன் எழுந்தெழுந்துவீழும். கைகால் சில்லிட்டுக் குளிரும். தேகம் பதறும், மயக்கமுண்டாகுமென அறியவும்.

204. (பொ-ரை) சித்தப்பிரமை பிதற்றுதல் அதிக உஷ்ணமான காய்ச்சல்காய்தல் அதிதாகம,. வயிற்றெரிப்பு, அறிவுகேடு, அச்சத்துடன் துன்பமடைதல், வெயர்வை. அக்கினியைப்போல் உடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில் அழற்சியுறுதல், கிடைகொள்ளாது புரளுதல், வயிறூதல் ஆகிய உபத்திரவங்களுடன் நோயாளியின் நாடி நடையில் வாதம் க்ஷீணமடைந்து தோன்றும். இது மகா விஷதோஷமென அறிக.



206. (பொ-ரை):- வாகட நூல்களில் வல்ல அகத்தியர் முதலிய முனிவர்கள் விரித்துக்கூறிய மருத்துவ நூல்களின்படி கிருட்டின சிங்குவாத தோஷ குணத்தைச் சொல்லுகில் நோயாளியின் அடி நாக்கு வரண்டு முட்பாய்ந்து கருநிறங்கொண்டு புடைத்திருப்பதோடு. ஆவன் படுக்கையிற் கிடவாது அடிக்கடி எழுந்திருப்பான் உடம்பில் வெர்வையுடன் சொறிவுண்டாகும் மயக்கம். மேல் மூச்சு உழலை கண்டு மென்மையாகச் சுரங்காயும். கைகால் சோர்ந்து தேகம் கருமைகொள்ளும்.

207. (பொ-ரை):- ஆயுள்வேத முறையிற் சொல்லியபடி அதிகாரதோஷ குணத்தைக் கூறுவேன் கேட்பாயாக. நோயாளியின் தேகம் புறத்தே குளிர்ச்சியடைந்து உள்ளே அதிக வெப்ப மாயிருக்கும் கைகால் குளிர்ந்து விறைத்துப்போகும் வாயில் வந்தபடி புலம்பும் உவாந்தியெடுக்கும். இருமல்.விக்கல் மூச்சு முட்டுண்டாகி மிகுந்த உபத்திரவஞ் செய்யும், படுக்கையிற் கிடவாது தள்ளாடி யெழுந்து ஓடும் தயிர் போன்ற மலத்துடன் சீத இரத்தங்கலந்து அடிக்கடி வெளிவரும் நித்திரைவராது மிகவும் கொடியது. இது உயிருக்கு அபாயமுண்டாக்கும்.

208-212

உருத்திராக்கமணி, மான்கொம்பு, அதிமதுரம் போரத்தை திப்பிலி, கராம்பு, யானைக்கொம்பு, கோட்டம், எலுமிச்சம் வித்து, அக்காராகாரம் வகை கழ.1. கோரோசனை கழஞ்சு2. இவைகளைச் சூரணஞ்செய்து ஏழு புடமிட்டு செப்பில் (குப்பியில்) பத்திரப்படுத்தி தேன், கல்லக்காரம் இவற்றிற் குழைத்துண்ண எழுவகைத் தோஷங்களால் நாவிலுண்டாகும் முள், புண், வரட்சி, அவியல், நீர்க்கடுப்பு, உவாந்தி, விக்கல் இவைகளுடன் சுரமும் நீங்கும். மேற்கூறிய சரக்குகளுடன் தங்கம், வெள்ளி, பவளம், முத்து, கஸ்தூரி, குங்குமப்பூ, புனுகு, சுத்திச்செய்த லிங்கம் வகைக்கொரு கழஞ்சு சோத்து முன்போல் வறுக்காமல் முலைப்பால், செண்பகப்பூக் கஷாயம், பன்னீர் இவற்றில் வகைக்கொருசாமமரைத்து உழுந்துப் பிரமாணம் குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு நோய்களுக்கேற்ற அனுபானங்களிற் கொடுக்க சன்னி, தோஷம், உவாந்தி, நாக்குப்புண், முள்ளு, விக்கல், சுரம் முதலிய கொடிய நோய்கள் தீருமென முரகக்கடவுளின் அழகிய திருவடிகளைத் தினந்தோறும் பூஜை செய்யும் தருமகுணமுள்ள அகத்திய முனிவர் திருவாய் மலர்ந்தருளினார்.

**சுரரோக நிதானம் முற்றுப்பெற்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகத்தியர் வைத்திய காவியம் - 1500 இலிருந்து

அத்திசுரம்- எலும்பைப்பற்றிய சுரம் Chronic fever affecting the bones

மிகுவெப்பம்- Excessive heat

அளிசுரம்- A kind of fever

அத்திசூடு- Fever/ heat attacking the bones

உட்காய்ச்சல்- Internal Fever

உட்சுரம்- Internal Fever- Febris leipyrias

உட்டணம்-
உஷ்ணம் Heat, Temperature

உட்டணமேகம்- Venereal disease due to heat

உடல்வெக்கை- Bodily heat

கடுஞ்சுரம்- High Fever
கணைச்சுரம்- A disease of children, Tables mesenterea

குளிர்காய்ச்சல், குளிரோடு தோன்றும் காய்ச்சல்

Fever attended with chill- Shivering fever

சத்தி சுரம்- வாந்தியோடு கூடிய காய்ச்சல்

Fever with vomiting.

ஜயசுரம் சீரசுரம்- Shivering Fever

சுரக்கழிச்சல்- Diarrhoea with Fever

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரகாசம்- Asthma with Fever

சுரசன்னி தோடம் - சன்னியின் குறிகளைக் காட்டும் சுரம்.
(தோஷம்)

Typhus Fever exhibiting the symptoms of delirium

சுரமாந்தை- A kind of tuberculosis marked by excess of fever. Cough, Fatigue, Loss of appetite etc.

தாபசுரம் A kind of malarial fever

தினச்சரம், விடாச்சுரம். தினக்காய்ச்சல் Hectic fever occurring daily
திராத சுரம் -Incurable chronic fever

தோடசுரம். கொடியசுரம். Malignant fever due to morbific diathesis
விடக்காய்ச்சல் Fever due to some poisonous elements in the system

நடுக்கற்சுரம்- குளிர்சுரம் - Fever marked, by a chill, followed high fever and sweating ague

நெடுஞ்சுரம்- Long- continued fever, chronic fever

பழுபாகச்சுரம்- A kind of Fever

பலசுரம்- Fever

பித்த சுரம்-ஒரு வகை கொடூரமான சுரம்- Fever caused by bile humour due to excitement

பித்தசிலேற்பனசுரம் - பித்த கிலேட்டும சுரம்-
Fever caused by the combination of bile and phlegm humours

மந்தசுரம்- செரியாமையினால் உண்டாகும் ஓர் வகைக்காய்ச்சல்
Fever due to indigestion common in children.

மாறல்சுரம்- Fever due to change of climate, Acclimation Fever

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தோடசுரம்- வாத பித்த சிலேட்டும கோளாறினால் ஏற்படும் சுரம் Fever brought about by the disturbance of the three humours in the system.

முறைக்காய்ச்சல்-விட்டுவிட்டு முறைப்படி வரும் காய்ச்சல் Fever coming in succession, or by turns, Intermittent fever

வாதசுரம்- உடல்கறுத்து சற்று பொருத்துகளையும் கீழ்முதுகு வில்லை நொந்து குளிர் நடுக்கம்செய்யும் சுரம் - Dengue
விடசுரம்- A kind of malarial fever

விடபாகசுரம்- ஒருவகைக் காய்ச்சல், வாய்வு உடலில் ஏறி விடம்போல் வீங்கி கொல்லும் ஒரு நோய் - A disease causing anasare and paleness and fever.

நன்றி : தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரராச சேகரம்
# நான்காவது சுரரோக நிதானம்

## பா வைப்புமுறை

| முதற்குறிப்பு | 'வைத்தியன்' | பொன்னையா |
|---|---|---|
| திருவுறுகைலை | 01 | 01 |
| என்றார்தோஷ | 02 | 02 |
| பண்டுளமலத் | 03 | 03 |
| கடுவெயில் | 04 | 04 |
| ஈங்கெழுகோபத் | 05 | 05 |
| வாதமடாதே | 06 | 06 |
| மந்தம் வராதே | 07 | 07 |
| சீரணமன்றிச் | 08 | 08 |
| அபத்தியமன்றிச் | 09 | 09 |
| தக்கவாதம்கோபித் | 10 | 10 |
| உரத்தபித்தம் | 11 | 11 |
| தகைகூர்சிலேற் | 12 | 12 |
| ஆகுமிச்சுரந் | 13 | 13 |
| தானமாம் வாத | 14 | 14 |
| என்றிடுபித்த | 15 | 15 |
| வாதசுரத் | 16 | 16 |
| காலெலாமுளைவு | 17 | 17 |
| குளிர்ந்துநடுங் | 18 | 18 |
| வாதபித்தசுர | 19 | 19 |
| சோம்பொடுதிமிரு | 20 | 20 |
| சீதமிகுத்த வாத | 21 | 21 |
| தாகமுமோக | 22 | 23 |
| அத்தியிலூதை | 23 | 22 |
| மீறிடும்சுரமென் | 24 | 24 |
| வாதத்திற் | 25 | 25 |
| பொருமியே | 26 | 26 |
| அக்கினிமந்த | 27 | 27 |
| பொருமலுமிளை | 28 | 28 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பசியின்றி | 29 | 29 |
| உடம்புத | 30 | 30 |
| ஊதையுங்கபமு | 31 | 31 |
| சிரமிடிக்கும் | 32 | 32 |
| பூதசுரத்தின் | 33 | 33 |
| பிரேதசுரத்தி | 34 | 34 |
| கதித்திடுஞ்சுர | 35 | 35 |
| குரலடைத்திருமல் | 36 | 36 |
| தாகமுந்தாப | 37 | 37 |
| பாறிடுவிஷங்களாலும் | 38 | 38 |
| தொடுத்திடு மூன்றா நா | | 39 |
| பித்தசுரத்தின்குணம்கேளீர் | 39 | 40 |
| கொடிதாயுள்ளம் | 40 | 41 |
| அந்தப்பித்த | 41 | 42 |
| பித்தசேற்பன | 44 | 43 |
| பிறங் கை கால் | 45 | 44 |
| சேர்ந்திடும்பித்த | 46 | 45 |
| நாவதுதுவர்க்கும் | 47 | 46 |
| விடமாஞ்சுர | 48 | 47 |
| பித்தமோகித்து | 49 | 48 |
| காந்திருமுகமும் | 50 | 49 |
| சாமத்தில்நாவுலரும் | 51 | 50 |
| கொதித்தெழுஞ் | 52 | 51 |
| ஒன்றைவிட்டொருநா | 53 | 52 |
| கொண்டதோர்சன்னி | 54 | 53 |
| சேர்ந்திடும்பித்த | 55 | 54 |
| காசமும்வெப்புமுண்டாய் | 56 | 55 |
| முகந்துறுகுளிரும் | 57 | 56 |
| மத்தமேகொண்டு | 58 | 57 |
| சுரமுடனிருமல் | 59 | 58 |
| வாந்தியும்சுரமும் | 60 | 59 |
| எரிந்திடும்கையும் | 61 | 60 |
| நெஞ்சமேலுடம்பு | 62 | 61 |
| சுரத்தினி | 63 | 62 |
| அனலெனச்சுரமும் | 64 | 63 |
| கரித்திடும் | 65 | 64 |
| துடியென இடிக்கும் | 66 | 65 |
| சுரத்திடைஅதரம் | 67 | 66 |
| ஒருபுறங்குளி | 68 | 67 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தாகமும் பிரமை | 69 | 68 |
| அகங்கைகால் | 70 | 69 |
| வெய்யசுரந்தனில் | 71 | 80 |
| இக்குணங்களுண்டாகி | 72 | 83 |
| வெதும்புசுர | 73 | 84 |
| காய்ந்து காய்ந்துவயி | 74 | 74 |
| காய்ந்து காய்ந்தத்தியுறு | 75 | 85 |
| சுரத்திற்சேற்ப | 76 | 87 |
| பிரமைதாகமு | 77 | 88 |
| உடல்சேர் சன்னி | 78 | 89 |
| உண்டடேகழிச்சல் | 79 | 90 |
| மேலேசேற்ப | 80 | 91 |
| வெப்பொடு | 81 | 70 |
| தலையை மிகவும் | 82 | 71 |
| இருமலும் கூதலும் | 83 | 72 |
| பொருதடதுதொறு | 84 | 73 |
| காயங்காயும் | 85 | 86 |
| காலொடுவயிறெரிந்து | 86 | 93 |
| நடுக்கமுண்டாவ | 87 | 94 |
| நடுங்கிப்பித | 88 | 96 |
| குளிர்ந்தே அ | 89 | 95 |
| நெற்றியும் கழுத்தும | 90 | 97 |
| நலம்பெறுஞ்சிர | 91 | 98 |
| கண்ணொடு செ | 92 | 92 |
| தாபமழத்தி | 93 | 99 |
| பற்றுபலசுரமும் | 94 | 101 |
| அரியசுரம்வருமுன் | 95 | 102 |
| வாதமொடுபித்த | 96 | 103 |
| கண்டுசுரம் வந்ததினம் | 97 | 104 |
| குணமும் குறியும் | 98 | 105 |
| கல்லாப்பிராண | 99 | 106 |
| பொருண் மோகித்து | 100 | 107 |
| மந்திரமருந்து | 101 | 100 |
| சுரந்தோற்றிற் | 102 | 108 |
| கூவிளை நெற்பொரி | 103 | 109 |
| துய்யமாதளம் | 104 | 110 |
| வில்வவேர் சிற்ற மட்டி | 105 | 111 |
| முத்தற்காசு கராம்பு | 106 | 112 |
| நல்ல சந்தன | 107 | 113 |
| ஆடாதோடைபேய் | 108 | 117 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கண்டங்காலி | 109 | 118 |
| நறைசேர் குழலா | 110 | 119 |
| இப்பொனார் தம்மினாணை | 111 | 120 |
| ஆடாதோடை நன்னாரி | 112 | 121 |
| நொச்சியிலை யுடளாடா | 113 | |
| திப்பிலிகோட்டம் | 114 | 123 |
| ஆடாதோடை | 115 | |
| காரை வென்ற | 116 | |
| கடுக்காய் சீந்தில் | 117 | |
| நெல்லி தான்றி | 118 | |
| சீந்திற்றண்டு சிவதை | 119 | |
| செஞ்சொட்டி | 120 | 114 |
| முக்கடுகு | 121 | 115 |
| சீந்தில் வேப் | 122 | 116 |
| வெட்பாலை யரிசி | 123 | 129 |
| கடுகு நொச்சி | 124 | 130 |
| கண்டங்காலி மரமஞ்சள் | 125 | 131 |
| கோட்டஞ் சுக்கு மரமஞசள் | 126 | 132 |
| கருவேம்பு துளசி புளி | 127 | 133 |
| காக்கட்டான் வேர் | 128 | 134 |
| சொல்லுஞ்சிறிய | 129 | 135 |
| முத்தற்காசு வேர்க் | 130 | 136 |
| வாசமிகுந்த வசுவாசி | 131 | 139 |
| கூட்டுநாகம் | 132 | 140 |
| களஞ்சிரண்டு | 133 | 141 |
| செப்பரிய | 134 | 146 |
| கெந்தந்திற்பலி | 135 | 147 |
| முக்கடுகு முப்பலை | 136 | 148 |
| கெவுரி துத்த மரிதாரங் | 137 | 149 |
| தாராரும் | 138 | 150 |
| சந்தினொடு கோம் | 139 | 151 |
| முத்தமிருவேலி | 140 | 152 |
| இட்டமுறுமேல | 141 | 153 |
| கோரோசனையே | 142 | 154 |
| வாங்காய் மதுர | 143 | 155 |
| கொள்ளாய் முத் | 144 | 156 |
| நிறுத்தேதருப்பஞ் | 145 | 157 |
| மேதிச்சானி | 146 | 158 |
| பொன்னாரிதா | 147 | 159 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இரசங்கெந்தக | 148 | 160 |
| தாரங்கெந்தி | 149 | 161 |
| துத்தறிந்துசொ | 150 | 162 |
| சீதசுராங்குசம் | 151 | 163 |
| அரிதாரமிலிங் | 152 | 164 |
| எலிமருந்தொன்றே முக்கா | 153 | 165 |
| எலிமருந்தொன்று வாள | 154 | 166 |
| ஆறதாகுமெலிமருந்து | 155 | 167 |
| காயம் பொன்னரி | 156 | 168 |
| எருக்கலையின் | 157 | 169 |
| பெருமருந்து கிலு | 158 | 170 |
| மதுரமிகு சாதிக்காய் | 159 | 171 |
| அனலிட்டநாலாம் | 160 | 172 |
| பசுமஞ்சட்சாற | 161 | 173 |
| ஏயசெருப்படி | 162 | 174 |
| வடித்துமுன்னை | 163 | 175 |
| ஆகுமிந்தச்சர | 164 | 176 |
| உரைக்குமேலமிலவங்க | | 177 |
| மேவுநற்சீரகமுடவேன | | 178 |
| பலமேயுறுநீர் | | 179 |
| ஆமெநடுக்குஞ்சன்னி | | 180 |
| தகைசேர்வில்வம் | | 181 |
| கூரியவேலெறிந்த | | 182 |
| பச்சைக்கர்ப்பூர | | 183 |
| சீர்தருதிப்பிலி | | 184 |
| நன்னாரி தூதுவளை | | 185 |
| இருமல்கசஞ் | | 186 |
| ஏலமிலவங்கமொடு | | 187 |
| அருந்தமிழ் | | 188 |
| நல்லகோச் | | 189 |
| தப்பறு | | 190 |
| ஏலனற் | | 191 |
| கொள்ளுசா | | 192 |
| ஆட்டிப்பின் | | 193 |
| குன்றிபோ | | 194 |
| போகுநற் | | 195 |
| வெருகம் | | 196 |
| வேர்நன் | | 197 |
| நாலொன்று | | 198 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சிற்றமட்டி | | 199 |
| சீனத்தின் | | 200 |
| சுரத்தினில்மந்த | 165 | 201 |
| சுரமுற்றோர் | 166 | 202 |
| பிரமையுறு | 167 | 203 |
| மதித்திட்ட | 168 | 204 |
| சுரங்காயும் | 169 | 205 |
| உண்மை பெறு | 170 | 206 |
| விதிமருவ | 171 | 207 |
| உருத்திர | 172 | 208 |
| எழுமுறை | 173 | 209 |
| நாக்கினில் | 174 | 210 |
| வகைக்கொரு | 175 | 211 |
| சொற்றவிக் | 176 | 212 |


~ முற்றும் ~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறநூல்களுடன் ஒப்பீடு

பரராசசேகரம் நூறு பாடல்களில் சுரம் பற்றி வருணிக்கிறது. சுரம்தோன்றக் காரணங்கள் 7 பாடல்களில் தரப்பட்டுள்ளன. வாதபித்த சிலேற்பனங்கள் கொதித்தால் தோன்றும் குணங்கள, அவற்றின் 64 வகைகள் எளிதில் மாறக்கூடியவை, மாறுவது கடினமானவை என வகுத்துகூறப்பட்டுள்ளன. (பா13-99) வைத்தியனின் நம்பிக்கைகள்,அவன் கவனிக்கவேண்டியவைகள் நோய்நிதானம், தொடங்கமுன் நிலை, தொடங்கிய பின் கொள்ளும் வடிவம், உணவுச்செமிபாடு,. உடலில் வெவ்வேறு பகுதிகளைப் பாதிக்கும் முறை, நாடிவேறுபாடு, தொடங்கிய நாள் நட்சத்திரம் முதலிய காலநிலை இத்தனை நாட்களில் மாறும் என்ற தவணை, உடல் நிலைக்கு ஏற்ற மருந்து, அளவு நோயாளியைப் பராமரிக்கும் முறை ஏற்ற மருந்துகள் பத்தியம் ஆகியவற்றில் பூரண அறிவும் அனுபவமும் வாய்ந்தவனே உண்மையான வைத்தியன். நல்லவைத்தியனிடம் இருக்ககூடாத குணங்களை ஒரு செய்யுள் தருகிறது. அவன்யமதூதன், அவன் கொடுக்கும் மருந்து யமபுரத்துக்கு இழுத்து செல்லும் பாசக் கயிறு எனக்கடும் சொற்களில் கண்டிக்கிறது (பா100-107) இக்காலத்தில் மருத்தவ அறக்கோட்பாடு பற்றிய மகாநாடுகள் மேற்குஉலகில் நடைபெறுகின்றன வெவ்வேறு நாடுகளில் நிலவிவரும் மருத்துவ மரபுகளில் அறக்கோட்பாடுகள் எவ்வாறு வற்புறுத்தப்படுகின்றன என்பதை கண்டறிவதால் மேனாட்டு மருத்துவமுறையில் புகுந்துள்ள அறமற்ற போக்குகள் திருத்தப்படலாம் என்ற நம்பிக்கையுடன் நல்லோர் செயற்படுகின்றனர். சுவீடன் நாட்டு லிங்கோபிங் நகரத்தில் ஆகஸ்டு 1999ல் நிகழ்ந்த மகாநாடு குறிப்பிடதக்கது. நம் மருத்துவர்கள் கடைப்பிடித்த கடுமையான அற விதிகளைத் தொகுத்து எழுதுவது நம்மவருக்குத்தம் மரபின் உயர் அற நிலையைநினைவூட்டுவதுடன் உலக மருத்துவர்களுக்கும் பயன்படும்.

சுரவகைகளுக்கு ஏற்ற சிகிச்சை முறைகள்,மருந்துகள், குடிநீர், எண்ணெய் வகைகள் செய்யும் முறைகள் 68 பாக்களில் (108-176) விரித்துரைக்கபடுகின்றன.

சில சரக்கு சுத்திசெய்யும் முறை தரப்படுகின்றது. ஆனால் பல தரப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பாசிரியர் சேர்க்கப்பட்டவை என அரிய மருந்துகள் செய்யும் முறையைத்தருகிறார். தங்கஏலாதி, இரத்தின பூபதி, பிராணசஞ்சீவி, சில எண்ணெய்கள், சுரம் மறுகலிடக்கூடிய சந்தர்ப்பங்களை ஏழுவகையாக பிரித்து எச்சரிக்கை செய்கிறது நூலின் இறுதிப் பகுதி.

உரையாசிரியர் வி.கனகசபையவர்கள் சான்றாக இடையிடையே பிறநூலாசிரியர் எனக்குறிப்பிடுகிறார். மாதவ நிதானம் போன்றவற்றைக் குறித்தும் உள்ளார்.

அவ்வழியில் **அஷ்டாங்க ஹ்ருதயம்** நிதானஸ்தானம் 2ம் அத்தியாயத்தில் சுரங்களின் வகைதரப்பட்டுள்ளது. (ஜ்வரநிதானம்388-403) அதில்வியாதிப் பொதுக்காரணம் பஞ்சலட்சணம், ரூபம், உபசயம், அநுபசயம், ஸம்ப்ராப்தி வியாதிப்பொதுக்காரணம், தோஷபிரகோபகாரணம் தோஷத்வந்தவ (தொந்த) - சந்நிபாதப் பிரகோபகாரணம் முதலிய தலைப்புகளில் சுரம்பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது.

**மாதவநிதானம்** ரோகவிநிச்சயம் சுரநிதானத்தை 9-29 ல் கூறுகிறது. சுரத்தின்காரணங்ள் சம்ராப்தி, சாமானிய இலட்சணம், விசேஷபூர்வரூபம், வாத பித்த சிலேஷ்மசுரங்கள், இவை மாறிச் சேர்வதால் உண்டாகும் வாத-பித்த, வாத-கப, பித்த-கப, சுரங்கள், சந்நிபாதசுரத்தில் அசாத்தியநிலைகள் உபத்திரவங்கள் காலஎல்லை அபிநியாசசுரம், ஆகந்துக சுரங்கள் விஷமசுரங்கள. சந்தத அந்யேதியுஷ்க திருதீயக, சதுர்த்தக, விஷம், பூத சுரங்கள் என்று விரித்துக்கூறுகின்றது திருதீயக, சுரத்தில் உட்பிரிவு 3உம் சதுர்த்தசுரத்தில் 2உம் காட்டபடுகின்றன... சரங்கள் சப்த தாதுக்களைப் பற்றும் விதம் கூறப்படுகிறது இறதியில் சுரம் விடுவதன் குறிகள் அது மாறிவிட்டகுறிகள் காட்டப்படுகின்றன.

உரையாசிரியர் பிறநூலார் என்று சுட்டும் மற்றொரு நூல் அநுபவவைத்தியதேவரகசியம,* **(The Hindu Pharmacopoeia)** ஜெ. சீதாராம் உபாத்தியாயர் சென்னை 1926). 3 காண்டங்களுள்ள அப் பெருநூலில் முதற்காண்டம் இரண்டாம் வர்க்கம் சுரநிதானம் என்ற பெயர் பெறும். ரோகங்கள் உண்டாகக் காரணங்கள் 14 பிரிவுகளில் தருகிறதுத சுரநிதானம் மேலே மாதநிதானத்திற் போல அமைந்துள்ளது சந்நிபாதசுரங்களை 13 வகைப்படுத்தி. சாத்தியம் அசாத்தியம் சுகசாத்தியம. கஷ்டசாத்தியம் கஷ்டத்தில் கஷ்டம். என்றெல்லாம். வகைப்படுத்துகிறது. ஒவ்வொன்றுக்கும் இத்தனை நாள் தவணை என அட்டவணைப்படுத்துகிறது. பெண்களுக்கு வரும் சன்னிகளை சூதக, கர்ப்ப. பிரசவ விரணசன்னிகள் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வகையாகத்தருகிறது. மேலும் உப்பிரிவுகள் தோஷபேதங்களை ஏழுவகையாகத்தருகிறது ஆகந்துக (இடையிட்டுவந்த) சுரம், அபிசார சாப அபிசாரசுரங்கள் என மூவகைப்படுகின்றன. விஷமசுரம் இரஸதாதுகத ரத்ததாதுகத மாமிசதாதுகத மேதோதாது கத சுருமதாது கத, சுரங்கள் என எட்டாக வகுக்கப்படுகின்றன. சாத்திய சுரலட்சனம், விட்டசுரலட்சணம் தனியே தரப்பட்டுள்ளது. அமானுஷ்ய காரணங்களால் ஏற்படும் சரங்களை சாத்திய சுரலட்சணம், வட்டசுரலட்சணம் தனியே தரப்பட்டுள்ளது. ஆமசூானுஷ் யகாரணங்களால் ஏற்படும் சுரங்களை தெய்வபிரகோப, கந்கர்வ, தாந்திரிக சுரங்கள் எனமூன்றாகக்குகிறது. மேலும் சுரங்கள் மூர்ச்சை, பிரலாப, சீத வியர்வை, கிருமி, அமித்திர உதய, மத்தியான மாலை. நிசி, சோஷை, தாப, விரண, ஆதப, ஏப்ப, வாந்தி, கொட்டாவி சுரங்கள் என வகுக்கிறது. ஆகந்துகசரங்கள் மேலும் விளக்குகிறது.

அபிஷங்கசுரங்கள் பூதாவேச அவுஷதகந்தக. விஷ. சுரங்கள் என்றும். கோபம். பயம். துக்கம். காமம் ஆகிய உணர்ச்கிகள் எல்லை மீறிப்போவதால் ஏற்படும் சுரங்கன் என்றும் விரித்துரைக்கப்படுகின்றன. தின சுரங்கள் சந்தத, சதத, துவியாசீக. திரியாசீக. சதுர்த்திக சுரங்கள் என வகுக்கப்படுகின்றன. மேலும் உடல். மனம். ஆகியவற்றைப்பாதிப்பவை. உள். வெளி. பிராகிருத. வைகிருத. சாத்திய, அசாத்திய, சுரங்கள் போன்ற பிரிவுகள் 13 தரப்படுகின்றன. இந்நூலாசிரியர் பல்வேறு வடமொழி நூல்களிற் கண்டதைத்தொகுத்தும் விரித்தும் கூறியுள்ளது வேறு தமிழ் நூல்களில் இல்லாதது. கிடைக்கும் நூல்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது பரராசசேகரம் வடமொழிநூல்களின் சாரமாகத்தமிழ்ப்புலமை மிக்கோரால் ஆக்கப்பட்டது என்றே கூறத்தோன்றுகின்றது.

அடிக்குறிப்பு :

எமது வட இலங்கைச் சுதேசவைத்திய சபை அங்கத்தவரும் 1925ல் சென்னையில் ஆயுர்வேதக்கல்விகற்ற பட்டதாரியுமான **Dr.** ஜேம்ஸ் நிக்கலஸ் அவர்கள் தமது முன்னோர் சங்கானை, சில்லாலைத் தொடர்புடைய பரம்பரை வைத்தியர்கள் என்றும், பரராசசேகரம் எழுதிய காலத்தில் காஞ்சிபுரத்திலிருந்து ஏடுகள் வருவித்து வைத்தியர்களிடம் பிரதி செய்யக் கொடுக்கப்பட்டன என்றும் தம் முன்னோர் மகப்பேற்று மருத்துவ ஏடுகளை எழுதினர் என்றும் பகலில் அரசனுக்கு ஏடு எழுதி இரவில் தம் சொந்தத் தேவைக்குப் பிரதி செய்தனர் என்றும் கூறுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு இடங்களில் கண், வாதம், பைத்தியம் ஆகிய நோய்களுக்கு விசேட நிபுணர்கள் இருக்கக் காரணம் இப்படி ஏடுகள் எழுதிய பரம்பரை தமக்குக் கிடைத்தவற்றை அநுபவரீதியாக வளர்த்துக் கொண்டதாயிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Pararājasekharam – Jvararoga Nidhānam (Diagnosis of fever) Synopsis**

**Pararājasekharam**, the magnum opus, of the medical treatises of the Medieval Jaffna Kingdom, consisted of 12000 verses, divided into16 sections. Jvara Roga Nidhānam forms the Fourth section consisting of 212 verses. It describes the diagnosis of fever ( curam = jvara ), inquiry into its causes, the course it takes, the several divisions and subdivisions of fever caused by the three humours (Tri-dosha).

The usual invocation to Lord Ganesha, includes summary of tradition that Siva is the originator of Āyurveda, which he revealed to the rishis for the sake of suffering humanity. Diseases are the results of wrong actions or Karma of the souls.

The causes of fever are: constipation, cold, irregular diet, excessive sexual passion, sleeplessness, exhaustive exertions like walking, exposure to sun and rain, oil-bath without proper removal of oil from the head, blows with heavy sticks, uncontrolled anger, heat of the morning sun, etc. The results of the rise in the level of three doshas are

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

described. The symptoms of Vāta, Pitta and Kapha increase are tabulated in three verses.

The following table shows the classification of the 64 types of fever :-

| Vāta 20 | | Pitta 24 | | Sleshma 20 | |
|---|---|---|---|---|---|
| Curable | Difficult to cure | Curable | Difficult | Curable | Difficult |
| 12 | 8 | 10 | 14 | 10 | 10 |

Fevers connected with different parts of the body are described :

1) Brain Fever (due to Pitta , difficult)
2) Fever associated with skin (Sleshma + Pitta)
3) Fever associated with flesh (due to Vāta)
4) ,, ,, ,, ,, (Visha (toxins))
5) ,, ,, ,, blood
6) ,, ,, ,, the bone
7) ,, ,, ,, semen.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eight verses describe the qualities of a good physician – the rigorous ethical and academic standards that are used to measure his value as a physician.

Treatment is elaborated 48 verses. Pre-medication rules include abstinence from food, light porridge, vomit and purgative. Mostly decoction formulas are given for each type of fever. Medicines, chiefly pills are prescribed for general treatment. The herbs and minerals used, the way to treat them for removing their toxic effects are described.

The effects of transgressing the rules of medication, what happens if food rules are not observed ( apatya dosha) are explained. The compiler has added an appendix of formulas for some rare pills like Elāti with gold, Ratna bûpati,etc.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GANGAI
COMPUTER PRINT
(Near Brown Road) Navalar Road, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| முற்கால அளவு | | நவீன அளவு |
|---|---|---|
| 1 குன்றி (குண்டுமணி) | — | 130 மி. கிராம் |
| 1 வராகன்எடை | — | 4 . 2 கிராம் |
| 1 கழஞ்சு | — | 5 · 1 கிராம் |
| 1 பலம் | — | 35 கிராம் |
| 1 சேர் | — | 280 கிராம் |
| 1 வீசை | — | 1 · 4 கிராம் |
| 1 ஆழாக்கு | — | 168 மி. லீற்றர் |
| 1 உழக்கு | — | 336 மி. லீற்றர் |
| 1 உரி | — | 672 மி. லீற்றர் |
| 1 நாழி (படி) | — | 1 · 3 லீற்றர் |
| 1 குறுணி (மரக்கால்) | — | 5 . 3 லீற்றர் |
| 1 பதக்கு | — | 10 . 7 லீற்றர் |
| 1 கலம் | — | 64 · 5 லீற்றர் |
| 1 சாமம் | — | 3 மணி |
| 1 மண்டலம் | — | 48 நாள் |
| வெருகு அடி அளவு | — | பூனையின் காலடி அளவு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"There is no end to the learning of Ayurveda. Hence you should carefully and constantly devote yourself to it. You should increase your skill by learning from other without jealousy. The wise regard the whole world as their teacher, whereas the ignorant consider it to be their enemy".

**Charaka**

"Ayurveda is an eternal system that has already integrated eight limbs of healing within itself, from herbs to psychology. As such it offers such a point of unification. Its very basis is the spiritual knowledge of the ancient seers of India and the cosmic consciousness in which they lived".

**Dr. David Frawley**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org